Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 20 ரூபா 13/50
දිනමුරසු වාරමලර් டிச.23-29, 2001

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 439

## பிரதமரின் முதல் முயற்சி புலிகள் கொடுத்த சமிக்ஞை!

## அமைச்சரவை குழறுபடிகள்



# ஆன்மீகம்

## ஆத்ம உணர்வில் நிலைத்திருத்தல்



ஆத்ம உணர்வில் நிலைத்திருந்து சிவதந்தையின் ஞானமென்னும் அஸ்திவாரத்தை அதாவது நம்பிக்கையை எவ்வளவு தூரம் உறுதி ஆக்குகின்றீர்களோ அவ்வளவுக்கு உங்களது நிலை, தளராத உறுதியான அதாவது ஒரே தன்மையுடையதாக இருக்கும். மேலும் இந்த வீணான எண்ணமற்ற மற்றும் உறுதியான எண்ணம் மூலமே தாங்கள் தங்களது கடைசிக் குறிக்கோளை அதாவது ஆத்மா, தனது உண்மையான சொரூபத்தில் நிலைத்திருக்கும் நிலையை அடைய முடியும். இன்று எந்த ஒரு மனிதன் இறைவனை அன்றிமற்றவனின் உதவியை நாடுகின்றானோ அவனே உறுதி குலையும் நிலைக்கு உள்ளாகிறான். அவனது மனம் தூய்மை மற்றும் மரியாதையில் இருந்தும் அசைகின்றது. அவன் எந்தத் தேகத்தின்மீது அகந்தை வைத்திருக்கின்றனரோ அந்தத் தேகம் நிலையற்றது. அழியக் கூடியது, மேலும் மாறுதலுக்குட்பட்டது. எந்தரசனைக்குப் பின்னாலே அவன் அலைகின்றானோ அந்த ரசனையும் சொற்ப காலத்திற்கானது. அவ்வாறு இருக்கையில் அவனால் எவ்வாறு ஒரே ரசனையில், ஒரே நிலையில் நிலைத்திருக்க முடியும்? எப்பொழுதும் ஒரே நிலையில் மாறாதிருப்பவர் ஒரே ஒரு சிவபரமாத்மாதான். மேலும் அவரின் நினைவில் (யோகம்) உறுதியாக நிலைத்து, ஒரே தொடர்பில் இடைவிடாது அமர்வதே ஒரே ரசனை' நிலையினை அடைவதற்கான அனைத்திலும் உயர்ந்த ஆத்ம உணர்வாகின்றது. இதை இராஜயோகம்' என்று குறிப்பிடுவார்கள்.

ஓம் சாந்தி

தகவல்: கல்முனை பி.கு.விக்கி.

## நோன்பின் மாண்பும் ரமழானின் சிறப்பும்

"ரமழான் மாதம் வந்துவிடின் சுவனபதியின் வாசல்கள் திறக்கப்பட்டு விடுகின்றன. நரகத்தின் வாசல்கள் அடைக்கப்பட்டு விடுகின்றன. ஷைத்தான்களுக்கெல்லாம் விலங்கிடப்பட்டு விடுகிறது என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்."

மேலும் இறைத்தூதர் நபி (ஸல்) அவர்கள் "ரையான் என்று கூறப்படும் ஒரு தலைவாசல் சுவனபதியில் இருக்கின்றது. நோன்பாளியைத் தவிர்த்து வேறு எவரும் அதன் வழியாகச் சுவனபதியில் நுழையமாட்டார்கள். அவர்கள் அதனுள் நுழைந்ததும் அது அடைக்கப்பட்டுவிடும். பின்னர் அதன்வழியே எவரும் செல்லமாட்டார்கள்" என்று கூறினார்கள்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். "நோன்பு ஒரு கேடயம் ஆகும். நோன்பு நோற்றவர் துர்வார்த்தைகள் பேசவேண்டாம். உரக்க சத்தமிட்டும் பேச வேண்டாம். அவருடன் எவராவது சண்டையிட்டால் அல்லது அவரை ஏசினால் "நான் நோன்பாளி" என்று இருமுறை கூறட்டும். எவனது கையில் எனது ஆத்மா இருக்கின்றதோ அந்த அல்லாஹ்வின்மீது சத்தியமாக! நோன்பு நோற்றவரின் வாயிலிருந்து வீசும் வாடை அல்லாஹ்விடத்தில் கஸ்தூரியின் நறுமணத்தை விட சிறந்ததாகும்."

ஆதாரம்:-முஸ்லிம் புஹாரி, திர்மிதி

தகவல்: ஒ.ஸப்றன் ஜெலீலா-தம்பாளை.

## கிறிஸ்துவின் பிறப்பினை அர்த்தமுள்ளதாக்குவோம்

உலக நாடுகளில் வறுமையில் வாழும் சிறுவர்களுக்கு கிறிஸ்மஸ் தாத்தா பல வித பரிசுப்பொருட்கள் வழங்கி மகிழ்விப்பதையும் காணலாம்.

எம் பரம தந்தை பரிசுத்த ஆவியின் வல்லமையுடன் கண்ணிமை நிறைந்த எம் தேவ அன்னையாம் மரியாள் அவள் மூலம் உலக மக்களின் பாவங்களை போக்க எமக்குத் தந்த பாலகன்தான் இயேசு. அவரின் பிறப்பினை கொண்டாட நாம் ஒவ்வொருவரும் பகைமையை மறந்து, மன்னித்து எம் உள்ளங்களை முதலில் தூய்மைபடுத்துவோம். அன்றேல் அவரின் பிறப்பு அர்த்தமற்றதாவதோடு அவரின் பிறப்பினை மாசு படுத்துபவர்களாகவும் ஆவோம்.

இம்முறை எம் நாட்டு மக்கள் அனைவரும் பகைமை மறந்து சமாதானத்தின் அரசர் இயேசுவின் பிறப்பினை கொண்டாட ஆயத்தமாவதோடு எம் நாட்டின் சமாதானத்திற்காக அவரிடம் நிறைவாகவும் உருக்கமாகவும் கெஞ்சி மன்றாடுவோம்.

ஜோசப் அருள்சாமி-திகணை.

## கவிதைப் போட்டி இல.439



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 29.12.2001

கவிதைப் போட்டி இல.439
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

## கவிதைப் போட்டி இல.436

பரிசுக்குரிய கவிதை

இடம் உள்ள வரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்

### நம்பிக்கை

நம் நிலை இது வென்று
கதி கலங்கி நின்றால்...
உடைந்து போவது
சுவர்கள் மட்டுமல்ல
உள்ளத்து உறுதியும் தான்.
விதியெல்லாம் வெறும் பேச்சென்று...
சதியெல்லாம் முறியடித்து..
சரித்திரம் சொ(வெ)ல்ல புறப்படு
கண்ணே!

எஸ்.பாமரன்-கண்டி.



### இருண்டுவிட்டது...

இல்லமோ இடிந்துவிட்டது...
இன்னலோ பெருகிவிட்டது...
கனவோ கலைந்துவிட்டது..
வாழ்வோ இருண்டுவிட்டது...

ப.விநாயகமூர்த்தி- மஸ்கெலியா.

### கடைசி அழிவ...!

என் கவலையெல்லாம்
இந்த குடியிருந்த வீட்டைப்
பற்றியதல்ல-நாளை
ஆட்சியில் அமரப்போகும்
அரசைப் பற்றியும் அல்ல.
இந்த அவலம் என்னோடு
அழிய வேண்டும் என்பதுதான்.

முக்கன் விஜயதீபம்-பசறை.

### வாக்கும் வன்முறையும்!

உதவுவார்
உபத்திரம் பெறுவார்-அன்று
உயிரையே கொடுத்தாயினும்
உதவாக் கரையா(க்)குவார்-இன்று;
எனக்குப் புரிந்திட்டது
எல்லாம் வெறும் உபாயம் என...

லைலா அக்ஷியா அக்ரம்-குருணாகல்.

### இழந்தவை!

அற்றைத் திங்கள் அவ் வெண் நிலவில்
எந்தையும் தாயும் நானிழந்தேன்;
இற்றைத் திங்கள் இவ் வெண் நிலவில்
நீறழிந்த நெற்றிபோல் வீடிழந்தேன்;

கவிஞர் 'திக்வேயல்'-மட்டக்களப்பு.

### வே(ா)ட்டு!

நாதியற்று நடுத்தெருவில்
நாமிருக்க, நாக்குத் தொங்க
நம்மவர் கேட்பதோ...
நமக்கே உங்கள் வோட்டு

ஆர்.யோகப்பிரியன்-வவுனியா.

### உறுதி

குண்டு வீச்சினால்-என்
இல்லம் சிதைந்தாலும்
உள்ளம் சிதையவில்லை-நான்
செல்வேன் பள்ளிக்கு
கல்வியைத் தொடர்வதற்கே!

அ.சந்தியாகோ-கண்டி.

### பேரிடி

மனப்பால் குடிக்காதேயென
பலரன்று கூறியது பொய்த்தது
மனையில் இனிதே வாழ்ந்தோம்
இன்றோ சரிந்தது கற்களல்ல
நாம் கட்டிய மனக்கோட்டை!

ச.ஜெகதிஸ்வரன்-நாவலப்பிட்டி.

### விடை காண

நாதியற்றுக்
கிடந்த உன்னையும்
தலைவர்கள் நாடிவரும்
தேர்தல் காலம்
தானம்மா இது
பின் ஏனிந்த
தலையிடி!

துரைராஜா பரிமளாதேவி-கலஹா.

### வக்கிரமம்

பசுமையினை தனதாக்கி
பண்புடன் விளங்கிய-இடம்
இன்று!
பரிதாப நிலைக்கு உட்பட்ட
சோகம்!
யாரறிவார் இந்த
வக்கிரத்தை,

ஆ.முரளிதரன்-பூண்டுலோயா.

### பாவி எவரோ

நிறை கொள்ளா
வீட்டை
தரை கொள்ள
செய்த
பாவி எவரோ...?

ய.ரமேஸ்குமார்-புளத்சிங்கள.

### பரீட்சை

யுத்தத்து வெகுமதியாய்
அகதி முகாம்களுக்கு
அனுமதி வழங்கும்
தகுதி காண் பரீட்சை
நடந்தேறியிருக்கிறது.

ஏ.எச்.எம்.மௌஜூத்-ஹிஜ்ராபுரம்.

## வாசக(ர்) சாலை




அன்பு முரசே...!
அழகு தமிழில்
திகட்டாத நடையில்
உன் வருகை கண்டு
சின்னவர் பெரியவர்
அனைவர் உள்ளங்களும்
விழாக்கோலம் பூணுகின்றன
பக்கமெங்கும் பலதும்
தாங்கி
கவிதையும் கதையும் நன்கு
சுமந்து...,
சமூக சாக்கடைகளுக்கும்
தீர்வாய் வடிகால் தந்து
உன்னத இடத்தில் உயர்ந்து
நிற்கும் உனக்கு
வார்த்தையில்லை எனக்கு
வாழ்த்துக்கூற.., ஆகவே
எங்கும், என்றும் உனக்கே
முதலிடம் பத்திரிகையில்..!

ஏ.எல்.எம்.நிசாத்-காத்தான்குடி-06.

**என் ப்ரியமான முரசே!**

வாரந்தவறாமல் நீ சுமந்து வரும் அத்தனை அம்சங்களும் படுசூப்பராக உள்ளன. எந்தெந்த ஆக்கம் என்றுகூட குறிப்பிட்டு கூறமுடியாது. நீ பல வாசகர் நெஞ்சங்களில் இடம் பிடித்துள்ளாய். முரசே நீ வியாழன் தோறும் தொடர்ந்து வருகிறாய். வாழ்க! என் ப்ரியமான சுவை முரசே!

இரா.திவாகரன்-வவுனியா.

**என் உள்ளங்கவர் தினமுரசே**

வாரம் ஒரு முறை மலரும் முரசே உன் வரவை ஆவலோடு எதிர்பார்க்கிறேன். நீ கையில் கிடைத்ததும் ஊண் உறக்கம் மறந்து ஒவ்வொரு எழுத்தும் தவறாமல் படித்து கருத்தை அறிந்த தன் பின் களிவுருகிறேன். உன் மேல் சவாரி வரும் ஒவ்வொரு அம்சங்களும் என்மனதை கொள்ளை கொள்கின்றன. தொடர்ந்து என் அறிவுக்கு மெருகூட்டுவாயென ஆவலோடு எதிர்பார்க்கும் அன்பார்ந்த வாசகியான.

பஸ்மிலா மல்ஹார்-திஹாரிய.

என் அபிமான தினமுரசு பத்திரிகைக்கு, வெளிநாடுகளில் உள்ள எம்போன்ற ஆயிரக்கணக்கான இலங்கைத் தமிழர்களுக்கு எமது தாய்நாட்டின் அரசியல் சமூக நிலைமைகளை தெளிவாகவும் உண்மையாகவும் அறிந்து கொள்ள வழி செய்யும் ஒரே ஊடகம் முரசுதான். ஒரு பக்கச்சார்பாக தமிழ் தேசிய வாதத்தின் அனைத்து கண்முடித்தனமான செயற்பாடுகளையும் ஆமோதித்து அவற்றை மக்களுக்குள் திணிக்கும் ஐரோப்பிய தமிழ் ஊடக கலாசாரத்துக்கு மத்தியில் கொழும்பில் இருந்து வெளிவந்து இங்கும் தடம் பதித்திருக்கும் முரசின் பணி தனித்துவமானது.

உண்மை நேர்மை வெளிப்படைத்தன்மை என்ற முரசின் தாரக மந்திரங்களுடன் அதன் பணி மேலும் தொடர வாழ்த்துக்கள்

ஆர்.ராகுலன்-லண்டன்.

**என் மதிப்புக்கும், அன்பிற்கும் உரிய,**

என்னினிய தினமுரசு ஆசிரியர் அவர்கட்கு, முரசு 436 இதழில் 3ம் பக்கத்தில் "அதிக தேர்தல் வன்முறைகள் இடம் பெறும் பகுதிகளில்.." என தலைப்பிட்டு எழுதப்பட்டிருந்த கட்டுரையில் நான்காவது பந்தியில் முதல் வரியில் டிசம்பர் 2ம் திகதி மாலை 4 மணிக்கு வாக்களிப்பு முடிவடைந்ததும்.. என தொடராக எழுதப்பட்டிருந்ததே..! டிசம்பர் 5ம் திகதியல்லவா தேர்தல். இவ்வாறான ஒரு சிறு பிழைகூட தினமுரசில் வெளிவரக்கூடாது என நினைக்கும் பல்லாயிரக்கணக்கான வாசகர்களில் நானும் ஒருவன். வெண்மையான பாலில் பட்ட ஒரு கறுப்புத் துளி" போல இவை போல பிழைகளை திருத்தி மென்மேலும் வாசகர்களின் அன்பை பெற வாழ்த்துகிறேன்.

ராமன்தேவர் ராம்குமார்.

*அச்சுப்பிழைகாரணமாக ஏற்பட்ட தவறுக்கு வருந்துகிறோம்.*

ஆ-ர்.

முரசு 435ல் தேர்தல் கால சிரிப்பு தலையங்கத்தின்கீழ் வெளியாகியிருந்த காட்டூண்கள் இலெக்சன் காலத்திலே ஒரு கலக்கு கலக்கிவிட்டன. எம்மைப் பொறுத்தளவில் 30 ஆண்டுகளுக்கு முன்பு ரசித்து மகிழ்ந்த அதே சிந்தனைகளை திரும்பவும் பிரசுரித்து தக்க தருணத்தில் எம்மை மகிழ்வித்ததற்கு முரசுக்கு எம் வாழ்த்துக்கள். உண்மை, நேர்மை, பயமில்லாத்தன்மையுடன் வெளிக்கொணரும் இவ்வகை விகட சித்திரங்களுக்கு என்றென்றும் எமது வாழ்த்துக்கள். இச்சேவை தொடரவேண்டும் என்று அன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்.

பி.கு.விக்கி-கல்முனை.

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறி இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிக்கொடுத்து விட்டு, வேறு பிரதி வாங்கிக்கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்து விடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தி யான சேவையே முரசின் மூச்சு.

# உங்கள் பக்கம்

## மலையக அமைச்சர்களின் தலையான கடப்பாடு...

மலையக மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் இரு முக்கியஸ்தர்களுக்கும் புதிய அரசாங்கத்தின்கீழ் அமைச்சுப் பொறுப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஐக்கிய தேசிய முன்னணி பட்டியலில் போட்டியிட்டு பெருவாரியான மக்கள் ஆதரவுடன் வெற்றி பெற்ற ஆறுமுகன் தொண்டமானுக்கு வீடமைப்புத் துறை அமைச்சுப் பொறுப்பும் பி.சந்திரசேகரனுக்கு பெருந்தோட்டத் துறை அமைச்சர் பதவியும் வழங்கப்பட்டுள்ளன.

இவ்விரு அமைச்சுகளும் மலையக மக்களின், குறிப்பாக தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வோடு இரண்டறக்கலந்த துறைகளை உள்ளடக்கியவை இன்னும் சொல்லப் போனால் தோட்டத் தொழிலாளர்களின் அடிப்படைப்பிரச்சனைகளில் கணிசமானவற்றை இந்த அமைச்சுக்கள் இரண்டினூடாகவும் தீர்த்து வைக்க முடியும்.

இம்முறை தேர்தலில் பொதுஜன ஐக்கிய முன்னணியின் சார்பில் போட்டியிட்ட தோட்டப்புற தமிழ் பிரதிநிதிகள் பெரும்பாலும் நிராகரிக்கப்பட்டிருக்கிறார்கள். மக்களின் பெருவாரியான ஆதரவை இந்த அமைச்சர்களும் இவர்களுடன் இணைந்து போட்டியிட்டவர்களுமே பெற்றிருக்கிறார்கள். அதனால் இவர்களுக்கு மக்கள்மீது இருக்கும் கடப்பாடு குறித்து ஞாபகப்படுத்த வேண்டிய அவசியம் இருக்கா்து.

மலையகத்தையும், தோட்டப்புற மக்களையும் பிரதிநிதித்துவம் செய்யும் அமைச்சர்கள் கடந்த காலங்களிலும் இருந்துள்ளனர். அவர்களால் அம்மக்களுக்காக சிலசேவைகளும் புரியப்பட்டுள்ளன. ஆனால் இந்த நாட்டின் அரசாங்கத்தை தீர்மானிக்கும் மலையக மக்களின் வாக்குகளின் பெறுமதிக்கு போதிய பிரதிபலன் கிடைத்திருக்கிறதா என்பது சிந்திக்கப்பட வேண்டியதே. அல்லது இலங்கை பொருளாதாரத்தின் முதுகெலும்பை சுமப்பதாகக் கூறும் மக்கள் சமுதாயம் தமது உழைப்புக்கு ஏற்ற வாழ்க்கையை அனுபவிக்கிறார்களா என்ற விடயம் ஆராயப்பட வேண்டும். உண்மையில் இவ்விரு கேள்விகளுக்குமான பதில் திருப்தியானவை அல்ல.

தோட்டப்புற மக்களின் கல்வி, சுகாதார வசதிகள், வீட்டுவசதி, ஊதியம் என்ற சகல அம்சங்களும் மிகவும் பின் தங்கிய நிலையிலேயே காணப்படுகின்றன. அவர்கள் தற்போது அனுபவிக்கும் வாழ்க்கைத் தரத்தைவிட அதிகளவு உயர்ந்த நிலையில் வாழப்போதுமான அளவு அந்த மக்கள் உழைக்கிறார்கள். ஆனால் அதற்கான போதிய பலன் அவர்களை சென்றடைவதில்லை. இதற்கான காரணங்களை கண்டறிய ஆழமான ஆராய்ச்சிகள் அவசியமில்லை. இது மிகவும் சரளமான விடயம் தெளிவான உழைப்புச் சுரண்டல் இங்கே நிகழ்கின்றது. இதிலுள்ள கவலைக்குரிய அம்சம் யாதெனில் தோட்டப்புற மக்களின் உழைப்பு சூறையாடப்படுவதற்கு அவர்களின் தலைமைத்துவங்களும் பல வழிகளில் துணைபோவதுதான். இந்நிலை இனிமேலாவது மாற்றம் பெற வேண்டும்.

இப்போது தோட்டபுற தமிழ் மக்கள் இரண்டு அமைச்சர்களைப் பெற்றிருக்கிறார்கள். இவ்விரு அமைச்சுக்களின் ஊடாகவும் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகள் குவிந்து கிடக்கின்றன.

எனவே ஆறுமுகன் தொண்டமானும் சரி, சந்திரசேகரனும் சரி, மக்கள் தம்மீது வைத்த நம்பிக்கையை அர்த்தமுள்ளதாக மாற்ற இயன்றளவு செயற்பட வேண்டும்.

தோட்டத்தொழிலாளர்கள் தமது தலைவர்களிடம் உடனடியாக எதிர்பார்ப்பது இதைத்தான்.

ஊற்று


மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: 074-514282
தொலை நகல் (Fax):-074-513266

# நத்தார் பண்டிகையை முன்னிட்டு அரசாங்கம் போர் நிறுத்தம்?

## புலிகளின் சமிக்ஞைக்காக காத்திருப்பு!

சமாதான முயற்சிகளை ஆரம்பிக்கும் நல்லெண்ண நடவடிக்கையாக எதிர்வரும் நத்தார் பண்டிகையை முன்னிட்டு யுத்த நிறுத்தம் ஒன்றை அரசாங்கம் அறிவிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கடந்த வருடம் புலிகள் இதே காலப் பகுதியில் அறிவித்திருந்த ஒருதலைப் பட்சப் போர் நிறுத்தத்தை நான்கு மாதங்கள் நீடித்தும் பிரயோசனமற்ற விதத்தில் அது முடிவுக்குக் கொண்டுவரப் பட்டது தெரிந்ததே. இம்முறை போர் நிறுத்தத்தை முதலில் அரச தரப்பு அறிவிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இது தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஏற்கனவே ஆயுதப் படைகளின் தளபதிகளுடன் ஆலோசனை நடத்தியுள்ளார். ஒரு வாரம் அல்லது இரண்டு வாரங்கள் இந்த போர் நிறுத்தத்தை அமுல் செய்ய உத்தேசிக்கப்பட்டள்ள போதிலும் இது தொடர்பான இறுதி முடிவு இன்னமும் மேற்கொள்ளப்படவில்லை.

கடந்த வாரம் ஜனாதிபதியும் பிரதமரும் கலந்துகொண்ட பாதுகாப்பு சபைக் கூட்டத்தில் போர் நிறுத்தம் குறித்து விரிவாக ஆராயப்பட்டள்ளது. ரணில் விக்கிரமசிங்கவின் இந்திய விஜயத்தின் பின்னர் இது குறித்த இறுதி முடிவு அறிவிக்கப்படும். இவ்வாறு அரசாங்கம் போர் நிறுத்தம் ஒன்றை மேற்கொண்டால் புலிகளின் சமிக்ஞை எவ்வாறானதாக இருக்கும் என்பதையிட்டு பல்வேறு கருத்துக்கள் தெரிவிக்கப்படுகின்றபோதிலும் புலிகளின் அண்மைக்கால நடவடிக்கைகளைப் பொறுத்த மட்டில் அவர்களும் சாதகமான பதிலை அளிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. இது தொடர்பில் புலிகள் சார்பான கருத்துக்கள் எதவும் வெளியிடப்படவில்லை.

## பொ.ஐ.மு.வில் இருந்து ஐ.தே.க.வுக்குத் தாவ பலர் விருப்பம்

### ஒப்புக்காக சில நிபந்தனைகள்–உதவியாக புதிய சட்டமூலம்

ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தினால் விடுக்கப்பட்டிருக்கும் தேசிய அரசாங்க அழைப்பு தொடர்பாக பொதுஜன ஐக்கிய முன்னணிக்குள் இருந்து வெளியிடப்படும் முரண்பட்ட கருத்துக்களுக்கு மத்தியில் அந்தக் கட்சியிலிருந்து 20க்கு மேற்பட்டவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைய விருப்பம் தெரிவித்துள்ளதாக அரசியல் வட்டாரங்களில் கூறப்படுகின்றது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்தும் பொதுஜன ஐக்கிய முன்னணியில் இருந்தும் பலர் ரணில் விக்கிரமசிங்கவின் தேசிய அரசாங்க கோரிக்கைக்கு சாதகமாக பதிலளித்திருக்கும் அதே வேலை 5 நிபந்தனைகளின் கீழ் புதிய அரசாங்கத்துக்கு ஆதரவு தெரிவித்தள்ளனர்.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படும்வரை புலிகள் மீதான தடையை நீக்காதிருத்தல், இனப்பிரச்சனைக்கு அவசரத் தீர்வொன்றைப் பெற்றுக்கொடுத்தல், வேலையில்லாப் பிரச்சனையைத் தீர்த்தல், நாட்டின் ஒருமைப்பாட்டை பாதுகாத்தல் மற்றும் துரித பொருளாதார அபிவிருத்திக்கு வழிசெய்தல் என்பனவே இவர்களால் முன்வைக்கப்பட்டிருக்கும் நிபந்தனைகள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவை அனைத்தும் ஐக்கிய தேசியக் கட்சி தமது கொள்கைப் பிரகடனத்தில் தெரிவித்துள்ள விடயங்களாதலால் இதில் புதிதாக நிறைவேற்ற எவ்வித நிபந்தனையும் இல்லை. அரசாங்கத்துடன் இணைவதற்காகவேண்டி ஒப்புக்காக கூறப்படும் இந்த நிபந்தனைகளை சாட்டாகவைத்து பொதுஜன ஐக்கிய முன்னணியிலிருந்து பலர் தேசிய அரசாங்கம் என்ற பெயரில் ஐ.தே.க.வுக்கு தாவலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தக் கட்சி மாறல் நடவடிக்கைக்கு வசதியாக அடுத்து வரும் நாட்களில் கட்சி மாறல் தொடர்பான புதிய சட்டமூலம் ஒன்றை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க அரசாங்கம் தயாராகிவருகின்றது.

இந்த சட்டமூலம் அமுல்செய்யப்படும் பட்சத்தில் பொதுஜன ஐக்கிய முன்னணியில் உள்ள பலர் ஐ.தே.க.வுக்கு நேரடியாகவே தமது ஆதரவை தெரிவிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

எவ்வாறெனினும் தமது தேசிய அரசாங்கக் கோரிக்கைத் தொடர்பில் உத்தியோக பூர்வமாக பதிலளிக்க ரணில் விக்கிரமசிங்க பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு ஒரு மாதகால அவகாசம் வழங்கியிருக்கிறார்.

## பிரதமர் ரணிலுடன் டக்ளஸ் தேவானந்தா சந்திப்பு

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் இடையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை சந்திப்பொன்று இடம்பெற்றது.

ரணில் விக்கிரமசிங்கவின் அழைப் பின்பேரில் அவரைச் சந்தித்த டக்ளஸ் அரசாங்கத்தின் எதிர்காலத்திட்டங்களுக்கு ஈ.பி.டி.பி.யின் ஆதரவை பெற்றுக் கொடுப்பது தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். புதிய அரசாங்கம் முன்னெடுக்கும் முக்கிய செயற் திட்டங்களுக்கும் இனப் பிரச்சனை தீர்வு தொடர்பான விடயங்களுக்கும் தமது கட்சியின் பூரண ஆதரவை வழங்குவதாக ரணில் விக்கிரமசிங்கவிடம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்திருக்கிறார்.

சுமார் 1 மணி நேரம் நீடித்த இந்தப் பேச்சு வார்த்தை சுமுகமாக முடிவடைந்ததென இது தொடர்பாக விடுக்கப்பட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

## அடுத்தவாரம் முதல் மீண்டும் மின்வெட்டு

மீண்டும் மின்வெட்டு அமுல்செய்யப் படவிருக்கிறது. நீரேந்து பகுதிகளில் போதிய மழை இன்மையாலும் தற்போதைய மின்சாரத் தேவையை பூர்த்தி செய்யும் அளவு அனல்மின் உற்பத்தியின் கொள்ளளவு போதாமையினாலும் அடுத்த வாரம் முதல் இரவு வேளையில் 1 மணித்தியாலம் வரை மின் வெட்டு அமுல்செய்யப் படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலை அடுத்த 6 மாதங்களுக்கு நீடிக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த ஜூலை மாதம் முதல் அமுல் செய்யப்பட்டுவந்த மின்சார வெட்டை தேர்தலை மையமாக வைத்து கடந்த 2 மாதங்களுக்கு முன்னர் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் முற்றாக நீக்கி இருந்தது. அப்போது தேர்தலின் பின்னர் மின்வெட்டை அமுல்செய்யவேண்டி ஏற்படலாமென இலங்கை மின்சார சபையின் பொறியியலாளர்கள் சுட்டிக் காட்டி இருந்தனர்.

எவ்வாறெனினும் தாம் ஆட்சிக்கு வந்தால் மின் வெட்டை நீக்க உடனடி நடவடிக்கை எடுப்பதாக ஐக்கிய தேசியக் கட்சி தேர்தல் பிரசாரங்களின்போது கூறிவந்ததும் குறிப்பிடத்தக்கது.

## பொதுஜன ஐக்கிய முன்னணி வெற்றிபெறும் என

### பொய் ஜோதிடம் கூறியதாக பத்திரிகையாசிரியர் வருத்தம்!

பொதுஜன ஐக்கிய முன்னணியின் உத்தியோக பூர்வ ஜோதிடப் பத்திரிகையாக கருதப்பட்டு வந்த 'இரஹந்த' பத்திரிகையின் ஆசிரியர் பதவி விலகியுள்ளதோடு அரசியல் அழுத்தம் காரணமாக கடந்த பொதுத்தேர்தலில் திருமதி குமாரதுங்க தலைமையிலான கட்சி பெருவெற்றியீட்டும் என்று தாம் போலியாக ஜோதிடம் கூறியதாக தெரிவித்துள்ளார்.

தேர்தலுக்கு முந்திய வாரம் இந்தப் பத்திரிகையில் ஜனாதிபதி குமாரதுங்கவின் கிரகபலன் மிகவும் சிறப்பாக இருப்பதால் அவர் தேர்தலில் வெற்றிபெறுவார் என்றும் ரணில் விக்கிரமசிங்க படுதோல்வி அடைவார் என்றும் முன்பக்கச் செய்தியாக வெளியிடப்பட்டிருந்தது.

தேர்தலில் பொதுஜன ஐக்கிய முன்னணி தோல்வி அடைந்ததன் பின்னர் இது தொடர்பாக ஏ.எஃப்.பி. செய்தியாளரின் கேள்வியொன்றுக்கு பதிலலித்திருக்கும் இரஹந்த ஆசிரியர் பிரியந்த்த ரத்நாயக்க தாம் ஜோதிடத்தையும் அரசியலையும் ஒன்றிணைத்து தவறு செய்துவிட்டதாக கவலை தெரிவித்துள்ளார்.

மீண்டும் ஜோதிடம் மூலமாக அரசியலில் ஈடுபடுவதில்லை என்று ஏ.எஃப்.பி. யிடம் உறுதியளித்திருக்கும் பத்திரிகையாசிரியர் பொதுஜன ஐக்கிய முன்னணி முக்கியஸ்தர்களின் வற்புறுத்தலின் பேரிலேயே தாம் அவ்வாறு எழுதியதாக கூறியிருக்கிறார்.

இரஹந்த பத்திரிகையில் இந்த எதிர்வு கூறல் வெளிவந்து இரண்டுநாட்களின் பின்னர் பத்திரிகை ஆசிரியரின் வீடு ஐ.தே.க. ஆதரவாளரென கருதப்படும் சிலரினால் குண்டுவீச்சுக்கு இலக்கானது குறிப்பிடத்தக்கது.

## புதிய அரசாங்கத்தின்கீழ் மூவாயிரம் அரச அதிகாரிகளுக்கு உடனடி இடமாற்றம்

அரசாங்க சேவையிலும் அரசாங்கத்துக்குச் சொந்தமான வேறு நிறுவனங்களிலும் கடமையாற்றும் சுமார் மூவாயிரம் ஊழியர்கள் புதிய அரசாங்கத்தின் கீழ் அடுத்த ஓரிருநாட்களில் இடமாற்றம் செய்யப்படவுள்ளனர். கடந்த அரசாங்கக் காலத்தில் சில அரச நிறுவனங்களில் பாரியளவிலான மோசடிகள், ஊழல் இடம்பெற்றுள்ளதால் அவை தொடர்பான விசாரணைகளை முன்னெடுக்க வசதியாக இவ்வாறு பலர் மாற்றம் செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அரசாங்க கூட்டுத்தாபனங்களிலும் சில நிறுவனங்களிலும் பொறுப்பு வாய்ந்த பதவிகளை வகித்த பலர் கடந்த ஆட்சி காலத்தில் பாரிய நிதி மோசடிகளில் ஈடுபட்டுள்ளதாக புதிய அரசாங்கத்தின் முக்கிய அமைச்சர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இவற்றை விசாரணை செய்து சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கும் நோக்குடனேயே இந்த இடமாற்றங்கள் அமுல் செய்யப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ், துறைமுகம், தபால், கல்வி சுகாதாரம் ஆகிய துரைகளைச் சேர்ந்த ஏராளமானவர்கள் இவ்வாரம் முதல் புதிய பதவிகளுக்கு மாற்றம் செய்யப்படுகின்றனர்.

## 9200 கோடி நிதி உதவி

மந்தகதியில் இருக்கும் இலங்கையின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்பும் அரசாங்கத்தின் உடனடி நடவடிக்கைக்கு உதவியாக உலக வங்கியும் சர்வதேச நாணய நிதியமும் 9200 கோடி ரூபாவை கடனாக வழங்க உறுதியளித்துள்ளன. தற்போது திறைசேரி பலத்த நிதி நெருக்கடியை எதிர்கொண்டிருப்பதால் அடுத்த சில மாதங்களில் ஏற்படப்போகும் கடும் பொருளாதார நெருக்கடிக்கு தற்காலிகத் தீர்வாக இந்த நிதி உதவி வழங்கப்படவிருக்கிறது.

அடுத்த 18 மாத காலத்துள் இந்த நிதி அரசாங்கத்துக்கு வழங்கப்படும். குறைந்தளவு வட்டியிலும் நீண்டகால அடிப்படையில் திருப்பிச் செலுத்தும் விதத்திலும் இந்தக் கடன்தொகை வழங்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மடவலை சம்பவத்துடன் தொடர்புடைய 5 படையினர் நீதி மன்றத்தில் சரண்

### ரத்வத்தையின் வீட்டில் தேடுதல்!

கடந்த தேர்தல் தினத்தன்று கண்டி மடவலையில் இடம்பெற்ற பத்துப்பேரின் கொலை தொடர்பாக பொலீஸாரினால் தேடப்பட்டு வந்த 5 இராணுவ வீரர்கள் திங்கட்கிழமை சரணடைந்துள்ளனர். இராணுவ லெப்டினன்ட் ஒருவர் அடங்கலாக இவர்களை எதிர்வரும் 26ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு தெல்தெனிய நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை இந்த சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்தி வரும் இரகசியப் பொலிஸ் குழுவொன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தையின் கொழும்பு வீட்டை சோதனைக்குட்படுத்தியதாக தெரிவிக்கப்படுகின்றது. இதன்போது ஜெனரல் ரத்வத்தையிடமிருந்து அவரது மகன் தொடர்பான வாக்குமூலம் பதிவுசெய்யப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. எவ்வாறெனினும் இந்த சம்பவத்துடன் நேரடியாகத் தொடர்பு பட்டுள்ளதாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கும் லொஹான் ரத்வத்தை இன்னமும் பொலிஸாரிடமோ நீதிமன்றத்திலோ சரணடையவுமில்லை. கைது செய்யப்படவுமில்லை. அவர் நாட்டைவிட்டு வெளியேறியதாக முரண்பட்ட தகவல்கள் தெரிவிக்கப்படுகின்றன.

## உயிரிழந்தவர்களின் பெயர் விவரங்கள்

### புலிகளால் அறிவிப்பு

மட்டக்களப்பு-வாழைச்சேனைப் பொலிஸ் நிலையத்தாக்குதலின் போது புலிகளுக்குப் பலத்த உயிரிழப்பு ஏற்பட்டுள்ளது. தமது தரப்பில் பலியான 10 புலிப் போராளிகளின் பெயர் விவரங்களைப் புலிகளின் குரல் வானொலி அறிவித்துள்ளது. அம்பாறையைச் சேர்ந்தவர்களான கப்டன் ஆர்.சற்குணம் (பிரதாபன்), ரீ.மதியழகன் (சற்குணராசா), என்.யோகேஸ் வரன் (முகுந்தன்), மற்றும் மட்டக்களப்பைச் சேர்ந்தவர்களான எஸ்.கமலேந்திரன் (மிராஜ்), கே.சண்முகநாதன் (மணிக் கண்ணன்), கே.இராமச்சந்திரன் (மணியரசன்), ஏ.ஜெயகாந்தன் (முகுந்தனன்), எஸ்.சவுந்தரராஜன் (வினோகரன்), எஸ்.சசிகுமார் (உமாகரன்), எம்.மகேஸ்வரன் (மணிபிறை) ஆகியோர் வாழைச்சேனைப் பொலிஸ் நிலயைத் தாக்குதலில் கொல்லப்பட்டனர்.

இதேவேளை அதேதினமிரவு திருமலை-பாலத்தோப்பு இராணுவ முகாம் தாக்குதலிலும் தமது தரப்பில் நான்கு போராளிகள் பலியானதாகவும் புலிகள் அறிவித்துள்ளனர். மேஜர் குமாரவேல் (எஸ்.ஆனந்தன்-மட்டக்களப்பு), மனோஜ் (பி.வசந்தகுமார்-திருமலை) தேவன் (எச்.செபஸ்தியன்-திருமலை) கலைமதி (எஸ்.தர்ஷினி-திருமலை) ஆகியோரே உயிரிழந்துள்ளனர்.

வாழைச்சேனைப் பொலிஸ் நிலையத்திலிருந்து ரீ-56 ரகத் துப்பாக்கி 5 உட்பட இன்னும் சில ஆயுதங்களையும் கைப்பற்றிய புலிகள் அங்கிருந்த ஒரு காவலரணையும் மற்றுமொரு ஆவண அறையையுமே எரித்து விட்டுச் சென்றுள்ளனர்.

பொலிஸ் நிலையத்தின் சிறு பகுதியே புலிகளின் தாக்குதலால் சேதமடைந்தது. சேதப் படுத்தப்பட்ட பகுதிகள் திருத்தியமைக்கப் பட்டு தற்பொழுது பொலிஸ் நிலையத்தில் வழமையான அலுவல்கள் நடைபெறுகின்றன. பொலிஸ் நிலையம் புலிகளால் தரைமட்டமாக்கப்பட்டது என வெளியான செய்தி தவறானதாகும்.

## கூட்டணி உறுப்பினர் வழக்குத் தாக்கல்!

மட்டக்களப்பில் போட்டியிட்டு குறைந்த விருப்பு வாக்கு வித்தியாசத்தில் தோல்வி கண்ட தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர்கள் இருவர் தமக்கு அளிக்கப்பட்ட விருப்பு வாக்குகளை மீள எண்ணுமாறு கோரி உயர் நீதி மன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

மட்டக்களப்பில் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் தெரிவான ஒரேயொரு வேட்பாளர் ஜோசப் பரராஜசிங்கம். அவர் 20279 விருப்பு வாக்குகளைப் பெற்றிருந்தார்.

ஆனால் ஜோசப்பை விட முன்னாள் பா.உ.ஆன பி.செல்வராசா 183 வாக்குகள் வித்தியாசத்திலேயே தோல்விகண்டார். எனினும் விருப்பு வாக்குகளை மீண்டும் எண்ணுமாறு அவர் கோரிக்கை விடுத்தும் அது நிராகரிக்கப் பட்டதால் இவ்விவகாரத்தை நீதிமன்றத்திற்குக் கொண்டு செல்ல அவர் முடிவெடுத்துள்ளார். விருப்பு வாக்குகளை எண்ணுவதில் மோசடி இடம்பெற்றிருப்பதனாலேயே மீள எண்ணும் தமது கோரிக்கை நிராகரிக்கப் பட்டதாக அவர் கருதுகிறார்.

பொதுத்தேர்தலிலும் பல தில்லுமுல்லுகளின் பின்னரே மோசடி செய்து கடைசி நேரத்தில், ஜோசப் பரராஜசிங்கம் தெரிவு செய்யப்பட்டதாக அறிவிக்கப் பட்டது என்ற செல்வராசாவின் ஆதரவாளர்கள் துண்டுப் பிரசுரம் வெளியிட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. இதேவேளை 18247 விருப்பு வாக்குகளைப் பெற்ற செல்வேந்திரனும் விருப்பு வாக்குகள் மீள எண்ணப்பட வேண்டும் என்று வழக்குத் தாக்கல் செய்துள்ளார். இதேவேளை மட்டக்களப்பு மாவட்டத்தின் கட்டுப்பாட்டற்ற பகுதி மக்களைப் பொதுத் தேர்தலின் போது வாக்களிக்க விடாது தடுத்ததை எதிர்த்து மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினர் அலிஸாஹிர் மௌலானா வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கட்டுப்பாடற்ற பகுதிகளில் வசிக்கும் மக்கள் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வந்து வாக்களிப்பதற்கு முடியாதவாறு படையினர் வாக்களிப்புத் தினத்தன்று தடைவித்தனர். இது மக்களை சுதந்திரமாக வாக்களிக்க விடாது அவர்களது அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்ட செயலாகும் என்று அலிஸாஹிர் மௌலானா தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

1994ம் ஆண்டு இடம்பெற்ற பொதுத் தேர்தலிலும், 2000ம் ஆண்டு இடம்பெற்ற பொதுத்தேர்தலிலும் ஐ.தே.க. சார்பில் போட்டியிட்டும் தெரிவான அலிஸாஹிர் மௌலானாவுக்கு இம்முறை 22638 வாக்குகள் ஐ.தே.கட்சிக்காகக் கிடைத்தது. எனினும் அவர் தோல்விகண்டார்.

## சுயவிருப்பின் பேரில் விலகலாம்!

பொதுஜன ஐக்கிய முன்னணியின் தேசியப் பட்டியலிலிருந்து சுய விருப்பின் பேரில் எவரேனும் விலக விரும்பினால் விலகிக்கொள்ளலாம் என்று அந்தக் கட்சியின் பொதுச்செயலாளர் டி.எம். ஜயரத்ன அறிவித்துள்ளார்.

பொதுஜன ஐக்கிய முன்னணிக்குள் தேசியப் பட்டியல் தொடர்பான சர்ச்சை இன்னமும் தீரவில்லை. முன்னாள் அமைச்சர் பட்டி வீரக்கோன் தன்னை தேசியப் பட்டியலில் சேர்த்துக் கொள்ளாதை எதிர்த்து வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

மேலும் பல கட்சி முக்கியஸ்தர்கள் பொதுஜன ஐக்கிய முன்னணியின் தேசியப் பட்டியல் நியமனம் தொடர்பில் கடும் அதிருப்தி தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சேறு பூசும் அறைக்கு சீல்வைப்பு

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் இருந்து வந்த சேறுபூசும் அறை கடந்தவாரம் முதல் சீல்வைத்து மூடப்பட்டுள்ளது. செய்தி, மற்றும் நடப்பு விவகாரங்களை தயாரிப்பதற்கென இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தபானத்தின் தனியான பிரிவு ஒன்று கடந்த 4 வருடங்களாக செயற்பட்டு வந்தது . அந்த பிரிவு செயற்பட்ட அறையே இவ்வாறு மூடப்பட்டுள்ளது.

இங்கு ஐக்கிய தேசியக் கட்சிக்கு சேறு பூசும் செய்திகளும் ஒலிநாடாக்களுமே பெரும்பாலும் தயாரிக்கப்படுவது வழக்கமாகும். இதனாலேயே இந்த அறை சேறு பூசும் அறை என கூட்டுத்தாபன ஊழியர்களால் அழைக்கப்பட்டு வந்தது.

தேர்தலுக்கு ஓரிரு தினங்களுக்கு முன்னதாக அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனாவுக்கும் புலிகள் இயக்க தலைவர் ஒருவருக்கும் இடையில் நடைபெற்றதாக கூறி, பொதுஜன ஐக்கிய முன்னணியினால் வெளியிடப்பட்ட ஒலிப்பதிவு நாடா இங்கு வைத்தே தயாரிக்கப்பட்டிருக்கலாமென கூட்டுத்தாபன வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# முரசம்

## தீர்வு முயற்சி தாமதிக்கக்கூடாது

***அன்புள்ள உங்களுக்கு, வணக்கம்.***

இனப்பிரச்சனைக்குத் தீர்வுகண்டு நாட்டில் சமாதானத்தையும் சுபீட்சத்தையும் ஏற்படுத்துவது புதிய அரசாங்கத்தின் முதற்பணியாகவும் முக்கிய பணியாகவும் இருக்கவேண்டும்.

இந்த நாட்டில் கொழுந்துவிட்டெரியும் பிரச்சனையை தீர்க்கும் நேர்மையான நோக்கமும் அதற்குரிய நேர்த்தியான செயற்றிட்டமும் இன்றியமையாதவை. தமிழ் மக்களின் பிரச்சனைகளுக்கு நியாயமான தீர்வொன்று வழங்கப்படும் பட்சத்தில் ஐக்கிய இலங்கைக்குள் சமாதானமாக வாழ தாம் தயார் என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அண்மையில் தமது மாவீரர் தின உரையில் தெரிவித்திருந்தார்.

புதிய உலக ஒழுங்கு முறைக்கும், நிகழ்கால சர்வதேச நிலவரங்களுக்கும் புலிகள் இயக்கம் இசைவாக்கமடைவதையே இது காட்டுகின்றது.

புலிகள் இயக்கத்திற்கு போரியல் ரீதியில் ஈட்டக் கூடிய வெற்றிகளுக்கு வரையறை இருப்பது போலவே இலங்கை அரசாங்கத்திற்கும் யுத்தத்தை முன்னெடுத்துச் செல்லக்கூடிய ஒருவரையறை இருக்கின்றது.

இப்பொழுது இந்த இரண்டு தரப்பினரும் தமது எல்லைகளில் நிற்கிறார்கள்.

தமது நிலை குறித்து இருசாராரும் ஓரளவு புரிந்துகொண்டிருப்பதாயும் தெரிகிறது.

இதன் காரணமாகவே பிரபாகரனின் பேச்சில் தளர்வையும், ரணில் விக்கிரமசிங்கவின் நிகழ்ச்சி நிரலில் சமாதானத்துக்கான முக்கியத்துவத்தையும் அவதானிக்க முடிகிறது.

இன்றுள்ள பிரதான சவால் சகல இன மக்களாலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு தீர்வை முன்வைப்பது தொடர்பில் தான் எதிர்நோக்கப்படுகின்றது.

இனப்பிரச்சனைக்கான எந்த ஓர் அரசியல் தீர்வும் தமிழ் மக்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்யக் கூடியவகையில் அமைய வேண்டும் என்பதுடன் முஸ்லிம் சமூகத்தின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றுவதாகவும், தென்னிலங்கை சிங்கள மக்கள் மத்தியில் நாட்டின் ஒருமைப்பாடு குறித்த அச்சத்தை ஏற்படுத்தாத வகையிலும் அமைவது அவசியம்.

இந்த அடிப்படையில் வழங்கப்படக் கூடிய தீர்வு குறித்து சகல சமூகங்களின் பிரதிநிதிகளுடனும் பேச்சு வார்த்தை நடத்தி கருத்தொருமிப்புக்கு வருவது தற்போதைய அவசரத் தேவையாக உள்ளது.

ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணிக்குள் இனங்களின் பிரதிநிதித்துவம் தொடர்பில் பல சாதகமான அம்சங்கள் காணப்படுகின்றன.

தமிழ் மக்களின் பிரதிநிதிகள் பலரும் ஐ.தே.க.வோடு கருத்தொருமிப்புடன் செயற்படுகின்றனர். முஸ்லிம் சமூகத்தின் பிரதிநிதிகள் நேரடியாகவே அரசாங்கத்தில் அங்கம் வகிக்கின்றனர்.

மறுபுறத்தில் தென்னிலங்கை சிங்கள மக்களினால் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் அவரது கட்சிக்கும் தெளிவான ஆணை வழங்கப்பட்டுள்ளது.

ஆதலால் இரண்டு தசாப்த கால போரை முடிவுக்குக் கொண்டு வந்து அமைதியை நிலைநாட்ட இதைவிட ஏற்ற சூழ்நிலை ஒன்று உருவாகப் போவதில்லை.

பகைமை பாராட்டும் கட்சி அரசியலின் பலனாக இந்த சந்தர்ப்பத்தையும் கோட்டை விட்டு விட்டு பின்னர் ஆளாளுக்கு விரல் நீட்டி குற்றம் சுமத்துவதை விடுத்து ஆக்கபூர்வமாக ஏதேனும் செய்யும் பொறுப்பு அரசாங்கத்துக்கு இருக்கிறது.

அரசாங்கத்துக்கு மட்டும் என்றில்லை அனைவருக்கும் இருக்கிறது.

■ ■

*மீண்டும் மறுமடலில் வந்து கலக்கும்வரை*

*என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்.*

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

# தமிழ்க் கூட்டுக்குள் தலைதூக்கும் பிரச்சனைகள்

தேர்தல் அறிவிக்கப் பட்டதும் தமிழ்க் கூட்டமைப் பென்று ஒன்றை அவசர அவசரமாகக் கூட்டி 15 ஆசனங்களைப் பெற்று மீண்டும் ஒருமுறை பெருமளவு தமிழ்ப் பிரதிநிதிகளைப் பாராளு மன்றம் அனுப்பியுள்ள நிலையில் இன்று சகலரது கவனமும் இக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளின் நடவடிக்கை களின் மீதே திரும்பியுள்ளது.

இது ஆச்சரியப்படவோ விசனிக்கவோ தக்க விடயமல்ல, ஏனெனில் இக் கூட்டமைப்பு வெற்றி பெற்ற விதமும் அதில் அவர்கள் அளித்த வாக்குறுதிகளும், கூறிய விடயங்களும், கையாண்ட முறைகளும் சகலருக்கும் நன்கு தெரிந்தவையே.

இனி அவற்றை மீறுவதோ, சாக்குப் போக்குச் சொல்லிக் கடத்துவதோ, மாறாகச் செயற்படுவதோ ஒன்றும் செய்யாது வாளாவிருப்பதோ, இல்லையேல் வெட்டித்தனமாக ஏதோ செய்வதுபோல் பகட்டுக்காட்டி எதுவும் செய்யாதிருப்பதோ அப்பட்டமாக மட்டுமன்றி அவர்களைக் குற்றவாளிகளாகவே கணிப்பிட வைத்துவிடும்.

இதுவரைகால எமது போராட்ட வரலாற்றில் இத்தகைய போக்குகள் துரோகங்களாகவே கருதப்பட்டு தண்டிக்கப் பட்டும் உள்ளன.

இக் குற்றச்சாட்டுக்கு இதே தமிழ்க் கூட்டமைப்பிலுள்ள சகல கட்சிகளின் தலைமைகளும் உள்ளாகியிருந்தன.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் அமிர்த லிங்கத்துக்கும் துரோகிப் பட்டம் சூட்டப்பட்டு மரணதண்டனை தான் வழங்கப்பட்டது.

டெலோ அமைப்பின் தலைவர் சிறீசபாரட்ணமும் துரோ கியாகவே குற்றம் சாட்டப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டார்.

ஈ.பி.ஆர்.எல்.எப். அமைப்பின் தலைவர் பத்மநாபாவும் துரோகியென்ற கருத்திலேயே சுட்டுக் கொல்லப்பட்டார்.

தமிழ்க் காங்கிரஸின் தலைவர் ஜீ.ஜீ பொன்னம்பலம் இந்த ஆயுதப் போராட்டத்துக்கு முற்பட்ட காலத்தவராதலால் இத் தகைய தண்டனைக்கு உள்ளாகாத போதும், அன்றைய தமிழ்த் தலைமைகளால், மலையக மக்களின் பிரஜா உரிமை வாக் குரிமைகளைப் பறித்ததற்கு துணை நின்றமை அமைச்சுப் பதவிகளுக்காக விலைபோனமை என்ற காரணங்களால் துரோகியாகவே குற்றம் சாட்டப்பட்டவர்.

எனவே, ஏற்கெனவே தம் தலைமைகள் மீது சுமத்தப்பட்ட துரோகிப் பட்டங்களும் வழங்கப்பட்ட தண்டனைகளும் சரியா தவறா என்றுகூடக் கருத்துக் கூறத் தயாரில்லாதவர்களாக மௌனித்து, அதன் மூலம் தம்மைத் தாமே முன்னாள் துரோகி களாக ஒப்புக்கொண்டவர்களாக ஆகிநிற்கும் இவர்கள் இப்போது மீண்டும் ஒரு துரோகப் பட்டத்துக்கு விடுக்கப்பட்ட பரீட்சையை முகம் கொடுக்கிறார்கள்.

இத் தமிழ்க் கூட்டமைப்பு இன்று 15 ஆசனங்களை ஈட்டி ஒரு பெரு வெற்றியை நிலைநாட்டியுள்ளதாக வெளிக்காட்டி னாலும் உண்மையில் இவ் வெற்றி புலிகளால் வழங்கப்பட்ட பிச்சையே!

இந்தத் தமிழ்க் கூட்டமைப்பை உருவாக்கியதென்பதே புலிகளைத் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளாக ஏற்றுக் கொள்வதான அடிப்படையுடனேயே ஆரம்பிக்கப்பட்டது.

அதை நேரடி வாக்கியமாக எழுத்து மூலமாக இக் கூட்டின் சகல கட்சிகளும் ஏற்றுக் கொள்ள வேண்டுமென தமிழ்க் காங்கிரஸ் வலியுறுத்திய போதிலும் ஏனைய கட்சிகள் ஒருவாறு தட்டிக் கழித்து விட்டன.

அவ்விடத்திலேயே இவர்கள் துரோகிகளாகக் கூடிய ஒரு அறிகுறி தோன்றி மறைந்துள்ளது.

எனினும் ஏகபிரதிநிதிகள் என்ற நேரடிப் பதத்தைத் தவிர்த்து, புலிகளோடு மட்டும்தான் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும, ஏனையவர்களோடு பேசக்கூடாது என்ற ஒரு நிலைப்பாட்டை எய்தி இக் கூட்டமைப்பை உருவாக்கினர்.

இவர்களின் தேர்தல் பிரசாரங்கள் அனைத்திலும் இவர்கள் தெளிவாய் வெளிப்படுத்திய விடயம் என்னவென்றால், தாம் விடுதலைப் புலிகளுக்காகவே பாராளுமன்றம் செல்வதாகவே அமைந்துள்ளது. இவர்களின் தேர்தல் விஞ்ஞாபனமும்கூட புலிகளை மையப் பொருளாகக் கொண்டதாகவே வெளிவந்தது.

புலிகள் மீதான தடையை நீக்கவேண்டும் புலிகளுடன் மட்டுமே பேச்சுவார்த்தை நடத்தவேண்டும், புலிகள் தவிர்ந்த வேறு எவருடனும் பேச்சுவார்த்தை நடத்தக் கூடாது, புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கு உள்ள பொருளாதாரத் தடை போக்குவரத்துத் தடை என்பவற்றை நீக்க வேண்டும் என்ற விடயங்களையே முன்வைத்திருந்தது.

இவர்களின் பிரசார உத்திகள்கூட புலிகளின் தியாகங் களைப் பறைசாற்றி, புலிகளின் விடுதலை கீதங்களை ஒலி பரப்பியே மேற்கொள்ளப்பட்டன.

இவர்கள் ஊர்காவற்றுறைக்குச் செல்ல முற்பட்டு வெட்டு வாங்கிய சம்பவத்தில்கூட எதிரியின் பாசறையைத் தேடிச் செல்கிறோம் என்ற புலிகளின் பாடலை ஒலிபெருக்கியில் போட்டபடியே சென்றார்கள்.

இவர்களை வெவ்வேறு காரணங்களுக்காக எதிர்த்துப் பேசியவர்களையெல்லாம்கூட புலிகளுக்கு எதிராகச் செயற் படுகிறீர்கள் என்ற வகையான மிரட்டல் பாணியிலேயே முடக்க விளைந்தனர்.

இவர்கள் விநியோகித்த துண்டுப்பிரசுரங்கள் கூட இது புலிகளின் செய்தி என்ற தொனியில் அமைந்திருந்தது மட்டு மன்றி அவற்றை விநியோகித்த முறையிலும் புலிகளால் விநி யோகிக்கப்படுவதான பாவனையே வெளிப்படுத்தப்பட்டது. யாழ்ப்பாணத்தில், ஒரு சம்பவம் கட்டுடையில் பஸ்ஸொன்றில் பயணம் செய்தவர்களிடம் இவர்கள் யன்னலால் வீசிய துண்டுப் பிரசுரங்கள் தவறி சேற்றில் விழுந்துவிட்டது. உடனே அவர் களைப்பார்த்து "ஒமோம், இப்ப திருப்பி வீசுங்கோ, கெதியன யாழ்ப்பாணத்துக்கு வருவம். அப்ப கவனிச்சுக்கொள்ளுறம்" என்று தம்மை புலிகள் போல ஜெம்பமடித்துள்ளனர். கொழும்பிலும்கூட துண்டுப் பிரசுரங்களை வாங்காமல் சென்ற வர்களை "என்ன வாங்காமல் போறீங்கள்?" என்ற உயர்ந்த தொனியில் மிரட்டல் பார்வையுடன் வினவியுள்ளார்கள்.

இதெற்கெல்லாம் மேலாக வன்னியில் பண்டாரவன்னியன் படை, குளக்கோட்டான் படை என்ற பல்வேறு புனை பெயர்களில், இவர்களை ஆதரிக்காவிட்டால் விபரீத விளைவுகள் ஏற்படுமென புலிகள் மிரட்டுவதுபோல அனாமதேயத் துண்டுப் பிரசுரங்கள் வெளியிடப்பட்டன.

இவ்வாறு புலிகளைவிஞ்சிய புலிகளாகத் தம்மைப் பறை சாற்றிக் கொண்டே இத் தேர்தலில் இக் கூட்டுக் கட்சியை ஆதரிக்கும்படி மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்கள்.

புலிகள் தலைவர் பிரபாகரனின் மாவீரர் உரைக்கான விளக்கமளிக்கும் தனது உரையில் புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் நேரடியாகவே தமிழ்க் கூட்டமைப்பை ஆதரிக்கும்படி தமிழ் மக்களுக்குத் தெரிவித்திருந்தார்.

புலிகள் இலங்கையில் நடக்கும் ஒரு தேர்தலில் ஒரு கட்சியை ஆதரிக்கும்படி நேரடியாகக் கூறிய முதலாவது நிகழ்வு இதுவே!

பாராளுமன்ற வழிமுறையில் எமக்கு நம்பிக்கையில்லை, அதனால் சிறீலங்கா அரசாங்கம் நடத்தும் எந்தத் தேர்தலிலும் எமக்கு அக்கறையில்லை என்ற நிலைப்பாட்டையே புலிகள் இதுவரை கொண்டிருந்தார்கள்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலிலும், காலம் சென்ற தமிழ்க் காங்கிரஸ் கட்சித் தலைவர் குமார் பொன்னம்பலம், தமிழ்க் கட்சிகளின் சார்பில் தான் பொது வேட்பாள ராகப் போட்டியிட்டு புலிகளுக்கான மக்களாதரவை வெளிக்காட்டப் போவதாக முன்வந்தபோதும், புலிகள் அதற்கு அனுமதி மறுத்ததால் பின்வாங்கிக் கொண்டமை யாவருக்கும் தெரிந்த விடயம்.

ஆனால் இம்முறை அவ்வாறான அனுமதியை புலிகள் முதற் தடவையாக வழங்கியுள்ளார்கள்.

அந்த அனுமதியுடன்தான் மற்றைய கட்சிகளுக்கு இயலாத நிலையில் இக் கூட்டமைப்பினர் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கும் சென்று பிரசாரக் கூட்டங்கள் நடத்தி, அதை புலிகளின் அனுமதியாக இனங்காட்டும் வகையில் படங்களுடன் விளம்பரப் படுத்தியும் கொண்டுள்ளார்கள். மட்டக்களப்பில் போட்டி யிட்ட ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் சுட்டுக் கொல்லப்பட்ட போதிலும் இவர்கள் எவ்வித அச்சுறுத்தலு மின்றி புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் ளேயே சென்று பிரசாரம் செய்து திரும்பிவர இயலுமாக இருந்துள்ளது.

இதேவேளை புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியி லிருந்து பெருந்தொகையான வாக்காளர்கள் (சுமார் 67 ஆயிரம் பேர்) வாக்களிப்பு நிலையங்களுக்குச் சென்று இக் கூட்டமைப்பினருக்கு வாக்களிக்கும் வகையில் புலிகள் ஏற்பாடு செய்திருந்த போதிலும் இராணுவத்தினர் அவர்கள் வெளிவரும் வாயில்களை மூடிவிட்டதால் தடைப்பட்டது.

இவற்றைவிட புலிகளின் இந் நிலைப்பாட்டை ஒட்டிய யாழ். பல்கலைக் கழக மாணவர்களும் இம்முறை இக் கூட்டமைப்புக்கு ஆதரவாகப் பிரசாரம் செய்ததுடன் தேர்தல் நடவடிக்கைகளிலும் பங்கேற்றனர். இவர்களின் வெற்றிக்கான பல்வேறு இரகசிய ஏற்பாடுகளும் மேற் கொள்ளப்பட்டன.

இத்தனையையும் எடுத்துப் பார்களுக்கும்போது இவ் வெற்றியில் கூட்டமைப்போ, கூட்டமைப்பிலுள்ள எந்தத் தனியொரு கட்சியோ, தமது சொந்த வெற்றியாகப் பீற்றிக் கொள்வதற்கு எதுவும் இல்லை.

புலிகளுக்காக செயற்படப் போவதாகக்கூறி, புலிகளின் விடயங்களை முதன்மைப்படுத்தி, புலிகளின் பெயரைப் பயன்படுத்தி, புலிகளின் பாடல்களை ஒலி பெருக்கி, புலிகளின் அனுமதியுடன் புலிகள் பிரதேசத் துக்கே சென்று பிரசாரம் செய்து புலிகளின் நேரடி அறிவுறுத்தலின் பேரில் மக்களின் வாக்குகளைப் பெற்ற இக்கூட்டமைப்பு தம்மைப் புலிகளிடமிருந்து சுதந்திரமானதாக விளம்பி, தமக்குத் தனித்துவமான மக்களாதரவு உண்டெனக் காட்ட முனைந்தால் அது தமிழ் மக்களையும் உலகையும் மட்டுமல்ல புலிகளையும் ஏமாற்ற முனையும் செயலே.

பாராளுமன்றக் கதிரைகளைப் பிடிப்பதற்கே இத்தனையும், பாராளுமன்றத்துக்குத் தெரிவாகியபின் நாம் எம் வழியில் என்று இவர்கள் கழன்று செல்ல முனைவார்களாயினும்கூட இவர்களைப் புலிகள் வெல்ல வைத்த நோக்கங்கள் அர்த்தமற்றதாகவே ஆகிவிடும்.

ஆயினும் இப்பாராளுமன்றவாதிகள் மிக அழகான நடிப்புத் திறன் கொண்டவர்கள்.

பாராளுமன்ற அவைக்குள் மட்டும் எழுந்துநின்று வீரப் பிரதாபங்கள் பேசிவிட்டு, பாராளுமன்ற அறுசுவை உணவை உருசிபார்த்துக்கொண்டு, குளிரூட்டப்பட்ட வாகனத்தில் இருப்பிடம் திரும்பி சாய்ந்து படுத்துவிடக் கூடியவர்கள்.

இது ஒரு நாடக நடிகன் வேஷமிட்டு மேடையில் முழங்கிவிட்டு பின்னர் உடை மாற்றித் தன் சொந்த அலுவல்களைப் பார்த்துத் திரிவதுபோல ஒன்றே.

இப்படிப் பாராளுமன்றத்தில் வெற்றுப் பேச்சால் முழங்குவதைத்தான் இதுவரை செய்து வந்த இவர்கள் இதனால் எதையுமே சாதிக்கவில்லை.

ஆனால் இம்முறை புலிகள் இவர்களைப் பாராளு மன்றத்துக்கு அனுப்பிவைத்தது இவர்கள் அங்கிருந்து சமாவைப்பதற்கு இல்லை.

திட்டவட்டமான சில பணிகள் அவர்களுக்கு உண்டு. புலிகளின் தடையை எடுக்கச் செய்வதிலும், புலிகளை மீண்டும் யாழ்ப்பாணம் செல்ல வழி செய்வதிலும் இக் கூட்டமைப்பினர் உருப்படியாக எதையும் செய்யாவிடில் அவர்கள் இவர்களைப் பாராளுமன்றம் அனுப்பியது பய னற்றதாகிவிடும்.

ஆனால் தற்போதைய நிலையில் புதிய அரசாங்கம் மிக சாதுரியமாக நகர்வுகளை மேற்கொண்டு செல்கின்ற போக்கில், இக் கூட்டமைப்பினரால் பெரிதாக எதையும் சாதிக்க முடியுமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

முதலாவதாக, தற்போதைய பெறுபேறுகளின்படியே, ஐக்கிய தேசிய முன்னணி, கூட்டமைப்பில் தங்கியிருக்க வேண்டிய நிலை இல்லை. அதற்கு அதன் கூட்டமைப்பான முஸ்லிம் காங்கிரசுக்குமாகச் சேர்த்தே ஆட்சியில் நிலைக்கக்கூடிய பெரும்பான்மை ஆசனங்கள் (109+5=114) கிடைத்துள்ளன.

அத்தோடு இப்போது தேசிய அரசாங்கம் அமைப்பதற்கான அழைப்பையும் ரணில் விக்கிரமசிங்க விடுத்துள்ளார்.

அவ்வாறு தேசிய அரசாங்கம் அமைந்தால் இத்தமிழ்க் கட்சிகள் செல்லாக்காசாகிவிடும் நிலையே ஏற்படும்.

தேசிய அரசாங்கம் அமையாவிட்டாலும்கூட ஐக்கிய தேசிய முன்னணி ஏனைய கட்சிகளையும், பொதுஜன ஐக்கிய முன்னணியிலிருந்து தமக்கு ஆதரவளிக்கக் கூடியவர்களையும் சேர்த்து மூன்றில் இரண்டு பெரும் பான்மையை ஈட்ட முயற்சிக்கும்.

இதேவேளை தேர்தல் காலத்தில் ஈ.பி.டி.பி.யை தாம் கிட்டவும் எடுக்க மாட்டோமென்ற தொனியில் பேசியிருந்த ரணில் விக்கிரமசிங்க, தான் இந்தியா வுக்குச் செல்லுமுன்னதாக டக்ளஸ் தேவானந்தாவை அவசரமாக அழைத்து உதவியாளர் எவருமற்ற நிலையில் சுமார் ஒருமணித்தியாலம் இரகசியப் பேச்சு நடத்தி யுள்ளார்.

இத்தகைய விதத்தில் புளொட் தலைவர் சித்தார்த் தனையும் பேச அழைத்திருந்தார்.

இவற்றைப் பார்க்கும்போது, முன்னர் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்தால் தம்மால் அதை ஆட் டிப் படைக்கலாம் என்ற விதத்தில் இக் கூட்டமைப்புக் காட்டிவந்த ஒரு மாயத் தோற்றம் கலைந்து செல்லும் தன்மையையே காண முடிகின்றது.

இன்னும், ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சியமைத்த முதற் காரியமாக, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்தியா சென்று இந்தியப் பிரதமருட்பட பல இந்தியத் தலைவர்களைச் சந்திக்கவுள்ளார்.

இது இக் கூட்டமைப்பினருடனோ, புலிகளுடனோ ஒரு உடன்பாட்டோடு செயற்படும் தன்மையை வெளிக் காட்டவில்லை.

இத்தகைய பயணம் புலிகளுக்கு மகிழ்ச்சி யளிக்காதென ஜெகான் பெரேரா போன்ற மனித உரிமை அமைப்புத் தலைவர்களே சுட்டிக்காட்டியுள்ள போதிலும், இது குறித்து இக் கூட்டமைப்பினர் எவ்வித கருத்தும் வெளியிடாது தமக்குச் சம்பந்தமில்லாத விடயம்போல் நடந்து கொள்கின்றனர்.

இது இக் கூட்டமைப்பில் உள்ள சில இந்திய விசுவாச, மற்றும் இந்திய அடிவருடிக் கட்சிகளின் கபடத்தனத்தையும் புலப்படுத்துவதாய் உள்ளது.

கூட்டணியினரின் இந்தியத் தொடர்பு குறித்து தேர்தல் காலத்திலும்கூட தமிழ்க் காங்கிரஸ் ஏற்கெனவே சந்தேகம் தெரிவித்திருந்தது.

அவர்களுக்கு இந்திய உளவு ஸ்தாபனமான றோ வுடன் நெருக்கமான தொடர்பிருப்பதாகவும் இந்தியா தொடர்பான விடயங்கள் வரும்போது இவர்கள் மௌன மாக இருந்துவிடுவார்களென்றும் அதனால் இவர்கள் புலிகளுக்கு நம்பகமான விசுவாசிகள் இல்லையென்றும் ஐயம் தெரிவித்திருந்தது.

அதேபோல், இக் கூட்டமைப்பில் உள்ள ஈ.பி.ஆர்.எல்.எ.ப். முன்னர் இந்தியத் தயவில் இந்திய அமைதிப்படையுடன் சேர்ந்து புலிகளுக்கெதிராக யுத்தம் நடத்திய அமைப்பே.

இதற்கென, இலங்கை அரசாங்கத்தின் அனு மதியின்றியே, ரி.என்.ஏ. எனும் தமிழ் தேசிய இராணு வத்தை இவர்கள் கட்டினார்கள். அதற்காக பலவந்த ஆட்சேர்ப்பையும் நடத்தினார்கள். எவ்வளவு தலைகளை எண்ணிக் காட்ட இயலுமோ அவ்வளவு தொகையான ஆயுதங்கள் கிடைக்கும் என்ற இந்திய உளவுஸ்தாபனத் தின் தூண்டுதலுக்கு அமைய இவர்கள் கண்ணில் காணும் இளைஞர்களையெல்லாம் பலவந்தமாகப் பிடித்தார்கள்.

இப்போது அமைக்கப்பட்டிருக்கும் கூட்டமைப்புக் கூட ஈ.பி.ஆர்.எல்.எ.ப். இன் விருப்பத்தின் பேரில் ரீ.என்.ஏ. என்ற பெயரையே சூட்டி, தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்று மாற்றி வைத்துள்ளனர்.

அந்தக் காலத்தின் பிற்பாடுகூட இந்திய மத்தியஸ்த்தம் அவசியம் என்று திரும்பத்திரும்ப வலி யுறுத்தி வந்த அமைப்ப அது.

இந்திய உளவுத்துறையுடனான அதன் உறவுகள் இன்னும் தொடர்கிறதா என்பது வெளியே தெரியாத ஒன்றாகவே உள்ளது.

இதேபோல் டெலோ அமைப்புக்கூட ஆரம்ப காலத்தில் இந்தியாவின் ஏஜெண்டுகள் என்ற குற்றச் சாட்டின் பேரில்தான் புலிகளால் தடைசெய்யப்பட்டு தாக்கி அழிக்கப்பட்டது.

மாகாணசபை ஆட்சிக் காலத்தில் இந்திய உளவு ஸ்தாபனத்தின் ஏற்பாட்டில் அமைக்கப்பட்ட அதே ரீ.என்.ஏ. படையில் டெலோவும்கூட அங்கம் வகித்தது.

எனினும் தற்போது அது தன்னை மாற்றிக் கொண்டதாக காண்பித்து வருகின்றது.

இப்போது ரணிலின் இந்திய விஜயம் குறித்து இக் கூட்டமைப்போ அதிலுள்ள தனித்தனிக் கட்சிகளோ மௌனம் சாதிப்பது கேள்விக்குரியதாக உள்ளது.

இதேவேளை, இவ் அரசாங்கத்தின் வெளிநாட்டு அமைச்சுப் பதவியேற்று முதன்முதலாக வெளியிட்ட கருத்திலேயே அமைச்சர் டிரோன் பெனாண்டோ, புலிகள் ஆயுதங்களைக் கைவிட்டால்தான் பேச்சுவார்த்தை என்று கூறியுள்ளதுதான் அதிர்ச்சியளிக்கும் செய்திகள் தொலைக்காட்சியிலும் பத்திரிகைகளிலும் வெளி வந்தும்கூட அதற்கு கண்டனமோ, எதிர்ப்போ தெரிவிக்க அல்லது அச் செய்தியின் உண்மைத் தன்மையை உறுதி செய்யும் அக்கறை மிக்க நடவடிக்கை எதையும் எடுக்கத் தவறிவிட்டனர்.

இத்தகைய இவர்களின் மெத்தனப் போக்கு ஒரு புறம் இருக்க இப்போது இக் கூட்டுக் கட்சிக்குள் முறுகல்களும் சில திமிர்த்தனமான கருத்துக்களும் வெளி வரத் தொடங்கியுள்ளன.

இக் கூட்டமைப்பின் வெற்றிக்கு தமிழர் விடுதலைக் கூட்டணியின் வாக்கு வங்கியே காரணமென்றும் அதற்காக தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு இக் கூட் டமைப்பின் கட்சிகள் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ள தாகவும் கூட்டணிப் பிரமுகர் ஒருவர் கூறியுள்ளார்.

இது புலிகளை உதாசீனம் செய்யத் துணிந்த அதன் இறுமாப்பையே வெளிப்படுத்துவதாக உள்ளது.

அத்துடன் கூட்டமைப்பினர் பொதுப் பெயரிலேயே செயற்பட வேண்டுமென டெலோ அமைப்பு முன்வைத்த கருத்தை கூட்டணியும் காங்கிரசும் நிராகரித்து, தத்தம் சொந்தக் கட்சியாகவே தாம் செயற்படுவோம் எனத் தெரிவித்துள்ளன. பொதுப் பெயரில் செயற்பட்டால் கூட்டணியின் இமேஜ் (நற்பெயர்) கெட்டுவிடுமெனவும் தமக்கு தமிழ் பிரதேசங்களிலுள்ள வாக்கு வங்கிகள் அழிந்து விடுமெனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். அத்தோடு டெலொ, ஈ.பி.ஆர்.எல்.எ.ப். ஆகிய கொலைகாரக் குழுக்களுடன் இணைந்து செயற்படு வதில் தமக்கு இஷ்டமில்லையென கூட்டணி விசனம் தெரிவித்துள்ளது. இந்நிலைமை கூட்டுக்குள் தோன்றியுள்ள ஒரு பாரதூரமான பிரச்சனையின் உக் கிரத்தை மட்டும் வெளிக்காட்டவில்லை. நாளை இதே வகையில் புலிகள் பலவீனப்பட்டால் அவர்களையும் கொலைகாரக் கும்பல் என வர்ணிக்கவோ அல்லது ஆயுதக் குழுக்கள் என மட்டம் தட்டவோ இந்தத் தமிழர் வரலாற்றில் ஏற்பட்ட அத்தனை ஹிம்சைகளுக்கும் காரண மாயிருந்த அஹிம்சாவாதிகள் தயங்க மாட்டார்கள் என்பதையும் வெளிக்காட்டுகின்றது.

பாராளுமன்றத் தேர்தலில் வெற்றிபெற்று இன்னும் பாராளுமன்றம் சென்று பிரிவினைக்கு எதிரான சத்தியப் பரமாணம்கூட எடுக்கவில்லை அதற்குள் இவர்களின் தான்தோன்றித் தனமான தற்பிரதாபங்களும் திமிர்த் தனங்களும் வெளிப்படத் தொடங்கிவிட்டன. இரவல் பலத்தில் வென்ற வெற்றியை எனதா உனதா என உரிமைகோர இப்போதே தலைப்பட்டு விட்டார்கள்.

ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம். குறிப்பிட்ட காலத்துக்குள் புலிகளின் பணிகளை இவர்கள் செய்து முடிக்க லாயக்கற்றவர்களாக வெறும் வெட்டிப் பேச் சாளர்களாகவே காலம் கடத்துவார்களானால் இவர்களும் முன்னர் ஈரோஸ் எம்.பிக்கள் வெளியேறியதுபோல் ராஜினாமாச் செய்துவிட்டு வெளியேறப் பணிக்கப் படலாம். ■

# அண்டை மண்டலத்தில்..

கானகன்

## இந்திய நாடாளுமன்றத்தின் மீது அதிரடித் தாக்குதல்

பயங்கரவாதிகளிடமிருந்து தப்புவது கடினம். யாருக்குமே பாதுகாப்பில்லை. விடுதலைப்புலிகளாகட்டும், பாலஸ்தீனிய ஹாமாஸ்களாகட்டும், காஷ்மீர ஜிஹாதிகளாகட்டும், முழுமையாக எந்தக்குழுவினையும் அழித்துவிடமுடியாது. அத்தகைய குழுக்கள் உருவாகக் காரணமாக இருக்கும் அக, புறச்சூழல்கள் மாறாதவரை பயங்கரவாதத்தினை வேரறுப்பது என்பது இயலாத செயலே.

இந்த அரசியல் பாலபாடத்தினை டிசம்பர் 13ம் நாளன்று இந்திய நாடாளுமன்றத்தின் மீதான தாக்குதல் நிரூபித்துள்ளது. தாக்குதலுக்குப் பின்னாலிருந்தவர்கள் யார் என்பது இதுவரை உறுதியாகத் தெரியவில்லை. காஷ்மீரத் தீவிரவாதிகளாகத்தான் இருக்கவேண்டும் என்பது பொதுவான அனுமானம். ஜெய்ஷ் மொஹம்மது அல்லது லஷ்கரே தாய்பா, இரண்டினில் ஒன்றுதான் அத்தகையதொரு சாகசத்தை செய்திருக்வேண்டுமென இந்திய அரசு கூறுகிறது. இரு அமைப்புகளுமே தங்களுக்கும் வெள்ளிக்கிழமை சம்பவத்திற்கும் பொறுப்பில்லையென அடித்துச் சொல்கின்றன.

இன்நிலையில் இந்தியாவின் உளவுத்துறையினரே இப்படியொரு நாடகத்தை நடத்தியிருக்ககூடும் எனவும் ஒரு சாரார் கூறுகின்றார்கள். பாகிஸ்தான் அரசு, ஜிஹாதிகள் மட்டுமல்ல, இந்தியாவில் கூட இடதுசாரி சிந்தனையாளர்கள் பலர் அப்படித்தான் கருதுகிறார்கள்.

சம்பவத்தில் அப்படியொன்றும் பெரிதாக இழப்பு நேர்ந்துவிடவில்லை தாக்கிய கும்பலைச்சேர்ந்த ஐந்து பேரும் கொல்லப்பட்டுவிட்டார்கள். இந்தியதரப்பில் ஆறு பேர் மரணமடைந்திருக்கிறார்கள். அமைச்சர்களுக்கோ, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கோ ஆபத்து ஏதும் நேர்ந்துவிடவில்லை.

ஓயாமல் சன் தொலைக்காட்சியும் மற்ற நிறுவனங்களும், தாக்குதல் தொடர்பான சம்பவங்களை ஒளிபரப்பியபோது, பொதுமக்கள் பலர் கிண்டலடித்தது என்ன தெரியுமா. யார் யாரையோ சுட்றாங்க இவங்க, ஒரு எம்பியைப் பிடிக்க முடியல்லியே என்பதுதான்! அந்த அளவு அரசியல்வாதிகள் மீது அன்பும் மரியாதையும்.

அது ஒருபுறமிருக்க, ஆஹா, நாடாளுமன்றத்தைக் குறிவைத்துவிட்டார்கள் பாகிஸ்தானால் ஏவப்பட்ட பயங்கரவாதிகள், இனியும் பொறுக்க இயலாது, பாகிஸ்தான் வசமுள்ள காஷ்மீர் பகுதியில் அமைக்கப்பட்டிருக்கும் தீவிரவாதிகளுக்கான பயிற்சி முகாம்கள் தாக்கப்படவேண்டும், அதாவது இந்தியா கட்டுப்பாட்டு எல்லை, லைன் ஆஃப் கன்ட் ரோலைத்தாண்டிச் செல்ல வேண்டும், பட்ட வர்த்தனமாகக் கூறினால் பாகிஸ்தான் மீது இந்தியா போர் தொடுக்க வேண்டும் என்று நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் கூக்குரல்கள் எழுந்த வண்ணமிருக்கின்றன.

இப்படியொரு நிலையினை வேண்டுமென்றே உருவாக்கி, சிறிய அளவிலான போர் ஒன்றைத் தொடுத்து, ஓரளவாவது நிலத்தினை கையகப்படுத்தி, பிறகு அதனை வைத்தே உத்திரப்பிரதேசத்தில் நடைபெறவிருக்கும் சட்டமன்றத் தேர்தல்களில் வெற்றிபெற, பாரதீய ஜனதா பயங்கரமான திட்டம் ஒன்று வைத்திருக்கிறதோ என்று பலருக்கும் ஐயம். அப்படியென்னதான் நடந்தது டிசம்பர் 13 அன்று? காலை பத்தே முக்கால் மணியளவில் எதிர்க்கட்சிகள் பாதுகாப்பு அமைச்சர் ஜார்ஜ் பெர்னான்டசின் ராஜினாமாவைக்கோர, ரகளை ஏற்பட, அன்றைய நாடாளுமன்றக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது. எம்.பிக்கள் வெளியேறவிருந்த நேரம், வெளியே துப்பாக்கிச் சண்டை பத்திரிகையாளர்களும் டி.வி.புகைப் படக்காரர்களும் சத்தம் கேட்டு ஓடிவந்தார்கள். அதன் பிறகு நடந்ததெல்லாம் ஒளிப்பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

ஏறத்தாழ அரை மணிநேரம் தீவிரவாதிகளுக்கும் போலீசாருக்குமிடையே மோதல் நிகழ்ந்தது. இறுதியில் நான்கு தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். ஒருவர் தன்னைத்தானே மாய்த்துக் கொண்டார். ஐந்து போலீசாரும், சண்டையில் மாட்டிக் கொண்ட நாடாளுமன்ற தோட்டக்காரர் ஒருவரும் இறந்தார்கள் தீவிரவாதிகள் நாடாளுமன்ற வளாகத்திற்குள் நுழைவதற்கு பயன்படுத்திய ஒரு அம்பாசிடர் காரில் ஏகப்பட்ட வெடிமருந்துப் பொருட்கள் இருந்ததாகவும், பின்னர் அந்தக்கார் இந்திய போலீசாரால் தாக்கப்பட்டதாகவும் கூறப்பட்டது.

எல்லாக்களோபரமும் ஓய்ந்த பின்னர் எம்.பிக்கள் அனைவரும் பாதுகாப்பாக தங்கள் தங்கள் இடத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். பின்னர் அமைச்சர்களெல்லாம் மாறி மாறி வீரவசனம் பேசத் தொடங்கினர்.

பிரதமர் வாஜ்பேயிக்கு முன்னமேயே ஒரு உள்ளுணர்விருந்தது அப்படியொரு தாக்குதல் நடைபெறப் போகிறதென்று அது நடந்தேவிட்டது என்று சிலர் சிலாகித்தனர் பலமுனைகளில் இந்தியா எதிர்தாக்குதலை நடத்தும் என்று எச்சரித்தார் வாஜ்பேயி. என்ன நினைத்துக் கொண்டிருக்கிறார்கள் இந்த பயங்கரவாதிகள். இப்படியொரு அக்கிரமம் செய்ததற்கு அவர்கள் கடுமையான விளைவுகளை எதிர்கொள்ளவேண்டியிருக்கும் இனியும் நாம் பொறுமையாக இருக்கப்போவதில்லையென்று கர்ஜித்தார் உள்துறை அமைச்சர் அத்வானி.

இதே அத்வானிதான் மூன்றாண்டுகளுக்கு முன்பு இந்தியா அணுகுண்டு சோதனை நடத்தியபோது இந்தியா வல்லரசாகிவிட்டது தெற்காசியப்பிராந்தியத்தில் ராணுவ வலிமையைப் பொறுத்தவரை அடிப்படையானதொரு மாற்றம் ஏற்பட்டுவிட்டது அதனை உணர்ந்து மற்ற நாடுகள் செயல்படும் என்று நம்புகிறேன் என்று கொக்கரித்தார். இரண்டே நாட்களில் பாகிஸ்தானும் தன் பங்கிற்கு அணுகுண்டு சோதனை நடத்தியபிறகு சில நாட்கள் ஆளே காணாமல் போய்விட்டார்.

அவர் அடிக்கடி தன்னை வல்லபாய் பட்டேல் போல சித்தரித்துக்கொள்வார். இந்தியா விடுதலைபெற்றபோது, 500 குட்டி குட்டி சமஸ்தானங்களிருந்தன. அவற்றின் அரசர்களையெல்லாம் மிரட்டி, ஹைதராபாத் போன்ற இடங்களில் போலீசாரை இறக்கி, அனைத்து சமஸ்தானங்களையும் இந்தியக்குடியரசுடன் இறைத்தவர் வல்லபாய் பட்டேல். முஸ்லீம் எதிர்ப்பாளரும் கூட. அவருடைய வழித்தோன்றல்தான் இவர் என்று பாரதீய ஜனதா ஆதரவுப் பத்திரிகையாளர்கள் ஒரு கட்டத்தில் அத் வானியை வர்ணித்துக் கொண்டிருந்தார்கள். விழுந்த பல அடிகளுக்குப் பின்னால் அந்த ஜால்ரா வேகம் சற்று தணிந்திருக்கிறது. ஆனாலும் பாகிஸ்தானுக்கு பயங்கர எச் சரிக்கைகள் விடுவதை அத்வானி நிறுத்திக் கொள்வதாக இல்லை.

அவருக்கு இயல்பாகவே இருக்கும் இந்துமத தீவிரவாதத்தைத் தவிரவும், இன்னொரு உள்நோக்கமும் இருப்பதாகவே கருதப்படுகிறது. 1984ல் அதல பாதாளத்தில் வீழ்ந்திருந்த பா.ஜ.கவிற்கு, அயோத்தி பிரச்சினையைக்கிளப்பி, மறுபடியும் மக்களாதரவைப் பெறவைத்தவர் அத்வானி. ஆனால் பா.ஜா.க. தலைமையிலான ஆட்சி உருவானபோது, வாஜ்பேயியைத்தான் மற்ற கூட்டணிக் கட்சிகள் தலைவராக ஏற்கத் தயாராகவிருந்தன. இன்று கூட அதே



நிலைதான். அத்வானிசற்றே வெளிப்படையான இந்துதீவிரவாதி, எனவேயே மற்ற கட்சிகளுக்கு தயக்கம். எதிர்காலத்தில் அதுவும் மாறும்.

வாஜ்பேயி அத்வானியை சற்று தள்ளியே வைத்திருக்கிறார். எல்லா புகழையும் அவரே தட்டிக்கொகிறார். இத்தகையதொரு சூழலில் ஏதாவது செய்து தனது பெயரை நிலைநாட்டிக் கொள்ளவேண்டிய கட்டாயம் அத்வானிக்கு. எனவே எச்சரிக்கை படலம். எப்படியாவது காஷ்மீரிலிருந்து ஜிஹாதிகளை வெளியேற்றி, அவர்கள் பயிற்சி முகாம்களை தரைமட்டமாக்கவேண்டுமென்பது பா.ஜ.க. தலைவர்கள் பலரின் அவாவாகும். அதற்காகவும் இப்படியொரு சம்பவம் நிகழத் தப்பட்டிருக்கலாம் என்று சந்தேகமிருக்கிறது.

அமெரிக்காவின் சினத்தை எப்படியாவது ஜிஹாதிகள் மீதும், பாகிஸ்தான் மீதும் திருப்பிவிட வேண்டும்மென்று மீண்டும் மீண்டும் முயன்று மண்ணைக்கவ்வி வருகிறது வாஜ்பேயி அரசு.

செப்டம்பர் 11ந் திகதி அமெரிக்கா மீதான தாக்குதலுக்குப் பிறகு அதிர்ந்துபோன புஷ் அரசு, உலகம் முழுமையும் பயங்கரவாதிகள் என கொட்டமடிக்கப்படவேண்டுமென்று முழங்கிக்கொண்டிருந்தபோதே, அக்டோபர் முதல்நாள் ஸ்ரீநகரில் சட்டமன்றத்தை தகர்த்தார்கள் ஜிஹாதிகள். என்ன ஆயிற்று, சற்று உரத்துக் கண்டனம் செய்தது அமெரிக்கா, முதலில் பொறுப்பேற்றுக்கொண்ட ஜெய்ஷ் முகம்மது தீவிரவாதக்குழு, பின்னர் பாகிஸ்தானின் வற்புறுத்தலின்பேரில் தான் அப்படிச் சொல்லவேயில்லையென்று பின்வாங்கியது அவ்வளவுதான்.

அமெரிக்காவைப் பொறுத்தவரை தாலிபான் அரசை அழிக்க, ஒசாமா பின் லாடனைப்பிடிக்க பாகிஸ்தான் ஒத்துழைத்தால் சரி. மற்றவர்கள் எக்கேடுகெட்டுப் போனாலென்ன. கடந்த காலங்களிலும் அந்நாட்டு அரசு அப்படித்தான் நடந்து கொண்டிருக்கிறது. இதையெல்லாம் மறந்துவிட்டு, ஏதோ உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாடாக தன்னை அமெரிக்க வல்லரசு அங்கிகரித்து, பாகிஸ்தானை ஒடுக்குதற்கு உதவும் என்று மனப்பால் குடித்து ஏதேதோ செய்தவண்ணமிருக்கிறது இந்திய அரசு. ஆனால் பாவம் ஒன்றும் பலிக்கவில்லை.

அதனுடைய முட்டாள்தனத்திற்கு, ஏன் ஈனத்தனத்திற்கு அமெரிக்கா நல்ல பரிசைக் கொடுக்கிறது. அப்படியும் வாஜ்பேயி அரசு திருந்துவதாக இல்லை.

மறுபடி மறுபடி அமெரிக்கா என்றுதான் ஜெபித்துக்கொண்டிருக்கிறது. ஸ்ரீநகர் சட்டமன்ற தகர்ப்பின்போது அதிகம் அலட்டிக்கொள்ளாத புஷ் அரசு இப்போதாவது பாகிஸ்தானை கண்டனம் செய்யாதா, குறைந்த பட்சம் பயங்கரவாதத்தினை அடக்க தனக்கு தார்மீக ஆதரவளிக்காதா என்று நப்பாசை.

நாடாளுமன்றத்தை தாக்க வந்தவர்களின் அடுத்த குறி புஷ்தான் என்று ஆதாரங்கள் கண்டெடுக்கப்பட்டிருப்பதாக போலீசார் ஏகத்திற்கும் கதைவிட்டனர். அப்படியும் புஷ் நிர்வாகம் மசியவில்லை. கீழ்நிலை அதிகாரிகள் சடங்கிற்கு கண்டனம் தெரிவித்ததோடு சரி. பாதுகாப்பு அமைச்சர் ரம்ஸ்பீல்ட் வாயையே திறக்கவில்லை.

பயங்கரவாதிகள் மீதான போர் ஆஃப்கனிஸ்தானுடன் நிற்காது, ஈராக், சோமாலியா என்றெல்லாம் நீளும் என்று முழங்கிய அமெரிக்கா பாகிஸ்தானைப் பற்றி ஏதும் கூற மறுக்கிறது. என்ன ஜெய்ஷ் முகம்மதுவோ லஷ்காரோ தங்கள்தான் தாக்கியது என்று பிரகடனப்படுத்தத்தயாராக இல்லை. அப்படிச் செய்து அமெரிக்காவின் கோபத்திற்கு ஆளாக அவர்கள் தயாரில்லை. அவ்வளவே.

நல்லபிள்ளையாக நடந்து கொண்டு, தன்னைக் காப்பாற்றிக் கொண்டுவிட்ட அதிபர் முஷாரஃப் காஷ்மீர் விவகாரத்தை அவ்வளவு எளிதில் விட்டுவிடுவதாக இல்லை. ஆண்டுக்கணக்கில் இந்தியாவை எதிர்த்து பிரச்சாரம் செய்துவிட்டு, இப்போது எல்லாவற்றையும் கைவிட்டுவிடுகிறேன் என்றால் அவருக்கு ஆபத்துதானே. இப்பொது முல்லாக்களையும் மதரசாக்களையும் அடக்கி வைப்பதில் அவருக்கு ஏகப்பட்ட தர்மசங்கடங்கள். காஷ்மீர்தான் அவரது துருப்புச் சீட்டு.

அதனைப்புரிந்து கொண்டு இந்திய அரசும் சற்று விட்டுக் கொடுத்து பிரச்சினைக்குத் தீர்வு காண முயன்றால் இந்தப் பிராந்தியத்தில் மதவெறி, புனித யுத்த வெறி எல்லாம் சற்று தணியும். ஆனால் அப்படியான நல்ல காரியம் எதனையும் செய்ய வாஜ்பேயி அரசு தயாராகவில்லை.

சரி இப்போதென்ன செய்வார்கள்? ஹாட் பரசூட், பயங்கரவாதிகளை துரத்திச் சென்று எல்லையைத் தாண்டி, அவர்கள் முகாம்களையே அழித்துவிட வேண்டும் என்று இரண்டு மூன்று நாட்கள் விடாமல் பிரச்சாரம் செய்துவிட்டு, இப்போது அத்வானிக்கு அப்படிப்பட்ட ஒரு நடவடிக்கையில் இறங்க விருப்பமில்லை. மேலும் குறிப்பிட்ட இடங்களில் மட்டும்தான் முகாம்கள் அமைந்திருக்கின்றன, இடம் பெயர்ந்து கொண்டேபோவார்களே அவர்கள், எவ்வளவு தூரம் துரத்துவது என்று விளக்கம் கொடுக்கிறார்கள் பா.ஜ.கா. ஆதரவாளர்கள்.

இதெல்லாம் முன்பே தெரியாதா என்ன? நன்றாகவே தெரியும். ஆனால் அவர்கள் நம்பிக்கையென்ன? அமெரிக்கா தலையையாட்டிவிடும். பாகிஸ்தானை நொறுக்கிவிடலாம் என்பதுதான்.

ஆனால் அப்படியேதும் நடவாதபோது? ஜகா வாங்கவேண்டியதுதான். தாக்கத் தொடங்கி, பிறகு நிறுத்துங்கள் என்று புஷ் உத்தரவிட்டால், மானம் போய்விடுமே. எனவேதான் பிரச்சினைகள் பற்றி பா.ஜ.கா. பேசத்துவங்கியிருக்கிறது.

இந்த அட்டைக் கத்திவீரர்களெல்லாம் படம் காட்டிவிட்டு அடங்கிவிடுவார்கள். ஆனால்பொதுஜனதொடர்பு சாதனங்க் மீண்டும் பாகிஸ்தான் எதிர்ப்பு பிரச்சாரத்தை தீவிரப்படுத்தியிருக்கின்றன. அதனுடைய விளைவுகள் பாரதூரமாயிருக்கும்.

திராவிடக்குடும்பத்தில் உதித்த சன் டி.வியும் எஜமானர்களுக்கு மிக விசுவாசமாகவே நடந்துகொண்டு பாக் எதிர்ப்பு விஷயத்தை கக்குகிறது.

இதன் விளைவு பற்றித்தான் நல்லுள்ளம் கொண்டோர் கவலை கொள்ள வேண்டும். இஸ்லாமிய எதிர்ப்புணர்வு எல்லாமட்டங்களிலும் அதிகரித்துக் கொண்டே போனால் இந்தியாவின் இன நல்லிணக்கத்தினை அது கடுமையாக பாதிக்கும்.

## பிரதமரின் முதல் முயற்சி

புதிய அரசாங்கத்தின் வேகமான செயற்பாடுகளை அவதானிக்குமிடத்து அடுத்த ஒரு வருட காலத்துக்குள் குறிப்பிட்ட சில விடயங்களிலேனும் முன்னேற்றம் கண்டு விட வேண்டும் என்ற துடிப்பு இருப்பதை காண முடிகிறது. ஒரு புறத்தில் இனப்பிரச்சினை தீர்வு முயற்சி. இந்திய விஜயம் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இறங்கியிருக்கும் அதேவேளை பொதுஜன ஐக்கிய முன்னணியை உடைத்து அங்கிருந்து ஒரு குழுவினரை தம் பக்கம் இழுக்கும் முயற்சியில் ஏனைய ஐ.தே.க. முக்கியஸ்தர்கள் ஆர்வம் காட்டி வருகின்றனர். இதற்காகவேண்டி முதல் காரியமாக பாராளுமன்றத்தில் கட்சி மாறும் சட்ட மூலம் ஒன்றை கொண்டுவர அரசாங்கம் தயாராகின்றது. தற்போதுள்ள சட்டத்தின் குறிப்பிட்ட ஒரு அரசியல் கட்சியைச் சேர்ந்த ஒருவர் தேர்தலில் வெற்றிபெற்று பிரிதொரு கட்சிக்குத்தாவி னால் அவர் எந்தக் கட்சி சார்பாக தேர்தலில் போட்டியிட்டாரோ அந்தக் கட்சியின் செயலாளரினால் அவரை பாராளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து நீக்க முடியும். அதன் பின்னர் அந்த நபர் வழக்கு தாக்கல் செய்தாலும் பெரும்பாலும் கட்சி செயலாளரின் தீர்மானத்தையே நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளும். அதனால்தான் இந்தப் பாராளுமன்றத்தில் கட்சித்தாவல்கள் குறைவாக இருக்கின்றன.

அரசாங்கம் கொண்டுவர உத்தேசித்திருக்கும் புதிய சட்டத்தின் பிரகாரம் எவரும் எந்தக்கட்சிக்கும் மாற முடியும். தற்போதைய நிலையில் பொதுஜன ஐக்கிய முன்னணி மிகவும் பலவீனமாக இருக்கின்றது. ஐ.தே.க. கட்சி மாறுபவர்களுக்கென ஏராளமான சலுகைகளை அறிவித்துள்ளது. தடையாக இருப்பது கட்சி மாறியவர்களை செயலாளருக்கு பதவி நீக்கலாம் என்ற சட்டம் மாத்திரம் தான் இப்போது தடையாக இருக்கின்றது. அதையும் நீக்கிவிட்டால் பொதுஜன ஐக்கிய முன்னணியில் இருந்து கணிசமான பிரிவினரை தம்பக்கம் ஈர்க்கலாம் என்ற எண்ணம் ரணில் விக்கிரமசிங்கவுக்கு இருக்கின்றது. அரசியல் நிலவரம் மாற்றமடையும் போது இதே சட்டமூலம் ஐ.தே.க.வை பலவீனப்படுத்தவும் இடமுண்டு. ஏனெனில் பதவி கிடைக்கும் திசைக்குத்தாவுபவர்கள் பொது ஜன ஐக்கிய முன்னணியில் மாத்திரம்தான் இருக்கிறார்கள் என கூறுவதற்கில்லை.

எவ்வாறெனிலும் தமது அதிகாரத்தை நிலைநிறுத்தி உருப்படுத்த முயற்சி மேற்கொள்ளும் அதே நேரம் இனப்பிரச்சனை தீர்வு தொடர்பான ஆரம்பகட்ட பணிகளில் ரணில் இறங்கியிருக்கிறார். கடந்த வாரம் கொழும்புக்கான நோர்வே தூதுவர் ஜோன் வெஸ்போக்கை சந்தித்து பல சுற்றுப் பேச்சு வார்த்தை நடத்தியுள்ளார். அத்துடன் பிரதமர் தலைமையிலான தூதுக்குழு இவ்வார இறுதியில் இந்தியத் தலைவர்களையும் சந்திக்கவுள்ளனர்.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் பதற்றம் அதிகரித்திருக்கும் சமயத்தில் ரணில் விக்கிரமசிங்கவின் இந்திய விஜயம் அமையவிருக்கிறது. சமாதானம் தொடர்பாக யார் முயற்சி செய்தாலும் அது வெற்றியளிக்க வேண்டும் என்பதே நாட்டு மக்களின் எதிர் பார்ப்பாக இருக்கின்ற போதிலும் புதிய அரசின் முயற்சிகள் இன்னமும் நம்பிக்கையூட்டக் கூடிய கட்டத்தை அடையவில்லை என்றே கூற வேண்டும்.

1994ம் ஆண்டு திருமதி.குமாரதுங்க அதிகாரத்துக்கு வந்தபோது அவர் நாட்டில் அமைதியையும் சுபீட்சத்தையும் ஏற்படுத்துவார் என்று மக்கள் மத்தியில் இருந்த பாரிய அளவிலான எதிபார்ப்பு ரணில் விக்கிரமசிங்க தொடர்பில் இன்று இல்லை. ரணில் நாட்டை முன்னேற்றுவாரா சமாதானத்தை ஏற்படுத்துவாரா...? என்ற வகையில் கேள்விக்குறியுடனான ஒரு எதிர்பார்ப்பே மக்கள் மத்தியில் காணப்படுகின்றது. இதற்கு நேரடியான இரண்டு காரணங்களைக் கூறலாம். அத்தனைதூரம் நம்பிக்கை வைத்த சந்திரிகாவினால் நாட்டை ஒரு அங்குலம் கூட முன்னோக்கி நகர்த்த முடியவில்லை மக்களின் உடைந்துபோன மனநிலை! அடுத்து ரணில் விக்கிரமசிங்க இன்னமும் மக்களுக்கு பழக்கப்படாத ஒரு பாத்திரம். இவற்றைவிட ரணில் குறித்து அவரது எதிர் தரப்பினால் கடந்த காலங்களில் உருவாக்கப்பட்ட இனரீதியிலான மனநிலையும் கூட வருங்கால தீர்வு முயற்சி ஒன்றின் போது குறுக்கே நிற்கும் வாய்ப்பிருக்கிறது.

தென்னிலங்கை மக்கள் மத்தியில் கடந்த நாட்களில் விதைக்கப்பட்ட இனவாதக் கருத்துக்களையும் ரணில் குறித்த பாதி நம்பிக்கைகளுக்கும் மத்தியில் இனப்பிரச்சினைக்கான ஒரு நிரந்தா அரசியல் தீர்வை முன்வைத்து அதனை செயற்படுத்துவதென்பது இலேசான காரியமாக இருக்கப் போவதில்லை.

தமிழ் மக்களின் பிரச்சனைகள் தீர்க்கப்பட வேண்டும் என்ற எண்ணத்தை வெளியிடுவதன் மூலம் மாத்திரம் அனைத்திலும் வெற்றிபெற்றுவிட முடியாது அதேபோல் பொருளாதார வளர்ச்சி என்பது பங்குச்சந்தை வியாபாரம் உயர்ச்சியை காட்டிய மாத்திரத்தில் சீரடைந்து விட்டதாக கருதும் அளவு சுலபமான விடயமல்ல. ஐ.தே.க. அரசு பதவி ஏற்றதும் பங்குச்சந்தையில் ஏற்பட்ட திடீர் வளர்ச்சி வர்த்தக சமுகம் புதிய அரசாங்கத்தின் மீது கொண்டுள்ள நம்பிக்கையின் வெளிப்பாடு என்பதில் சந்தேகமில்லை.

ஆனால் வர்த்தக சமூகத்தின் நம்பிக்கையை வெல்வதால் மாத்திரம் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியாது. குறிப்பாக அடிமட்ட பொதுமகன் வரையில் சுபீட்சத்தை காண்பிக்கும் செயற்பாடு இதனை விட முறையாகவும் நேர்த்தியாகவும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

பங்குச் சந்தையில் தற்போது ஏற்பட்டிருக்கும் அபிவிருத்தி தலைநகரில் நடைபெறும் ஒரு குண்டு வெடிப்புடனேயோ அல்லது வடக்கில் ஆரம்பிக்கும் ஒரு இராணுவ நடவடிக்கையுடனேயோ மீண்டும் பழையபடி சைபர் நிலைக்கே வந்துசேர இடமுண்டு. அதனால் வர்த்தக ரீதியில் ஏற்படும் தற்காலிக முன்னேற்றங்களை மையமாகக்கொண்டு, போர் நிலையை மறந்துவிட்டு பொருளாதார சுபீட்சம் குறித்து எதிர்பார்க்க முடியாது.

ஐ.தே.க. அரசாங்கத்தை கைப்பற்றிய தன் பின்னர் அதன் தலைவர்கள் கலந்து கொண்ட தொலைக்காட்சி உரையாடல்களிலும் சரி, பத்திரிகைப் பேட்டிகளிலும் சரி கூடுதல் நேரத்தை ஒதுக்கியது கடந்த அரசாங்கத்தின் தவறுகளைச் சுட்டிக்காட்டுவதற்காகத்தான். ஐக்கிய தேசியக் கட்சியின் 17 வருட ஆட்சியை திட்டித்தீர்ப்பதை நிறுத்தி தமக்கென புதிதாக எதையும் சொல்ல சந்திரிக்காவினால் 2001ம் ஆண்டு வரை முடியவில்லை. அவர் கலந்து கொண்ட கடைசி தேர்தல் பிரசாரக் கூட்டத் தில் கூட ஜே.ஆர். ஜயவர்த்தனவின் அரசியலமைப்புக்கும், பிரேமதாசா அரசாங்கத்தையும் தான் விமர்சித்தார். இதே வழிமுறையை புதிய ஆட்சியாளர்களும் கைக்கொள்வார்களாயின் சந்திரிகாவின் ஏழாண்டு கால தவறுகளை இடைவிடாமல் கூறிக்கொண்டிருப்பதைத் தவிர வேறுஎதனையும் செய்யும் சந்தர்ப்பம் ஐ.தே.க.வுக்கும் கிடைக்காது.

# Vella Maxi Credit


**சுவிஸில் உங்கள் பணத்தேவைகளை பூர்த்தி செய்ய இலகுவான கடன் வசதிகளை விரைவாக செய்து கொடுக்கின்றோம்**

- 100,000 SFR வரை கடன் வழங்கப்படும்
- 10,000 SFRற்கு வருட வட்டி 525 SFR
- ஒரு மாதத்திற்கான கட்டுப் பணம் 877 SFR
- வட்டி வீதம் 9.99%
- ஏற்கனவே கடன் பெற்றவர்களுக்கும் வழங்கப்படும்
- B/C காட் உள்ளவர்களுக்கு மட்டும்

மேலதிக தொடர்புகளுக்கு

**கந்தராஜா பிரபு**

**Vella Credit**

Spltalgasse 16 (4ம் மாடி)
3011 Bern
Tel: 031/3122426 Fax: 031/3119351
Natel: 079/7139509


# அமைச்சரவை குழறுபடிகள்

**த**னிநபர்களை திருப்திப்படுத்துவதற்காக ஏராளமான அமைச்சுப் பொறுப்புக்களை வழங்கியதும்வேறு சில தனிநபர்களை திருப்த்திப்படுத்த அவ்வமைச்சுப் பொறுப்புகளை திடீரென்று பரித்ததும் கூட பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் வீழ்ச்சிக்கு ஒரு காரணமாக சுட்டிக் காட்டப்பட்டது.

இத்தகைய வீண் விரையங்களை தவிர்க்கப்போவதாகக் கூறி ஆட்சிக்கு வந்த ஐ.தே.க.வின் முதல் பணியான அமைச்சரவை நியமனம் மக்கள் மத்தியில் கடும் விசனத்தை ஏற்படுத்த காரணமாகியிருக்கிறது. பொதுஜன ஐக்கிய முன்னணி 43 பேர் கொண்ட அமைச்சரவையை நியமித்த போது உலகிலேயே மிகப்பெரிய அமைச்சரவை என்று அதனை வர்ணித்த ஐ.தே.க. இன்று 50க்கும் மேட்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட மெகா சைஸ் கெபினட் ஒன்றை அமைத்துள்ளது.

அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள், அமைச்சரவை அந்தஸ்து இல்லாத அமைச்சர்கள் என்று இரண்டு பிரிவுகளாக வகுத்ததன் நோக்கம் தாம் சிறிய அமைச்சரவையை அமைத்திருப்பதாகக் காண்பிக்க 'உல்டா'வே தவிர வேறில்லை. இதைவிட பொதுஜன ஐக்கிய முன்னணியில் இருந்து இன்னும் எவரேனும் ஐ.தே.க.வுடன் இணைந்து கொள்வார்களாயின் அவர்களுக்கும் அமைச்சர் பதவிகள் வழங்கப்படும் என்று அரசாங்கத்தின் முக்கியஸ்தர்கள் அறிவிக்கின்றனர். அதாகப்பட்டது. அமைச்சரவை மேலும் விஸ்தரிக்க அரசாங்கம் தயாராக இருக்கின்றது.

இதைவிட புதிய அமைச்சரவையில் ஏராளமான குறைபாடுகளும் குழறுபடிகளும் காணப்படுகின்றன. கல்வி அமைச்சர் என்று ஒருவரும் பாடசாலை கல்வி அமைச்சர் என்று மற்றொருவரும் நியமிக்கப்பட்டுள்ளனர். பாதுகாப்பு அமைச்சர் என்று ஒருவரும் உள்நாட்டு பாதுகாப்பு அமைச்சர் என்று வேறொருவரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

புதிய அமைச்சரவை நியமனம் தொடர்பாக காரசாரமான வார்த்தைப் பிரயோகங்களுடன் மக்கள் விடுதலை முன்னணி கடந்த வாரம் அறிக்கை ஒன்றை வெளியிட்டது.

கல்வியே நாட்டின் எதிர்காலம் என்ற புத்தி ஜீவிகளின் கருத்து கவனத்தில் எடுத்துக் கொள்ளாது விடப்பட்டுள்ளது. கல்வி அமைச்சர் அமைச்சரவைக் கூட்டங்களில் கலந்து கொள்ள முடியாது. இந்த அளவிற்கு கல்வி கீழ்த்தரப்படுத்தப்பட்டுள்ளது வேதனைக்குரியது.

மேலும், பாடசாலைக் கல்வி தொடர்பில் வேறொரு அமைச்சரை நியமித்திருப்பதன் மூலம் பாரிய குழப்பகரமான நிலை ஏற்பட்டுள்ளது. இது கல்வி அமைச்சர் பாடசாலைக் கல்விக்குப் பொறுப்பானவர் அல்ல எனும் குழப்ப நிலையைத் தோற்றுவித்துள்ளது. இது போன்ற பல குழப்ப நிலைகள் புதிய அமைச்சரவையில் தோன்றியுள்ளன.

நிதி அமைச்சுப் பதவியும், பாதுகாப்பு அமைச்சுப் பதவியும் தேசிய பட்டியல் எம்.பி.க்களுக்குக் கொடுக்கப்பட்டதன் மூலம் இவர்களை ஆட்டுவிப்பது பிரதமர் ரணில் விக்கிரமசிங்கதான் என்பது தெட்டத்தெளிவாகிறது.

புதிய அரசாங்கத்தின் அமைச்சரவை தனி நபர்களை மகிழ்ச்சிப் படுத்துவதற்காக அமைக்கப்பட்டுள்ளதே தவிர நாட்டின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு அமைக்கப்பட்டதல்ல.

பொதுஜன ஐக்கிய முன்னணியில் நிர்வாகத்திறமையற்ற ஆட்சியையும், 40 பேருக்கு மேற்பட்ட அமைச்சரவையையும் ஐ.தே.க. விமர்சித்தது. தேர்தல் பிரசாரங்களில் மக்கள் முன்தீர்ப்புக்கு கொண்டு சென்றது.

இவற்றை நம்பி மாற்றத்தைக் காணலாம் என்று நம்பிக்கை வைத்து ஐ.தே.க.வுக்கு மக்கள் வாக்களித்தனர். ஆனால், ஐ.தே.கட்சிக்கு அமைச்சரவையில் எல்லாவற்றையும் கூட்டினால் மொத்தம் 62 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அமைச்சரவை அந்தஸ்து அற்ற அமைச்சர்கள், அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், கருத்திட்ட அமைச்சர்கள் என வார்த்தை ஜாலங்களால் ஐ.தே.கட்சி தனது அமைச்சர்களின் எண்ணிக்கையை மறைக்கப் பார்த்தாலும் அது முடியாத காரியம்.

புதிய அரசாங்கத்தின் அமைச்சரவை "நாய், காகங்களுக்கு தானம் வழங்குவது" போல் அமைந்துள்ளது.

ஐ.தே.க. தமக்கு வாக்களித்த மக்களை கோமாளிகளாக்காது அவர்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முனைய வேண்டும் என்றும் ஜே.வி.பி.யின் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அமைச்சர் நியமனங்களை அவதானிக்குமிடத்து பழைய ஐ.தே.க. அரசைத்தான் மக்கள் மீண்டும் ஆட்சியில் அமர்த்தியிருக்கிறார்களா என்று எண்ணத் தோன்றுகிறது.

# ஓராண்டு நினைவலைகள்

மண்ணில் மலர்வு
29 – 08 – 1949



விண்ணில் மறைவு
23 – 12 – 2000

## அமரர் திருமதி சந்திரன் அன்னலீலா

நவாலி அரசடி-மானிப்பாய்

அம்மா
பாசத்தின் திருவுருவே எம் குடும்பத்தின் ஒளி விளக்கே
அன்புடன் எம்மை அரவணைத்துப்
பாசத்துடன் எம்மை வளர்த்து ஆளாக்கி
எங்கள் இதயங்களில் குடியிருக்கும் அன்புத் தெய்வமே
வார்த்தை ஒன்று கூடச் சொல்லாமல்
எம்மை விட்டுப் பறந்தோடிச் சென்றதெங்கே
அம்மா ஆண்டு ஒன்று சென்றாலும்
உங்கள் நினைவுகள்
எங்களை விட்டு ஒரு போதும் அகலாது
என்றும் உங்கள் நினைவுடன்
ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்
கணவன், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

தகவல்: மகன் ச.வசீகரன்.
Doha Qatar 0974 5830465

# IAT உலகத் தமிழர் ஆவணக்காப்பகம்

**100 Years History of the Tamil Speaking Community of Sri Lanka in Micro Films**

We are happy to inform you that with the kind assistance of NORAD, we have micro filmed about 100 years history of the Tamil speaking community of Sri Lanka for posterity. We wish to deposit duplicate copies in various locations.
Duplicate copies are available on request. Pl. contact: 08-233547.
Kurumpasiddy Era.Kanagaratnam.I.T.A

| Period. | Reels Nos. |
|---|---|
| 1864 Cey. Petriot/Thesabimani | 01 |
| 1899-1929 Political Clippings taken from Hindu Organ | 02 |
| 1924 Times of Ceylon Supplement on Jaffna | 67 |
| 1930-1957 Eelakesari (Complete Volumes) | 07-18 |
| 1930-1997 Political News-Clippings taken from Eng./Tamil Newspapers of Sri Lanka | 33-51 56-65,111-116 |
| 1947-1982 Suthanthiran | 03-06,52-55 |
| 1946-1948 Kesari | 19 |
| 1954-1977 Tribune | 29-32 |
| 1967-1973 Viduthalai | 187 |
| 1977-1978 Independent | 19 |
| 1982-1990 Saturday Review (Complete Volumes) | 108-110 |
| 1982-1999 Lanka Guardean (Complete Volumes) | 103-107 |
| 1989-1990 Thisai (Complete Volumes) | 101 |
| 1990-2001 Sari nehar (Complete volumes) | 26-28,187 |
| 1993-2001 Thina Murasu (Complete Volumes) | 20-25,186 |
| 1996-2001 London Thamil Times Vaan Murasu (Dec,2000 to May & Eriemalai Dec 2000-May 20001) | 200-204 |
| 1996-2001 France-Eelamurasu | 117-119,188-189 |
| 2001 Edie (March to Aug) | 187 |

**Also we have micro filmed the following:**

| | |
|---|---|
| * Tamil Culture-Edited by Fr. Thani Nayagam | 66-67 |
| * Newspapers & Periodicals published by expatriate Tamils | 68-74 |
| * About 7000 Articles on various subjects & on World Tamils | 75-92,170-179 181-185 |
| * Books on Thanthai Chelva & his Parlimentary Speeches | 101 |
| * E.P.R.L.F. Publications | 102 |
| * Books, Periodicals, Historical documents on Hill country Tamils | 93-100 |
| * Newspapers & Periodicals published in Sri Lanka | 152-169 |
| * Written submissions by TRRO to Sansoni Commission (1977) | |
| * National Assembly Debates on 1977 incidents (Hansard) | |
| * -do- May/June incidents in Jaffna-Burning of Jaffna Library, House of Jaffna M.P., Eelanadu (Hansard) | 180 |
| * Motion of No Confidence in Mr.A.Amirthalingam-Leader of the Opposition-Parlimentary Debates-July 1981 (Hansard) | |

N.B. The other documents together with 5000 political Cartoons, about 2000 Sirithiran Siva's Cartoons will be micro filmed in 2002. Any Historical documents are Accepted for filming.

Each Reel Contains (60 m.m) 1200 Pages
(35 " ) 600 "


Contact :-
**MR.R.KANAGARATNAM.
128/8, HETTIYAWATTA,
MULGAMPOLA, KANDY.**




# அஸ்மா நோய்க்கு வைத்தியம்

அஸ்மா, வீசிங், தொய்வு, இழுப்பு, இளைப்பு, மாய்ச்சல், மூச்சுத்தட்டல், மூச்சடைப்பு, நெஞ்சுச்சளி, மண்டைச்சளி, சுக்கல், இருமல், தடிமன், மூக்கால் நீர் வடிதல், மூக்கடைப்பு, நாசி அரிப்பு, மூக்கரிப்பு, தும்மல், மூக்கினுள் சவ்வு வளர்தல், கண்கடி, கண்ணரிப்பு, தலைவலி, பீனிசம் போன்ற குணங்களுக்கு நிரந்தர சுகம் பெற அஸ்மா சிகிச்சை நிபுணர் டொக்டர் சுறாஜ் சோமசுந்தரம் அவர்களை இல. 25 சில்வெஸ்டர் வீதி, கல்கிசை (மவுண்ட் லெவினியா)(கொழும்பு) எனும் இடத்தில் பழைய நோயாளர்களும், முன் அனுமதி பெற்ற புதிய நோயாளர்களும் தினமும் மாலையில் 4.00மணி முதல் 7.00மணி வரையும், செவ்வாய், வியாழன், சனி கிழமை நாட்களில் காலையில் 9.00மணி முதல் 12.00மணி வரையும் சந்தித்து சிகிச்சை பெறலாம். புதிதாக வரும் நோயாளர்கள் மேற்கூறிய நாட்களிலும் நேரங்களிலும் தொலைபேசி இலக்கம் 074-201582 மூலம் தொடர்பு கொண்டு உங்களுக்கு சிகிச்சை அளிக்கப்படும் நாளையும், நேரத்தையும் முன் அனுமதி பெற்றே (பதிவு செய்து) வரவேண்டும்.


# ஈராண்டு நினைவலைகள்



அன்னை மடியில்
**07.03.1972**
இறைவன் மடியில்
**23.12.1999**

யாழ் தொழில் நுட்பக்கல்லூரி
1994/95 ஆண்டு மாணவனும்
முள்ளானை இளவாலையை
பிறப்பிடமாகவும் இலண்டனை
வதிவிடமாகவும் கொண்ட


## அமரர் செல்வன் தெய்வேந்திரம் விமலன்

எம்வாழ்வின் நண்பா!
அன்பின் உறைவிடமே
கல்விக் கடலில் திளைத்தாய்
உத்தமனாய் வாழ்ந்தாய்
கடல்கடந்து இலண்டன்
சென்றாய்
உம்மை கண்டு நாம்
மகிழ்ந்திருந்த
வேளையில் விபத்து என்னும் காலனால்
விண்ணுலகம் சென்றாயோ
எம்மை பரிதவிக்கவிட்டாயே
உனது ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்
என்றென்றும் உன் நினைவுகளுடன்
வாழும் அன்பு அப்பா, அம்மா, அண்ணா, தம்பி உற்றார், உறவினர்கள்
உயிர் நண்பர்கள்.

தகவல்: எஸ்.சதானந்தன் LONDON
எஸ்.சவுந்தரவேல் DOHA QATAR
MRS. சறோஜாதேவி சண்முகரட்ணம் SWIZERLAND
யா/தொழில் நுட்பக் கல்லூரி N.C.A.T (DAY)மாணவர்களும் நண்பர்களும்.


# மலையாள மாந்திரீகம்





மலையாள மாந்திரீகத்தை இலங்கையில் திட்டவட்டமாகக் கற்றவர் டாக்டர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை, எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச்சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கு மட்டுமே இடமுண்டு எண்ணியவன்-எண்ணியவளைத் திருமணம் முடிப்பதற்குச் சிற சில தடைகளா, திருமணமே நடக்காதா என்ற ஏக்கமா. காதல் தோல்வியாகிவிட்டதா, கணவன்-மனைவி ஒற்றுமை குறைகிறதா, கையில் பணம் தங்கவில்லையா, பணவருவாய் குறைவா, கொடுத்த கடன் திரும்பி வரவேண்டுமா, குடும்ப வாழ்க்கை இனியவையாக அமையவேண்டுமா, லக்சுமி கடாட்சம் பெறவேண்டுமா, வெளிநாட்டுப் பயணத்தில் தங்கு தடை ஏற்படுகின்றதா, தான் பெற்றபிள்ளை தன் பேச்சைக் கேட்கவில்லையா, பெருவாழ்வு-குபேர வாழ்வு பெறவேண்டுமா, குழந்தைப்பேறு கிட்டவில்லை எனக் கவலையா, கல்வியில் சித்தி பெறவேண்டுமா, கடந்த 33 வருடமாக ஸ்ரீ துர்க்கையின் அருட் கடாட்சத்தால் 100க்கு 100% வெற்றி பெற்றவர்கள் எமது பதிவேடு மூலம் தெரிந்து கொள்ளலாம், வெளிநாட்டவர்களுக்கு கடல் கடந்து செயல்பட கூடிய வண்ணம் அதிவிசேட மாந்திரீக உச்சாட்ட பிரிவு மூலம் உடனுக்குடன் அனுப்புவதால் வெற்றியும் உடனுக்குடன் கிடைக்கிறது. இது ஒரு பிரமாண்டமான அங்கீகாரம் பெற்றதும் வரையறுக்கப்பட்ட நிறுவனத்தில் மாந்திரீகப் பிரிவாக அதி உன்னத சேவையின் நிமித்தம் வெற்றி கிட்டுவது மிக மிகச் சுலபம், மாந்திரீக வேலைகள் வெற்றிக்கு அச்சொட்டான திட்டவட்டமான சரிவரும் திகதியும் கொடுப்பது என்றால் அது எமது திருவருளே, அதுமட்டுமல்ல காண்ட அடிப்படையில் ஜாதகங் களையும் கைரேகைகளையும் தெட்டத் தெளிவாக எழுதி அறிந்து கொள்ளலாம். இன்னும், அனைத்து உலக நாட்டில் வசிக்கும் வெளிநாட்டவர்கள் பிரச்சனைகளை உடனுக்குடன் மாந்திரீக சக்தியால் தீர்வு கண்டமையால், எண்ணற்ற வாடிக்கை யாளர்களின் நற்சாட்சிப் பத்திரங்களை எமது நிருவாக பதிவேட்டில் காணலாம்.

**வெளிநாட்டவர்களுக்கென அதி தொழிநுட்பம் வாய்ந்த 24 மணித்தியால தொலைபேசிச் சேவை உண்டு.**

T.P: 00941 342463 , 00941 470615, **தேவைகளுக்கு:-**

**39 வருட மாந்திரீக துறையில் நிலையான சேவை புரியும் உலக மாந்திரீக சக்கரவர்த்தி கௌரவ பேராசிரியர் கருணாகர பூசணம் சொல்லின் செல்வன் டாக்டர் பி.கே. சாமி** (J.D.G.A.N)JP

**உலக மாந்திரீகச் சக்கரவர்த்தி**
Dr.P.K.Saamy J.D.G.A. NL JP
Hon. Prof. (IUMA)
Sri Durgaadevi Manthirika
Uchchada Peedam.

**கொழும்பில்**
No.162,
Kotahena Street,
Mayfield Road,
Colombo 13,
Sri Lanka.

**நுவரெலியாவில்**
33, Daily Fair Complex,
Kandy Road,
Nuwara-Eliya.
052-22508, 052-35097.

வெளிநாட்டார் தொடர்பு கொள்ளவேண்டிய தொ.பேசி
TEL : 00941 431137
FAX : 00941 344831

**உள்நாட்டார்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்**
01-342463, 431137,470615- Fax: 344831
E-mail:drpksamy@sltnet.lk
www.imexpolanka. com/drpksami.



# மனோதத்துவ வைத்தியம் (General Psycho Therapy)

கண்டியிலும் சந்திக்கலாம்

அடிமனதில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை நீக்கி உங்களை நீங்களே வெற்றி கொள்ள நாடுங்கள் பிரபல மனோதத்துவ நிபுணர் DR.P.ஆறுமுகம். அவர்களை சந்தியுங்கள் இளம் சமுதாயத்தினரை வாட்டும் உடல் மெலிவு, கனவில் சக்தி இழத்தல், பயம், ஞாபக மறதி, நடுக்கம், வெட்கம், சந்தேகம், ஏமாற்றம், நித்திரையின்மை, போன்ற தன்னம்பிக்கை இழக்க காரணமான வியாதிகளை மனோதத்துவ சிகிச்சை மூலம் நீக்கி உங்களையே நீங்கள் வெல்லுங்கள்.

**SEXUAL DISORDERS (தாம்பத்திய கோளாறுகள்)**

தாம்பத்திய பாலியல் குறைபாடுகளுக்கு நோயும் காரணமானாலும் 85% தாழ்வு மனப்பான்மையே காரணம். என்பதை 90 நிமிடத்தில் தான் குறைவற்ற ஆண் மகனாகிவிட்டேன். என்று அடி மனதில் பதியவைத்த பின்னரே பணம் பெறப்படும். வெளிநாட்டிலும், உள்நாட்டிலும், பல நூற்றுக்கணக்கான இளைஞர்களை சுகமாக்கிய ஆதாரங்கள் உண்டு.

**வெளிநாட்டில் உள்ளவர்களுக்கு விஷேட ஏற்பாடுகள்**

உங்களின் தாம்பத்திய (பாலியல்) குறைபாடுகளை நீக்க வழியின்றி தவிக்க தேவையில்லை. முழு விபரத்தையும் கடித மூலம். விளக்கி எழுதவும். பின் எமது சில கேள்விகளுக்கு பதில் தெரிந்த பின் தன்னுடைய குறைகள் முற்றாக நீங்க ஏற்ற மனோதத்துவ வைத்தியம் பதிவு செய்யப்பட்ட ஒடியோ கெசட் மூலம் மனோநிலையில் குறையற்றவர் என்றும், உடல் நிலை பாதிப்புக்கு உயர்தர மூலிகை மருந்தும் பெற்று வெற்றி பெற்ற ஆண் மகனாகுங்கள். (அந்தரங்கம் உறுதியாக பேணப்படும்) கட்டாயம் முத்திரை செலவு அனுப்பவும்.

**மட்டக்களப்பு விலாசத்திற்கு மாத்திரம் கடிதத் தொடர்பு கொள்ளவும்**

மனநிலை பாதிப்புக்கள், மன நோய்கள், "ஹிஸ்டிரியா" ஆச்சரியப்படும் வகையில் பலர் சுகமாகியுள்ளார்கள். நீரழிவு (கட்டுப்பாடான நடைமுறையுடனும் சில ஆசனப் பயிற்சியும் அத்துடன் எமது மருந்து பாவித்தும் பலர் நீரழிவு நோயில் இருந்து முற்றாக சுகமாகியுள்ளனர்) மற்றும் ஆஸ்மா, தலையிடி, வாதம், பயோரியா, வெள்ளை போதல், கிரந்தி நோய், குழந்தை பேறு இன்மை, இன்னும் தீர்க்க முடியாத வியாதிகளுக்கும், வைத்தியம் உண்டு. (கொழும்பில் விடுமுறை நாட்களிலும் சந்திக்கலாம்)

**கொழும்பில் டிசம்பர் 23-29 திகதி வரை**

(செல்டெல் இலக்கம் மாற்றப்பட்டுள்ளது)
DR.P.ARUMUGAM S.A.M.P. REG. 9492
New Ahmed Tourist Inn, Bang Bang Building,
Entrance Bankshall Street,No. 10 Reclamation Road, Colombo 11.
T.P. 074-722841, 074-715546 செல்டெல்: 072-664867

**கண்டியில் டிசம்பர் 30-31 திகதிகளில்**

ஆசிரி மெடிக்கல் ஹோல் 45, பேராதெனிய ரோட், கண்டி T.P.074-474156

**கல்முனையில் டிசம்பர் 08, 09 திகதிகளில்**

T.M.M. பாமஸி, கல்முனை. T.P. - 067- 29329

**வவுனியாவில் டிசம்பர் 15, 16 திகதிகளில்**

(தயவு செய்து பதிவு செய்து கொள்ளவும்)
(Vanni Inn) 2ம் குறுக்குத் தெரு, ஞான வைரவர் கோயில் ஒழுங்கை, வவுனியாவில் சந்திக்கலாம் T.P.024-22074, 21406.

கடிதத் தொடர்பு: RESIDENT T.P:- 065-24019
**DR.P.ARUMUGAM S.A.M.P.,**
NO.51/5. Koolavady Road, Batticaloa. SRI LANKA.

# அலசுவது-இராஜதந்திரி

# புதியவர்களின் புதிய பயணம்!!

பிரதமந்திரி ரணில் விக்கிரமசிங்க, இந்தியாவுக்கே தமது உத்தியோகபூர்வ வெளிநாட்டு விஜயத்தை மேற்கொள்கிறார். பிரதமருடன் புதிய வெளிநாட்டமைச்சர் டிரோன் பெர்னாண்டோவும் இந்தியா செல்கிறார்.

இலங்கையைப் பொறுத்தவரை இந்தியா பல்வேறு வகையிலும் முக்கியத்துவம் மிக்கதாகவே இருக்கிறது. இலங்கையின் இனப்பிரச்சனை குறித்தும், இந்தியா ஆர்வங்காட்டி வருகிறது..

1983ம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் இனக்கலவரம் ஏற்பட்டபோது இந்தியப் பிரதமராக இந்திரா காந்தியிருந்தார். அன்றைய வெளிவிவகார அமைச்சராகவிருந்த பி.வி.நரசிம்மராவை உடனடியாகவே கொழும்புக்கு அனுப்பி நிலைமையை அறிந்துவர வைத்திருந்தார், இந்திரா காந்தி.

1983ம் ஆண்டு நிகழ்ந்த ஜூலை



இனக்கலகத்தையடுத்தே இலங்கையின் இனப்பிரச்சனைமீது இந்தியாவின் கவனம் பதியலாயிற்று.

இந்திராவின் மறைவுக்குப் பின்னர், ரஜீவ்காந்தி இலங்கை இனப்பிரச்சனையைத் தீர்த்து வைப்பதில் அக்கறை காட்டினார். இருப்பினும் அவசரப்பட்ட முடிவுகள், தவறான ஆலோசனைகள் போன்றவை காரணமாக ரஜீவ் காந்தியின் அணுகுமுறைகள் எதிர்பார்த்த பலனைத் தரவில்லை.

1987ம் ஆண்டு இலங்கை-இந்திய அமைதி ஒப்பந்தம், அதனைத் தொடர்ந்து இந்தியப் படை வடக்கு-கிழக்கில் ஈடுபடுத்தப்பட்டமை போன்றவை இலங்கை இனப்பிரச்சனை விடயத்தில் இந்தியா கையாண்ட உச்சக் கட்ட நடவடிக்கைகளாக அமைந்திருந்தன.

இருந்தபோதிலும் இந்தியாவினால்கூட இலங்கை இனப்பிரச்சனைக்கு ஓர் ஆக்கபூர்வமான தீர்வைக் காணமுடியாமல் போயிருந்தது.

ஆயினும் இலங்கையைப் பொறுத்தவரை, இந்தியா தவிர்க்கப்பட முடியாத ஒரு சக்தியாகவே இருந்து வருகின்றது.

1994ம் ஆண்டு பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் பதவிக்கு வந்தபோதுகூட முதலாவது உத்தியோகபூர்வ வெளிநாட்டு விஜயமாக ஜனாதிபதி சந்திரிகா இந்தியாவுக்கே சென்றிருந்தார்.

அத்துடன் அவ்விஜயத்தின்போதுகூட இந்தியத் தலைவர்களிடம் இலங்கை இனப்பிரச்சனைத் தீர்வுக்கு ஒத்துழைக்கும் படியும் ஜனாதிபதி சந்திரிகா கேட்டிருந்தார்.

ஆனால் பேச்சளவில் மட்டுமே அவரது இனப்பிரச்சனைத் தீர்வு பற்றிய அணுகுமுறைகள் இருந்து வந்தனவே தவிர எதனையும் நியாயமாகவோ அல்லது நேர்மையாகவோ அவரால் செய்யமுடியாமல் போயிருந்தது.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் கடந்த ஏழு வருடகால பாராளுமன்ற ஆட்சியிலோ அல்லது ஜனாதிபதி ஆட்சியிலோ வடக்கு-கிழக்குப் பிரச்சனைக்கு எவ்வித தீர்வையும் காணமுடியாமல் போயிருந்தது.

இராணுவரீதியான நடவடிக்கைகளே பெரிதும் அதிகரித்திருந்ததுடன், பாரியளவிலான பின்னடைவுகள்கூட அரசியல், பொருளாதார ரீதியா ஏற்பட்டன.

இனப்பிரச்சனையே இலங்கையின் இன்றைய அனைத்துப் பிரச்சனைகளுக்கும் மூலகாரணமாக இருக்கின்றது

பதிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இலங்கையின் வடக்கு-கிழக்குப் பிரச்சனைக்குப் புதியவரல்ல.

மறைந்த ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்த்தனவின் ஆட்சியில் அமைச்சுப் பதவிகளை ரணில் விக்கிரமசிங்க வகித்தவர். 1977ம் ஆண்டிலிருந்து 1994ம் ஆண்டுவரை ஐக்கிய தேசியக் கட்சி மூன்று ஜனாதிபதிகளைக் கொண்டிருந்தது. இந்த மூன்று ஜனாதிபதிகளினதும் விசுவாசத்துக்குரியவராக ரணில் இருந்து வந்தார்.

ஜே.ஆர்.ஜயவர்த்தனவின் காலத்தில் வடக்கு-கிழக்குப்பிரச்சனை குறித்து மேற்கொள்ளப்பட்ட அணுகுமுறைகள், இதன் பின்னர் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவின் ஆட்சியில் பின்பற்றப்பட்ட அணுகுமுறைகள் என்பவை பற்றியும் திரு.ரணில் விக்கிரமசிங்க நன்கறிந்திருந்தார்.

ஜனாதிபதி ஆர்.பிரேமதாசாவின் மறைவுக்குப் பின்னர் குறுகிய காலம் பிரதமமந்திரியாகவும் இருந்து முக்கிய பிரச்சனைகளுக்கு ரணில் முகங்கொடுத்திருந்தார்.

கடந்த ஏழு வருடகாலத்தில் பொதுஜன ஐக்கிய முன்னணி பாராளுமன்ற ஆட்சியை வகித்தபோது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த ரணில் விக்கிரமசிங்க, வடக்கு-கிழக்குப் பிரச்சனை குறித்து மிக அவதானமாகவே நடந்து கொண்டார்.

விதண்டாவாதங்களுக்கோ அல்லது பயனற்ற கருத்துக்கண்ணோட்டங்களுக்கோ ரணில் விக்கிரமசிங்க இடந்தரவில்லை.

நடந்து முடிந்த பொதுத் தேர்தலின்போதுகூட பிரசாரக் கூட்டங்களின் போது ரணில் விக்கிரமசிங்கவும், அவரது கட்சிக்காரர்களும் வடக்கு-கிழக்குப் பிரச்சனை பற்றித் தாறுமாறான பேச்சுக்கள் பேசுவதைப் பெரிதும் தவிர்த்தே இருந்தனர்.

பொதுஜன ஐக்கிய முன்னணிக் கட்சி தனது தேர்தல் பிரசாரத்தின்போது வடக்கு-கிழக்குப் பிரச்சனை சம்பந்தமாக மனம்போன போக்கில் கருத்துக்களை வெளியிட்டிருந்தது.

ஐக்கிய தேசியக் கட்சியை, தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பெரிதும் தொடர்புபடுத்தி பொதுஜன ஐக்கிய முன்னணி தனது பிரசாரங்களை நடத்தியிருந்தது.

ஆனால் எதிர்க்கட்சியாக இருந்தபோது மட்டுமல்ல, நடந்து முடிந்த தேர்தலின்போதுகூட வடக்கு-கிழக்குப் பிரச்சனை சம்பந்தமாக நிதானப் போக்கையே கடைப்பிடித்த ஐக்கிய தேசியக் கட்சி, தொடர்ந்தும் நிதானமாக இருக்கவேண்டியதே அவசியமானதாகின்றது.

பழைய நிகழ்வுகள் நல்ல படிப்பினையாக இருக்கின்றன. நடந்து முடிந்த

கசப்பான அனுபவங்களை அகற்றி பதிய அணுகுமுறைகளோடு அனைத்தையும் ஆரம்பிக்க வேண்டியதே இன்றியமையாததாகின்றது.

நாட்டு மக்கள் இனப்பிரச்சனைக்கு விரைவான தீர்வொன்று காணப்படவேண்டுமென்ற எதிர்பார்ப்புடனேயே திரு.ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான. ஐ.தே.க.வைப் பதவியமர்த்தியுள்ளனர்.

வடக்கு-கிழக்கு மக்கள் இத்தடவை வழங்கியுள்ள தேர்தல் தீர்ப்புக்கூட இனப்பிரச்சனைத் தீர்வையே மையமாகக் கொண்டிருக்கின்றது.

வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில் பதினைந்து ஆசனங்களுடன் முன்னணி வகிக்கும் நான்கு தமிழ்க் கட்சி கூட்டமைப்பு மட்டுமல்ல. ஏனைய தமிழ்க்கட்சிகளின் வெற்றியும் ஓர் அரசியல் தீர்வுக்காக வடக்கு-கிழக்கு மக்கள் வெளிப்படுத்துகின்ற ஏக்கத்தையே எடுத்துக்காட்டியிருந்தது.

கடந்த இரு தசாப்தங்களாக வடக்கு-கிழக்கில் இடம்பெற்று வருகின்ற மோதல்கள் காரணமாக உயிரழிவுகள், பொருளாதாரச் சீரழிவுகளுடன் முழு நாடுமே சின்னாபின்னப்பட்டுள்ளது.

இராணுவ ரீதியிலான அணுகுமுறைகளில் நம்பிக்கை வைத்ததன் மூலம் கிடைத்த பிரதிபலன் அனைத்து மூலவளங்களையும் முடக்கி விடுவதாகவே இருந்தது.

புதிய பிரதமராகப் பதவியேற்றதன் பின்னர் உரை நிகழ்த்திய திரு.ரணில் விக்கிரமசிங்க அமைதியையும், சமாதானத்தையும் ஏற்படுத்துவதே தமது முதல் பணியாக இருக்குமென்று தெரிவித்திருந்தார்.

இந்த முதல் பணியை ஆரம்பிக்கும் விதத்திலேயே தமது பதிய வெளிவிவகார அமைச்சரான டிரோன்பெர்னாண்டோ சகிதம் இந்திய விஜயத்தையும் திரு.ரணில் விக்கிரமசிங்க திட்டமிட்டுள்ளார்.

திரு.ரணில் விக்கிரமசிங்க இலங்கையில் பத்திரிகைத்துறையின் முன்னோடியாகவிருந்த அமரர் டி.ஆர்.விஜேவர்த்தனவின் பேரனாராவார்.

திரு.ரணில் விக்கிரமசிங்கவின் தந்தையாரான காலஞ்சென்ற எஸ்மண்ட் விக்கிரமசிங்க இலங்கையின் ஒரு சிறந்த இராஜதந்திரியாகவும் இருந்தவர்.

அத்துடன் ஏரிக்கரைப்பத்திரிகை நிறுவனம் (Lake House) என்றழைக்கப்படும் லேக் ஹவுஸ் ஸ்தாபனத்தின் நிர்வாக இயக்குநராகவும் திரு.எஸ்மண்ட் விக்கிரமசிங்க பணியாற்றியிருந்தார்.

எனவே பத்திரிகைத் துறைப் பாரம் பரியத்தைக்

கொண்டிருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முன்பொருதடவை கருத்து வெளியிடுகையில், ஒரு பத்திரிகையாளனாக வருவதற்கே தமக்கு விருப்பமிருந்ததாகவும் ஆனால், லேக் ஹவுஸ் நிறுவனம் அரச உடமையாக்கப்பட்டதையடுத்து அந்த விருப்பத்தைத்தான் கைவிட்டதாகவும் தெரிவித்திருந்தார்.

சட்டத்துறையில் காலடி எடுத்து வைத்துப் பின்னர் தமது உறவினரும், முன்னாள் ஜனாதிபதியுமான ஜே.ஆர்.ஜயவர்த்தனவின் அரசியல் பாசறையில் வளர்ந்த ரணில் விக்கிரமசிங்க அரசியல் வாழ்வில் ஏற்ற இறக்கங்களைக் கண்டவர்.

தற்போது ஒரு பதிய அரசியல் அத்தியாயத்தை ஆரம்பித்துள்ள ரணில் விக்கிரமசிங்க, இலங்கையின் விமோசனத்துக்காக நீண்டதொரு பயணத்தையே ஆரம்பிக்க வேண்டியவராகிறார்.

இலங்கையின் பிரதான பிரச்சனையான இனப்பிரச்சனைத் தீர்வுக்கே முக்கியமளிக்கப் போவதாகக் கூறியிருக்கும் திரு.ரணில் விக்கிரமசிங்க சர்வதேச மட்டத்தில் தீர்வு முயற்சிகளுக்கு ஆதரவைத் தேடுவதிலும் தமது அக்கறையை வெளிப்படுத்தியுள்ளார்.

இலங்கை இனப்பிரச்சனைத் தீர்வுக்கு நோர்வேயும் மத்தியஸ்தம் செய்ய முன்வந்திருந்தது. ஆனால் நோர்வேயின் முயற்சிகளை பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு உரிய விதத்தில் ஏற்றுக் கொள்ளவில்லை.

ஆனால் திரு.ரணில் விக்கிரமசிங்க நோர்வேயின் தீர்வு முயற்சியைத்தாம் வரவேற்கப் போவதாகக் கூறியுள்ளார்.

இலங்கை இனப்பிரச்சனைத்தீர்வு விடயத்தில் உதவியளிக்க முன்வந்துள்ள நோர்வேக்கு அமெரிக்கா, பிரிட்டன், இந்தியா ஆகிய நாடுகளும் தமது ஒத்தாசையை வெளியிட்டுள்ளன.

இந்நிலையில் இலங்கை இனப்பிரச்சனைத் தீர்வுக்கான புதிய அணுகுமுறைகள் சர்வதேச ரீதியாகக்கூடுதல் அழுத்தம் நிறைந்தவையாக இருக்குமென்றே எதிர்பார்க்க முடியும்.

இலங்கையின் இனப்பிரச்சனையை ஒருபோதும் இராணுவ ரீதியாகத் தீர்க்க முடியாதென்பதையே அனைத்துத் தரப்பினரும் அறிந்து வைத்துள்ளனர்.

இராணுவ அணுகுமுறைகள் அழிவுகளையே ஏற்படுத்தினவேயன்றி ஆக்கபூர்வமான நடவடிக்கைகளுக்கு



இடந்தந்திருக்கவில்லை.

எதிர்காலத்திலும் இராணுவரீதியிலான நடவடிக்கைகளே தொடருமானால், முழுநாடுமே பெரும் பாதிப்பையே எதிர்நோக்கவேண்டியிருக்கும். அத்துடன் சர்வதேச சமூகம்கூட இலங்கையில் கூடுதல் தலையீட்டினை மேற்கொள்ளக்கூடிய சாத்தியக் கூறுகளும் அதிகமாகவே இருக்கும்.

அப்பாவிப் பொதுமக்கள் நாட்டின் எப்பகுதியைச் சேர்ந்தவர்களாயினும் பாதிக்கப்படுவது, பொதுச் சொத்துக்கள் உடமைகள் என்பவற்றுக்கு சேதங்கள் ஏற்படுத்தப்படுவது போன்ற நடவடிக்கைகள் பயங்கரவாதத்துடன் சம்பந்தப்பட்டவையாகவே நோக்கப்படும்.

வடக்கு-கிழக்குப் பிரச்சனையைப் பொறுத்தவரை குறுகிய அரசியல் லாபங்களுக்கப்பாற்பட்ட நியாயமான அணுகுமுறைகள் கையாளப்பட்டிருக்குமேயானால் பேரழிவுகளைப் பெரிதும் தவிர்த்திருக்கவே முடியும்.

இந்நிலையில் கடந்த காலம், காரசாரமான படிப்பினைகளைத் தந்துள்ளது.

நிகழ்காலம் நிதானமான அதேசமயம் நியாயமான நடவடிக்கைகளை வேண்டி நிற்கின்றது.

புதியவர்கள் எதிர்காலத்தை நோக்கி எப்படிப் பயணத்தை ஆரம்பிப்பார்கள் என்பதற்கு காலந்தான் பதில் கூற வேண்டும்.

## அதிரடி அய்யாத்துரை



**யூ.பி. மகேஸ்வரனுக்கு** போக்குவரத்து அமைச்சர் பதவி கிடைச்சிருந்தால் உடனே வன்னிப்பாதையை திறந்து இன்ர சிற்றி பஸ் விட்டிருப்பார். பாது காப்பு அமைச்சர் பதவியாவது கொடுத்திருந்தால் யாழ்ப்பாணத் துல இருந்து படைகளை அனுப் பியிருப்பார். இந்து கலாசார அமைச்சராக இருந்து கொண்டு உதெல்லாம் எப்பிடி செய்யுற தென்று குழம்பிப் போயிருக்கிறார் மனுஷன்! முன்னைய அர சாங்கத்தில டக்ளஸிடமிருந்த வடக்கு புனர்வாழ்வு அமைச்சுப் பொறுப்பை தன்ர கைக்கு எடுக்கணும் என்று மகேஸ்வரர் ஒடித்திரிந்து, அறிக்கை விட்டும் பிரயோசனமில்லாமல் போச்சு. இப்போ புதிய கதை ஒன்றை எடுத்து விட்டிருக்கிறார். உந்த அமைச் சுப் பொறுப்பு தனக்குக் கிடைக்கிறதை புலிகள் விரும்புறதாயும், அதுக்காக ரணிலை நிர்ப்பந்திக்கும்படி தமிழ்க்கட்சிக் கூட்டமைப்புக்கு புலிகள் உத்தரவிட்டிருப்பதாயும் செய்தி வெளியாகியிருக்கிறது. ஆரம்பத்தில் தனக்குக் கிடைக்கவிருந்த அமைச்சுப் பொறுப்புக்கு கூட்டணிதான் வேட்டு வைத்ததென்று திட்டித் தீர்த்தவர். இப்போது ரெக்கோட்டை மாத்திப் போட்டார்! எது எப்படியிருந்தாலும் யாழ்ப் பாண மண்ணில இருந்து எம்.பி.யாகி இந்து கலாசார அமைச்சரான மகேஸ்வரன் கோட் சூட்டோடு வந்து பதவி ஏற்ற கண்கொள்ளாக் காட்சியை டி.வி.யில பார்த்த உங்களுக்கு என்ன நினைத்தது...?

**இன்னொருத்தரின்ர மனசுல** இருக்குற விஷயத்தை தெரிஞ்சுக்கிற சக்தி மட்டும் இருந்தால் எத்தனை வசதியாகவும், சுவாரஸ்யமாகவும் இருக்குமெண்டு நினைச்சனான்! உந்தமாதிரி ஆசை இதுக்கு முன்னர் வந்ததில்லை என்றாலும் எஸ்.பி.திஸா நாயக்கவுக்கு சந்திரிகா அம்மையாரின் கையால் அமைச்சுப் பொறுப்பு வழங்கைக்க உந்த ரெண்டு பேரின்ரயும் மனசும் எப்படியிருந்திருக்கும் என்று அறியிறதுக்காகவாவது அடுத்தவர் மனசை தெரிஞ்சிக்கிற சக்தி வேண்டும் என்று கடவுளை வேண்டின நான். எனக்கு மட்டுமோ உந்த ஆசை. அருகில் இருந்த ரணில்கூட உதையேதான் நினைச்சிருப்பார். "ஒரு நிமிஷத்துக்கு பிரதமர் பதவி இல்லாவிட்டாலும் பரவாயில்லை. உந்த ரெண்டு பேரின்ரயும் மன ஓட்டத்தை தெரிஞ்சுக்க முடியுமெண்டால்..."

**தன்ர கட்சியில இருந்த ரெண்டு** 'முக்கிய இடது சாரிகளை' ஓரங்கட்டிப் போட்டார் ஜனாதிபதி. அலவியையும் பட்டி வீரக்கோனையும்தான் சொல்லுறன். இடதுசாரிகள், தொழிற் சங்கவாதிகள் என்று கூறி அமைச்சரானதும் தொழிலாளர்களின்ர முதுகுல சவாரி செய்யுற ரெண்டு பேருக்கு நியாயமான பிரா யச்சித்தம் வழங்கப்பட்டிருக்கிறது. அம்மையார் தன்னை ஏமாற் றிப் போட்டாரென்று பட்டி வாக்குத்தாக்கல் செய்திருக்கிறார். தன்ர ஆதரவாளர்களைத்தாக்க வேண்டாம் என்று அலவி பகிரங்க கோரிக்கை விடுத்திருக்கிறார்... உவருக்கு ஆதரவாளர் என்று யாரும் இருக்கினமோ...?!

**புதிய அரசாங்கத்தின்ர** அமைச்சரவையை நினைக்க உந்தாக்கள் சொன்ன ஊழல் இல்லாத வீண் விரயம் இல்லாத ஆட்சியில பாதியாவது கிடைக்குமா என்று சந்தேகமா இருக்கு பார்த்தியளே... சந்திரிகா அம்மையாரின்ர கெபினற்றை மெகா கெபினட் என்று வர்ணிச்சு ஆர்ப்பாட்டம் நடத்தினவையின்ர கெபினட் உதைவிட மெகா சைஸ் சாகிப் போனதப் பார்க்கைக்க உந்த ரெண்டு கட்சியும் ஒரே குட்டையில ஊறின மட்டைதான் என்று தோன்றுது. வாய்ப் பேச்சுக்கு நாட்டு நலன், மக்கள் நலன் என்று பிதற்றினாலும் ஒவ்வொரு கட்சிக்கும் கொடுக்கிற அமைச்சுப் பொறுப்புலயும் சலுகைகளிலையும்தான் உந்த அரசாங்கமும் தங்கி யிருக்குதென்றதுக்கு ரணிலின்ர அமைச்சரவையைவிட வேறு உதார ணம் தேவையில்லை பார்த்தியளே...!

## உண்மைத் தொடர் 36

# உலகை உலுக்கிய சர்வாதிகாரி அடோல்வ் ஹிட்லர்

இரண்டாம் உலக மகாயுத்தத்தின் முதல் பகுதியில் ஹிட்லருக்குக் கிடைத்த வெற்றிகள் போர் தொடர்பான அவனது போதையை உச்சத்துக்கு கொண்டு சென்றிருந்தது. சோவியத் யூனியனை கைப்பற்றும் நீண்டகாலத்திட்டத்தைக் கொண்டிருந்த ஹிட்லர் பிரான்ஸ் மீதான வெற்றியை அடுத்து இறுதியில் ஆட்டைக் கடித்து மாட்டைக் கடித்து, ஆளைக் கடித்த கதையாக பிரிட்டனை கைப்பற்ற திட்டமிட்டான்.



பிரிட்டிஷ் பிரதமராக வின்செண்ட் சேர்ச்சில் இருந்தார். அவரை அச்சம் கலந்த தற்காப்பு நிலையில் வைத்திருக்க ஹிட்லர் திட்டமிட்டான். அதற்காக வேண்டி பிரிட்டன் மீது அச்சமூட்டும் படைப்பலத்தை பிரயோகிப்பதென



தீர்மானிக்கப்பட்டது.

இதற்கென ஜெர்மன் ஆயுதப்படைகளின் முழுப்பலத்தையும் பிரயோகிக்கும் கடல் சிங்கம் என்ற பெயரிலான இராணுவ நடவடிக்கை திட்டமிடப்பட்டது. தனது தளபதிகளுடனான நீண்ட விவாதத்தின் பின்னர் 1940ம் ஆண்டு ஜூலை மாதம் 16ம் திகதி பிரிட்டன் மீது படையெடுப்பது தொடர்பான கட்டளையில் ஹிட்லர் கைச்சாத்திட்டான்.

சோவியத் யூனியன் மீது படையெடுக்க ஜெர்மன் செய்துவரும் தயாரிப்புகளை முடி மறைத்து கவனத்தை திசை திருப்புவதும் பிரிட்டன் மீதான தாக்குதலின் மற்றொரு நோக்கமாக இருந்தது.

தனது வான் படையை பயன்படுத்தியே ஹிட்லர் பாரிய தாக்குதல்களை நடத்தினார். அத்திலாந்திக் பகுதியில் நிலை கொண்டிருந்த ஜெர்மன் கடற்படைப் பிரிவுகள் தமது தாக்குதல் திறனை விஸ்தரித்தன.

எவ்வாறாக இருந்தபோதிலும் சோவியத் யூனியனை கைப்பற்ற வேண்டும் என்ற அதீத ஆசையும் அதற்கான பாரிய தயாரிப்புகளும் பிரிட்டன் மீதான முழுக் கவனத்தையும் செலுத்த முடியாத நிலைக்கு ஹிட்லரை தள்ளி விட்டிருந்தது.

அப்படியிருந்தும் கூட ஜெர்மன் போர் விமானங்கள் லண்டன் மீதும் ஏனைய பிரிட்டிஷ் நகரங்களின் மீது குண்டு மழை பொழிந்தன.

சுமார் ஒருமாத காலத்தில் பிரிட்டனில் 60 ஆயிரம் குண்டுகள் போடப்பட்டன. ஆனால் ஹிட்லரின் முக்கிய நோக்கம் முழுவதுமாக நிறைவேறவில்லை. போரில் இருந்து பிரிட்டனை வெளியேற்ற வேண்டும் என்று அவன் திட்டமிட்டிருந்தான் அது நடைபெறவில்லை. ஆங்கிலப் படைகள் ஜெர்மனிக்கு எதிரான யுத்தத்தை தொடர்ந்தன. அதன் பின்னர் உலக ஆதிக்கத்தை நிலை நிறுத்துவது தொடர்பாக தனது ஏனைய திட்டங்களை செயற்படுத்துவதற்கு ஹிட்லர் தயாரானான்.

இரண்டாம் உலக மகாயுத்தத்தின் தலைவிதியை நிர்ணயித்த சோவியத் யூனியன் மீதான தாக்குதல் திட்டம் குறித்து இதே ஆண்டு ஜூலை 30ம் நாள் ஹிட்லரின் படைத் தலைமையகத்தில் ஆராயப்பட்டது. ரஷ்யா முறியடிக்கப்பட்டால் பிரிட்டன் தனது நம்பிக்கையின் இறுதி மூச்சை இழந்துவிடும் என்று இராணுவ அதிகாரிகள் மத்தியில் ஹிட்லர் கூறினான்.

இதற்கிடையில் கைப்பற்றிய நாடுகளில் சிறைபிடிக்கப்பட்ட இலட்சக் கணக்கான சிப்பாய்களும் பொதுமக்களும் இரவிரவாக ரயில்களில் ஏற்றிவரப்பட்டு சித்திரவதைக் கூடங்களில் கொன்று குவிக்கப்பட்டார்கள். பிரான்ஸில் கைது செய்யப்பட்ட சுமார் 3 ஆயிரம் பெண்களை மாத்திரம் ஏற்றிவந்த ரயில் ஒன்று நேராக அவுட்ஸ்விக்கில் உள்ள சித்திரவதை முகாமை வந்தடைந்தது. இந்த முகாம் குறித்து ஏற்கனவே அறிந்திருந்த பிரான்ஸ் வாசிகள் முகாம் வாசலில் ரயில் தரித்ததுமே மரண ஓலம் எழுப்ப ஆரம்பித்தனர். இதில் வந்தவர்கள் ஏற்கனவே சிலகாலம் பாரிஸில் உள்ள அகதி முகாம் ஒன்றில் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்கள். அங்கு சிலருக்கு அம்மை நோய் தொற்றியிருப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. அதனால் அவர்களை தடுப்பு மருந்தேற்றிய பின்னர் முகாமுக்குள் அனுமதிக்குமாறு சிபாரிசு செய்யப்பட்டிருந்தது.

ரயில் முகாமை அடைந்ததும் நிலமையை ஆராய்ந்த அவுட்ஸ்விக் அதிகாரிகள் குறிப்பிட்ட ரயிலில் வந்துள்ளவர்கள் தொற்று நோயினால் பீடிக்கப்பட்டிருப்பதால் அவர்களில் எவரையும் முகாமுக்கு அனுப்புவதில்லை என தீர்மானித்தனர்.

மூவாயிரம் பேரையும் என்ன செய்வது என்று ஹிட்லரிடம் தொலைபேசியில் கேட்டான் முகாம் தளபதி. அப்போது ஹிட்லர் ஈவாவை அணைத்துக் கொண்டு உச்சகட்ட மூட்டில் காணப்பட்டான். அந்த தொலைபேசி அழைப்பு அவனுக்கு கடும் எரிச்சலை உண்டுபண்ணியது. ஈவாவின் கழுத்துக்குக் கீழ் கைகளை ஓடவிட்டுக் கொண்டே முகாம் அதிகாரியை திட்டி

### ஷொனு

னான். ஆக மூவாயிரம் பேரின் முடிவை நிர்ணயிக்க இந்த நேரத்தில் நீ எனக்கு போன் செய்திருக்கக் கூடாது. தொற்று நோயாளிகளை முகாமுக்குள் அனுமதிக்க முடியவில்லை என்றால் நோராக நெருப்பு உலைக்குள் அனுப்பிவை. அதற்கு முன்னர் மறவாமல் அவர்கள் அணிந்திருக்கும் தங்க நகைகளையும், ஆடைகளையும் களைந்துவை என மிகவும் சாதாரணமாக கூறினான் ஹிட்லர். அங்கே மூவாயிரம் பெண்களின் மரண ஓலம் ஒரே நேரத்தில் அவுட்ஸ் விக்கை அதிரவைத்தது. இங்கு ஹிட்லரின் அசைவுகள் ஈவாவை அதிர வைத்தன.

**வருவான்...**

# மூண்டது போர் 10

**தருவது ~ தண்டாயுதன்**



டோராபோரா மலைப்பகுதியில் தேடுதல் நடத்தும் வடக்கு முன்னணி படை

☛ ஆப்கானிஸ்தானில் இத்தடவை ரமழான் பண்டிகை வெகுவாகக் களைகட்டியிருந்தது. இதுவரைகாலமும் தலிபான்கள் கொண்டாட்டங்களை அனுமதிக்கவில்லை. ஆடை, அணிகலன்கள், அலங்காரங்களுக்கு இடந்தரவில்லை. ஆடல், பாடல்களும் தடைசெய்யப்பட்டன. ஆனால் இத்தடவை ரமழான் பண்டிகையை ஆப்கானிஸ்தான் மக்கள் உற்சாகமாகக் கொண்டாடினார்கள். பெண்கள் தமது முகத்திரையை விலக்கி பண்டிகை வாழ்த்துக்களைக் கூறினார்கள். இசைநிகழ்ச்சிகளும் நடந்தன. மசூதிகளில் விரிவான வழிபாடுகளில் வடக்குக்கூட்டணிப்படையினர் தமது தலைவர்கள் சகிதம் போய் போற்றினார்கள்.

☛ அமெரிக்காவின் குண்டுவீச்சு விமானங்கள் ஆப்கானிஸ்தானின் டோராபோரா மலைக் குன்றுகள் மீது குண்டுமாரி பொழிகின்றன. இதனால் மலைமுகடுகள், தகர்ந்து போகின்றன. மலைகளில் அடர்ந்து, படர்ந்துள்ள காட்டுமரங்கள் குண்டு வீச்சுக்களில் சிக்கித் தீப்பிடித்து காட்டுத் தீ கூட வேகமாகவே டோரா போரா மலைக் காடுகளில் பரவுகின்றன.

☛ டோராபோரா மலைக்குன்றுகள் மீது அமெரிக்க விமானங்களின் குண்டுவீச்சுக்கள் ஒருபுறம் இடம்பெற்றுக் கொண்டிருக்க அமெரிக்க விசேட படையணிப்படைகள் டோரா போராவிலுள்ள மலைக்குகைகளில் ஒசாமா பின்லாடனைத் தோடித் தேடுதல் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர். கரடுமுரடான தரையமைப்பில் போரிடுவதிலும் தேர்ச்சி பெற்ற அமெரிக்க விசேட படையணி முதுகில் பாரமான உபகரணங்களைச் சுமந்தபடி டோரா போரா குன்றுகளில் உள்ள குகைகளுக்கு நுழைந்து ஒசாமாவைத் தேடுகின்றன.

☛ பன்னிரெண்டு வருடங்களுக்குப்பின்னர் ஆப்கானிஸ்தான் தலைநகர் காபுலில் அமெரிக்கக் கொடி ஏற்றப்பட்டுள்ளது. இதன்மூலம் அமெரிக்கா தனது இராஜதந்திர உறவை மீளவும் ஆப்கானிஸ்தானுடன் ஆரம்பித்துள்ளது. ஆப்கானிஸ்தானின் இடைக்கால ஆட்சியாளர்கள் முழுமையாக ஆப்கானிஸ்தான் சீரடையும்வரை அமெரிக்கா ஆப்கானில் நிலை கொள்ள வேண்டும்மெனக் கேட்டுக் கொண்டுள்ளனர்

☛ சாத்தான் வேதம் ஓதியதாம் எனக் கூறக் கேட்டுள்ளோம். அண்மையில் இந்தியப் பாராளுமன்ற வளவில் நடத்தப்பட்ட தாக்குதல் குறித்து அமெரிக்கா இந்தியாவை அமைதியாக இருக்கும்படி கேட்டுள்ளது. பாகிஸ்தானின் கையாட்களே அத்தாக்குதலை நடத்தியதாகவும், இதற்குப்பதிலடி கொடுக்கத் தயாராக இருப்பதாகவும் இந்தியா எச்சரித்துள்ளது. ஆனால் அமெரிக்க இராஜாங்க அமைச்சர் ஜெனரல் கொலின் பவல் இதுபற்றிக் கருத்து வெளியிடுகையில் அனைத்தையும் சரிவர ஆராய்ந்தபின்னர் நிதானமாக இந்தியா செயல்படவேண்டுமெனக் கூறியுள்ளார். அப்படியானால் அமெரிக்கா ஆப்கானிஸ்தானில் புரியும் வேலையை என்னவென்பது?

☛ ஆப்கானிஸ்தானில் ஐக்கிய நாடுகள் ஸ்தாபன அமைதிப்படையில் அங்கம் பெறும் விதத்திலும் பிரிட்டன் படையினரை அனுப்பிவைக்கிறது. அமெரிக்காவுடன் சேர்ந்து போரிட்டு வரும் அமெரிக்க படையினருக்குப் புறம்பான வகையில் அமைதிப் பணியில் இந்த பிரிட்டிஷ் படைகள் பங்குபற்றும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



நோனபுப பெருநாளைக கொணடாடும் ஆபகான நிராயுதபாணிகள

☛ ஆப்கானிஸ்தானுக்குள் நுழைந்துள்ள அமெரிக்கா தனது சொந்த அரசியல் நலன்களிலேயே கூடுதல் அக்கறை கொண்டிருப்பதை அறியமுடிகிறது. புதிதாகத் தோற்றம் பொறும் ஆப்கானிஸ்தான் முழு அளவில் அமெரிக்கா சார்பானதாக இருக்க வேண்டுமென்ற விதத்திலேயே காய்கள் நகர்த்தப்படுகின்றன. இதன் மூலம் சீனா, ரஷ்யா போன்றவற்றையும் அமெரிக்கா மத்திய ஆசியாவிலிருந்து கண்காணிக்கமுடியும்.

**(தொடரும்)**

# ஹலோ குட்மோனிங்

உணவு தேடி வெளியில் கிளம்பிய வட துருவ பனிக் கரடிகள் இரண்டு இடையில் சந்தித்து கொஞ்சிக்குழாவும் படம்தான் இது.

கனடா நாட்டில், வட துருவ பகுதியில் உள்ள 'ஹட்சன் பே' என்ற இடத்தில் தான் இந்த அபூர்வ காட்சி. பெரிய பனிக்கரடியின் உயரம் 9 அடி. சிறியது 7 அடி. வட துருவத்தில் எங்கும் பனி, எதிலும் பனிதான். கடற்கரையை ஒட்டிய பகுதியில் பனி உறைந்து நீரை மூடியிருக்கும். இந்த கரடிகள் தங்களது வலுவான கால்களால் பனியை உடைத்து தண்ணீருக்குள் அமிழ்ந்து இரைகளை பிடித்து தின்னும். கொழுத்த மீன், நீர் நாய்கள் போன்றவை இவற்றின் உணவு!



# சிட்னி சூரன்

இந்துக்கடவுள் முருகன். முருகனுக்கு எங்கெல்லாம் கோயில் இருக்கிறதோ அங்கெல்லாம் கந்தசஷ்டி விரதம் இடம்பெற்று சூரன் போரும் நடக்கின்றது. இங்கு போருக்கு தயாராக இருப்பது சிட்னி சூரன். அதாகப்பட்டது. அவுஸ்திரேலியாவில் வாழும் இலங்கையர்கள் சிட்னி நகரில் உள்ள முருகன் ஆலயத்தில் நடத்திய சூரன் போரில் கதாநாயகனாக இருந்தவர். புலம் பெயர்ந்த இலங்கைத் தமிழர்கள் ஐரோப்பாவிலும் தூரகிழக்காசிய நாடுகளிலும் தமிழ் பண்பாட்டு விழுமியங்களை மெருகேற்றும் நிகழ்ச்சிகளை தொடர்ச்சியாக நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# காண்டாமிருகத்துடன் கொஞ்சல்

மிகவும் சக்தி மிக்க மிருகங்களில் ஒன்றாக காண்டாமிருகம் கருதப்படுகின்றது. வலிமையும், பெருமதியும் மிக்க காண்டாமிருகத்தின் கொம்புகளை பெறுவதற்காக இவை உலகம் முழுவதிலும் வேட்டையாடப் படுகின்றன. ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் அழிந்து வரும் மிருக வர்க்கங்களில் பட்டியலில் இவையும் உள்ளடக்கப்பட்டுள்ளன. இவ்வாறான காண்டாமிருகத்துடன் ஆபத்தை அறியாது கொஞ்சிக் குழாவும் ஒரு சின்னஞ் சிறுவனைத்தான் படத்தில் காண்கிறீர்கள். இது பனாமா நாட்டில் க்ளிக் செய்யப்பட்டது.



# பிரான்ஸ் ஆஞ்சநேயர்



இறக்கையுடன் கூடிய கொம்பு முளைத்த ஆஞ்சநேயரின் அதிசய சிலையொன்று பிரான்ஸ்நாட்டில் உள்ள தேவாலயம் ஒன்றில் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு வழிபாடு செய்ய வரும் பக்தர்களுடன் கூடவே வந்து சேரும் தீய சக்திகள் ஆலயத்துக்குள் நுழையாமல் இருக்கவும் பிரார்த்தனைக்கு வருவோரை காத்திடவுமே ஆலயவளவில் இந்த ஆஞ்சநேயர் சிலை வைக்கப்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் நம்புகின்றனர்.

## தகவல் பெட்டி



புதுமுகம் சாருலதா

## மினி சினி

- 'சித்தி' ஹிட்டானதால் 'சித்தப்பா' வருகிறது! அண்ணனுக்கு ஆறு பிள்ளைகள்! விபத்தொன்றில் அண்ணன் இறந்து விட அண்ணன் பிள்ளைகளை தன் பிள்ளையாக பாவித்து வளர்க்கும் தம்பி கதை தான் 'சித்தப்பா!' இத்தொடரை இயக்கி தயாரிக்கிறவர் அரிராஜன்!
- கல்யாண முடிவு நடிப்பை ஒத்திவைத்திருக்கும் ஹரிதா சின்னத்திரை சீரியல்களை தயாரிக்க முடிவு பண்ணியிருக்கிறார்! இவர் பாணியில் தன் பினாமி பெயரில் டி.வி. நிகழ்ச்சிகளை தயாரிக்கப் போகிறவர் ரோஜா!
- சன் டி.வி. 'நேருக்கு நேர்' பேட்டிக்கு விஜயை அணுகினார்கள்! திரையுலக கட்டுப்பாட்டை சுட்டிக்காட்டி மறுத்தார் விஜய்! ஏற்கெனவே ஒப்பந்தம் போட்ட மாதிரி செட்டப் பண்ணலாம் என சன் சொன்னது! ஆனால் முடியவே முடியாது என மறுத்துவிட்டார் விஜய்!
- லைலா சென்னை வரும்போது தன் அப்பாவையும் உடன் அழைத்து வருகிறார். ஆந்திராவைச் சேர்ந்த சினேகா தன்னை தமிழ்ப்பெண் என்று சொல்லி வருகிறார்.
- 'ஆளவந்தான்' படத்தில் கமலின் அண்ணன் மகள் அனுஹாஸன் நடிக்கிறார். அவருக்கு என்ன வேடம் தெரியுமா? கமலுக்கு அம்மா வேடம்!
- பாலசந்தர் இயக்கும் 'பார்த்தாலே பரவசம்' படத்தின் தெலுங்கு ரைட்ஸை ஏ.எம்.ரத்னம் வழங்கி இருக்கிறார். அதோடு அதிரடியாய் விளம்பரமும் செய்து வருகிறார்.
- ஒரே ஷெட்யூலில் 'காசி' படத்தை முடித்துக் கொடுத்த விக்ரம், கிடப்பில் போடப்பட்ட 'காதல் சடுகுடு' படத்தை முடிக்கும் முயற்சியில் அந்த படத்திற்கு மொத்தமாக கால்ஷீட் கொடுத்திருக்கிறார்.
- விக்னேஷ் நடிக்கும் 'சூரி' படம் பணப் பிரச்சனையால் நிறுத்தப்பட்டது. இப்போது பைனான்ஸ் வாங்கி மீண்டும் படத்தை ஆரம்பிக்கும் முயற்சியில் இறங்கியுள்ளனர்.
- 'தமிழன்' படத்தில் அம்மா கேரக்டரில் நடிக்கும் கௌதமி 'இந்திரா' என்ற டி.வி.சீரியலில் கதா நாயகியாக நடிக்கிறார். இதை 'மிலிட்டரி' படத்தை தயாரிக்கும் சித்திக் தயாரிக்கிறார்.
- தென்காசி பட்டணம்' தமிழ் ரீமேக்கை மனோஜ் குமார் இயக்குவதாக இருந்தது. இப்போது அவரை நீக்கி விட்டனர். பிரபல மலையாள இயக்குநர் ஒருவர் இந்த படத்தை இயக்குகிறார்.



## ஜோதிகாவின் மனம் கவர்ந்

உங்களுக்கு எந்த நடிகரை ரொம்பப் பிடிக்கும்? என்ற கேள்விக்கு பெரும்பாலும் இன்றைய முன்னணி நடிகைகள் எல்லோருமே எஸ்கேப் ஆகிவிடுவார்கள் காரணம், ஏன் தேவையில்லாமல் வம்பில் மாட்டிக்கொள்வானேன் என்ற நல்லெண்ணம் தான் ஆனால் இந்த வரம்புகளை மீறி ஜோதிகா...

இன்றைய தமிழ் இளம் ஹீரோக்களில் உடம்பை கட்டுமஸ்தாகவும், கட்டுக்கோப்பாகவும் வைத்துள்ள ஒரே நடிகர் பிரசாந்த் தான் என்று பிரகடனப்படுத்தி யுள்ளார்.

பொதுவாக பிரசா... வில் பிரதான தகுதி... படுகிற சண்டைப் ப... முஸ்லொண்டஸ். உட... தன்னை ஒரு முழு... ஆவதற்கான அத்த... யும் தனக்கென வளர்... வர்.

இதுவரை அழுக... மீசை இல்லாமல் நடி... சாந்த் வரும் 'தமி... பிறகு மீசை முளை... சாந்த்தாக வரப்போகி... பராக்... பராக்.



பிரபுதேவா-காயத்ரி ஜெயராம்
படம்: மனதைத் திருடிவிட்டாய்

## சத்தியமானவரின் மன்மத லீலைகள்

திரையுலக மறுபக்கம் 218

தமிழ்நாட்டிலிருந்து மயன்

'தலைவா எதுனா ஃபீகருங்க மாட்டினா விட்டுடாதீங்க. மெய்ஞ்சிடுங்கோ...' இது தன்னிடம் நெருக்கமாக பேசும் சகாக்களிடம் சத்யமான நடிகர் வழக்கமாக பேசும் சொந்த வசனம்...

அது சரி அந்தவிஷயத்தில் சத்யமானவர். எப்படி..?

குறிஞ்சிப் பூ என்றில்லை கொத்தவாசாவடி பூ கிடைத்தாலும் விடாத சமத்துவராஜ்!

சில வருடங்களுக்கு முன்பு சத்யமானரும் லேடி சூப்பர்ஸ்டாரினியும் இணைந்து பிரம்மாண்டமாக 'ராஜா ராணி' படம் ஆரம்பிக்க இருந்தது. சூப்பர்ஸ்டாரினி ஏகப்பட்ட லகரங்கள் கேட்க 'இந்நூறு ரூபாய் பார்ட்டியான அம்மணிக்கா? இம்புட்டு கிராக்கி' என்று தகடு ராஜ கமெண்ட் அடிக்க அதைக் கேட்ட பெருமகன்களில் ஒருவர் சூப்பர்ஸ்டாரினி காதில் விஷயத்தைபோட, டென்ஷன் உச்சத்திற்கு போன அவர் 'நோ கால்ஷீட்' என்று எகிறினார். படம் பூஜை போட்டதோடு அம்பேல்.

'அம்பி' நடிகையுடன் வில்லனாக நடித்த காலத்திலேயே ஏ.ஆர்.எஸ். கார்டனில் தனியறையில் ஹீரோவாக மாறி கில்மா பணிகளில் ஈடுபட்டார். தாய் நாடு படத்தில் வித்தியமான ஸ்ரீ நடிகையோடு டிஸ்கஷன் நடத்திவிட்டு வெளியே வந்தபோது 'அப்பாடா பதினைஞ்சி வருஷ ஆசை இப்பத்தான் பலமாயிருச்சி' என்று ஆசுவாசப்பெருமூச்சு விட்டார்.

சரோஜாதேவி சாயல் கொண்ட வாழ்க்கை தொடர் நாயகியின் பரந்த மனசுக்கு சொந்தமானார் புது மனிதன் படத்தின் மூலம் இணைந்தார்கள். அதன் பின் ஏகப்பட்ட படங்களில் இந்த காம்பினேஷன் களை கட்டியது. உதாரணத்துக்கு, பங்காளி படத்தில் ஒரு பாடல் காட்சியில்- இடையில் உள்ள தண்ணீரை வாயால் சத்தியமானவர் மீது கொப்பளிப்பார் வாழ்க்கை நாயகி அப்போதே அதன்நெருக்கம் உணர்ந்தவர்கள் தெளிந்தார்கள். அது அப்படி ஒன்றும் ஹைலைட் காட்சி கிடையாது.

அதன்பின் அண்ணாத்தேக்கு தோதான அம்மணிகள் யாரும் அகப்படவில்லை. காரணம் படங்களே கையிலில்லாதபோது பைங்கிளிகள் எப்படி சிக்குவார்கள்?

கோடை மழை மாதிரி, அங்கொன்றும் இங்கொன்றும் வாய்ப்புகள் வர ஆரம்பித்தது இடையில் 'வில்லாதி வில்லன்' என்றொரு படத்தை டைரக்ஷன் செய்து ஜோதிமயமானவரின் அக்காவின் பாவத்தையும், கோபத்தையும் வாங்கி கட்டிக் கொண்டார்.

மலையாள ஃபீல்டில் விளித்துக்கு ஜோடியாக நடிக்கும் திவ்யமானவரையும் தனக்கு ஹீரோயினாக போட்டுக் கொண்டார். 'ஷாஜகான்' படத்தில் ஹீரோயினாக நடிக்க இருந்த அம்மணி வயசான ஹீரோவுக்கு ஜோடி சேர்ந்தால் அம்மணிக்கு அந்த வாய்ப்பு பறி போனது. அப்புறமென்ன தேங்காய் எண்ணெய் தேகத்தை ஒரு கை பார்த்தார் சத்தியமானவர்.

அப்புறம் பிரதி நடிகை இவரிடம் கிளாமர் கொஞ்சம் டிவிசைன் காட்டுங்க என்றால் சினிமாஸ்கோப் சைஸ் காட்டுகிற தாராள அம்மணி. தம்மாதுண்டு ட்ரெஸ்ஸில் வந்தார். அப்புறமென்ன உடைஞ்சி போன கண்ணாடி துண்டை கம் போட்டு ஒட்டவச்ச மாதிரி ரெண்டு பேருக்கும் இப்ப அம்புட்டு அன்னியோன்யம்.

ஆனா, நேத்திக்கு ஒன்னு, இன்னிக்கு ஒன்னு மாதிரி பேசற ரகம் கிடையாது. எப்ப பேசினாலும் ஒரே வார்த்தைதான் அதில் மாற்றமே கிடையாது...

இப்போதுகூட தன்னை பார்க்க வரும் நெருக்கமானவர்களிடம்

'தலைவா எதுனா ஃபீகருங்க மாட்டினா விட்டுடாதீங்க மெய்ஞ்சிடுங்கோ' என்று அதே பல்லவியை பாடுகிறார்.

மாறிவரும் உலகில் இந்த விஷயத்தில் மாறாத மனிதர் லிஸ்டில் முதலிடம் இந்த ராசாவுக்குத்தான்!

## அஜீத்தின் சிவப்பு சிந்தனை


அல்டிமேட் ஸ்டார் அஜீத் நடிக்க தற்போது தயாராகி கொண்டிருக்கும் படம் 'ரெட்'.

இப்படத்தின் இயக்குநர் 'ராம் சத்யா', இயக்குநர் சுந்தர். சியிடம் இணை இயக்குநராக இருந்தவர். இரண்டு படங்களுக்கு கதை வசனமும் எழுதியிருப்பவர். இயற்கையிலேயே நகைச் சுவை உணர்வு உள்ளவர். பேசும் போதே நகைச்சுவையாகப் பேசக்கூடியவர். ஆனால் இவர் இயக்கும் முதல் படம் படு சீரியஸான கதை கொண்டது.

'ரெட்' படம் சிவப்பு சிந்தனையான படமா? என இயக்குநர் ராம்சத்யாவிடம் கேட்டால்

"ஒரு நியாயமான விஷயத்தைச் சொன்னா... உடனே சிவப்பு சிந்தனைங்கிறதா தலைவா... வித்தியாசமா இருக்கட்டுமேன்னு தான் படத்துக்கு ரெட்டுன்னு பேர் வச்சோம். கிட்டத்தட்ட இரண்டு வருஷத்துக்கு முன்னாலேயே இந்தப் படத்தோட கதையை நான் அஜித்கிட்ட சொல்லியிருக்கேன்.

இந்தக்கதை தமிழ் சினிமாவுக்கே புதுசா இருக்கும். கதை நடைபெறும் களம் மதுரையில் இருக்கிற மாதிரி என்பதால் ஹைதராபாதில் மதுரை தெரு, அங்குள்ளதைப் போன்றே வீடுகள், கடைகள், குடிசைகளும் செட்போட்டோம். அஜித் சார் அருமையாக நடிச்சிருக்கார். படத்தை எடுத்தவரையில் டபுள் பாசிட்டிவ் பார்த்து படம் ரொம்ப நல்லா வந்திருக்குன்னு திருப்தியடைந்தார். படத்தை இன்னும் பெட்டரா பண்ணனும். செலவைப் பத்தி கவலைப்படாதேன்னு தயாரிப்பாளரும் சொல்லி விட்டார். என்னுடைய முதல் படம் அஜித்தை வைத்து இயக்குவேன் இவ்வளவு பிரமாண்டமாக படம் வருமனு நான் கனவுலகூட நினைக்கல. ரெட் அஜித் ரசிகர்கள் மட்டுமின்றி அனைவருக்கும் ரொம்பப் பிடிக்கும். கதை உண்மைசம்பவத்தை அடிப்படையாகக் கொண்டது" என்றார் இயக்குநர்.





அஜித்
படம்: ரெட்

## மோகன்லாலுடன் தகராறு!

'ப்ரண்ட்ஸ்' படத்தை தயாரித்தவர், அப்பச்சன். மோகன்லால் நடிக்கும் எல்லா படங்களுக்கும் 'பைனான்ஸ்' செய்பவர். அப்பச்சன்தான் தயாரிப்பாளர் யாராக இருந்தாலும், அவர்களுக்கு ஒரு விலையை கொடுத்து படத்தின் முழு உரிமையையும் எழுதி வாங்கிக் கொள்வார். அப்படி சமீபத்தில் எழுதி வாங்கிய, படங்கள், 'ராவண பிரபு', 'பிரஜா' இந்த இரண்டு படங்களும் அப்பச்சனுக்கு கை கொடுக்கவில்லை. மாறாக கையை கடித்துவிட்டன.

இந்த தகவலை அப்பச்சன், மோகன்லாலிடம் தெரிவித்தார். தனது பணம் ரூ.4 கோடி போய் விட்டதாக சொன்னார். அதைத்தொடர்ந்து லாலுக்கும், அப்பச்சனுக்கும் இடையே வாக்குவாதம் நடந்து அது வளர்ந்து சண்டையில் முடிந்தது. அப்பச்சனுக்கு இனிமேல் படங்கள் தருவதில்லை என்று முடிவு எடுத்து இருக்கிறார் மோகன்லால்!

## சூப்பர் ஸ்டாரின்

அசோக் அமிர்... முதன்முதலாக 'ப... ஆங்கிலப்படத்தில் ... தற்போது இந்தப்பட... என்ற பெயரில் மொழி... படுகிறது! இதற்கு தமிழ்... போகிறவர் மோகன் ... இசை-இளையராஜா.

## ஷாமுடன்

பிரியதர்ஷன் இய... நடிக்கும் பெயரிடப்ப... ஷாமிற்கு ஜோடியாக ... அதில் ஒருவர் பிர... த்ரிஷா!



மம்முட்டி-மலேசியா அழகி லீனா
படம்: ஜூனியர் சீனியர்

# வெண்திரைக்கு வரும் தினா

சின்னத்திரையின் ஏ.ஆர். ரகுமான்' என்று சொல்லும் அளவுக்கு இசையமைப்பாளர் தினா கலக்கிக் கொண்டிருக்கிறார். அவர் இசைத்த டைட்டில் பாடல்கள் தான் எல்லா சேனல்களிலும் சூப்பர் ஹிட்!

சின்னத்திரையில் பெற்ற வெற்றியை சினிமாவில் பெறும் நோக்கில் வெண்திரைக்கு வரும் தினா, விக்ரம் நடிக்கும் 'கிங்'ராவுத்தர் தயாரிக்கும் 'நான் பாட நினைப்பதெல்லாம்' போன்ற படங்களுக்கு இசையமைத்து வருகிறார்.

சின்னத்திரை கசந்து விட்டதா? என்று கேட்டால்,

'இல்லை. சினிமாதான் என் பலவருட லட்சியம். இங்கதான் நான் மியூசிக் பண்ணினேன்.

சினிமாவுக்கு இசையமைக்க முயற்சி செய்த நேரத்தில் டி.வி. தொடர் வாய்ப்புகள் வர அதில் பிஸியாகி விட்டேன்" என்ற தினா, இனி தொடர்களை குறைத்துக்கொண்டு படங்களில் கவனம் செலுத்தப் போகிறாராம்.

"நல்ல கதை, நல்ல பேனர், நல்ல டைரக்டர் அமைந்தால் என்னை முழுமையாக நிரூபித்துக் காட்டுவேன். 'கிங்' படம் எனக்குக் கிடைத்த அற்புதமான வாய்ப்பு. அந்தப் படத்தில் வித்தியாசமான இசையை வெளிப்படுத்தி இருக்கிறேன்" என்கிற தினா, விரைவில்மெகா புராஜெக்ட் படத்திற்கு இசையமைக்க இருக்கிறாராம்.



வெங்கடேஷ்-சிம்ரன்-ஆஷாசைனி-இஷாகோபிகர்
படம்: காதல் கலாட்டா

## ஆகாஷ் நடிக்கும் 'மியூசிக்'

கோகுலம் மீடியாஸ் என்னும் புதிய படநிறுவனம் 'மியூசிக்' என்ற பெயரில் ஒரு படம் தயாரிக்கிறது. இந்த படத்தில் ஆகாஷ் கதாநாயகனாக நடிக்கிறார். இவர் நடித்த 'ஆனந்தம்' என்ற தெலுங்கு படம், ஆந்திராவில் 100 நாட்களை தாண்டி ஓடிக் கொண்டிருக்கிறது.

அந்த படத்தில் கதாநாயகியாக நடித்த பெங்களூர் அழகி ரேகா வேதவியாசா 'மியூசிக்'படத்திலும் கதாநாயகியாக நடிக்கிறார்.

## காஜாமைதீனின் 'சமஸ்தானம்'

கட்டிக்குழந்தை,கோபாலா கோபாலா,பொற்காலம், பூந்தோட்டம், ஆனந்தப் பூங்காற்றே, பெண்ணின் மனதைத் தொட்டு, பாட்டாளி, வாஞ்சிநாதன், அள்ளித் தந்த வானம் ஆகிய படங்களை தயாரித்த எம்.காஜாமைதீனின் ரோஜா கம்பைன்ஸ் தயாரிக்க உள்ள புதிய படம் 'சமஸ்தானம்'. சரத்குமார், சுரேஷ் கோபி இணைந்து நடிக்கின்றனர். ராஜ்கபூர் டைரக்ட் செய்கிறார். கதாநாயகிகளாக தேவயானி, அபிராமி நடிக்கின்றனர். மற்றும் மணிவண்ணன், செந்தில், ஆசிஷ் வித்யார்த்தி, வடிவுக்கரசி, ஸ்ரீகேந்தர் நடிக்கின்றனர். தேவா இசையமைக்கிறார். எடிட்டிங் லெனின்-விஜயன், கலை-ஆர்.கே.நாகு, ஸ்டண்ட்-பம்மல் ரவி, தயாரிப்பு-எம்.காஜாமைதீன்.

## தபுவின் அடுத்த காதல்

திருமணமான ஆண்கள் மீது, மும்பை நடிகைகளுக்கு எப்போதுமே ஒரு மோகம் உண்டு. அனுபவசாலிகள் என்பதால், மிக சுலபமாக கையாளுவார்கள் என்று கருதுவதும் ஒரு காரணம்.

இந்த விஷயத்தில் இப்போது பரபரப்பாக பேசப்படுபவர் தபு! ஏற்கனவே இவருக்கும், தெலுங்கு நடிகர் நாகார்ஜுனுக்கும் இடையே ரகசிய உறவு இருந்து வந்தது. நாகார்ஜுன் (நிலைவுகள்) இல்லாமல் தபு தூங்குவதில்லை.

விவகாரம், அமலா காதுக்கு எட்டியதும், பெரும் பிரச்சினையாகி விட்டது. 'இனி மேல் என் புருஷனகிட்ட வச்சுக்கிட்ட கொன்னுருவேன" என்று அமலா போட்ட மிரட்டலில் தபு பயந்து விட்டார்.

நாகார்ஜுனுடன் பேசுவதையும், பழகுவதையும் நிறுத்திக் கொண்டார். நொந்து போன அவருக்கு வடிகால் தேவைப்பட்டது.

அந்த வடிகாலாக, ஷாருக்கானை வளைத்துப் போட்டுக் கொண்டார்! இந்த காதல் இன்னும் எத்தனை நாளைக்கோ?

## ஏ.வி.எம்.மின் 'ஜெமினி'

ஏவி.எம். நிறுவனத்தின் 162வது திரைப்படம் ஜெமினி. இதில் விக்ரம் கதாநாயகனாக நடிக்கிறார். சரண் கதை திரைக்கதை வசனம் எழுதி இயக்குகிறார். M.சரவணன் M.பாலசுப்ரமணியன் M.S.குகன் B.குருநாத் தயாரிக்கிறார்கள்.

ஏப்ரல் 2002 வெளியிடாக ஜெமினி வரவிருக்கிறது. மும்பையைச் சேர்ந்த கிரண் கதாநாயகியாக அறிமுகம்.

மலையாளத் திரையுலகின் முக்கிய நடிகர்கள் கலாபவன் மணி, முரளி மிக முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்கிறார்கள்.

'வெள்ளரிக்கா' பாடலில் நடனமாடிக் கிறங்க வைத்த ராணி', சார்லி, தாமு, வையாபுரி, ரமேஷ்கண்ணா, மதன்பாப், தியாகு, இளவரசு, மற்றும் விஜுச்சக்ரவர்த்தி பங்குபெறுகிறார்கள்.

'என்னுயிர்த்தோழன்' திரைப்படத்தில் ஒரு கதாநாயகனாக நடித்த தென்னவன் சிறப்பு வேடமேற்கிறார்.



# தியேட்டரில் நடந்த சக்களத்தி சண்டை!

ஊர்மிளா நடித்து சமீபத்தில் திரைக்கு வந்த இந்திப் படம், 'பியார் துமின் க்யா க்யா'. திருமணமான ஒரு இளைஞரை, அவர் நடவடிக்கைகளை பார்த்து மயங்கி, இன்னொரு இளம் பெண் வளைத்துப்போட்டுக் கொள்வதுதான் கதை!

படத்தின் சிறப்பு காட்சி மும்பையில் உள்ள ஒரு பிரிவியூ தியேட்டரில் நடந்தது.

படம் முடிந்து வெளியில் வந்த அனைவரும் ஊர்மிளாவுடன் கைகுலுக்கி பாராட்டினார்கள்.

ராம்கோபால் வர்மாவின் மனைவி மட்டும் முகத்தை திருப்பிக் கொண்டு போனார்.(ஊர்மிளாவுக்கும், ராம கோபால்வர்மாவுக்கும் இடையே ரகசிய உறவு இருந்து வருவது மும்பை உலகில் அனைவரும் அறிந்த விஷயம்)

அவரிடம் பட தயாரிப்பாளர் கருத்து கேட்டார்.

"இது படம் அல்ல, ஊர்மிளாவின் சொந்த கதை. அடுத்த பெண்ணின் கணவரை வளைத்துக் கொள்வது அவள் சொந்த அனுபவம் தானே..." என்றார்.

அதைக் கேட்டு ஆத்திரம் அடைந்த ஊர்மிளா, ராம கோபால்வர்மா மனைவியிடம் சண்டைக்கு போய் விட்டார்.

தியேட்டர் வாசலிலேயே சக்களத்தி சண்டை நடந்தது.

## காதோடு சொல்லுகிறோம்

தமிழகத்தை ஆண்ட மூவேந்தர்களில் ஒருவரானவர் இயக்கிய 'ஜூலி நிலம்' படத்தில் அறிமுகமான நாயகி' இயக்குநரின் உள்ளம் கவர்ந்த கன்னி என்பது ஊரறிந்த ரகசியம். வெளியில் நாயகி இயக்குநரை 'தோழா-தோழா' என அழைத்தாலும் உள்ளுக்குள் ஏகப்பட்ட அன்பான உரசலில் கசிந்துருகுகிறார்களாம். அறிமுகமான படத்தைத் தொடர்ந்து நாயகிக்கு பல படவாய்ப்புகள் வந்தாலும்... பெரிய கம்பெனி, பிரபலமான இயக்குநர் படங்களை மட்டுமே ஒப்புக்கொள்ளச் சொல்லி அன்பு கட்டளை இட்டுள்ளாராம் இயக்குநர். இதனால பாப்பாவைத் தேடி வந்த வாய்ப்புகள் பல பறிபோய்விட்டன.

மழை பெய்யும் போது இடியுடன் இணைந்து மிரட்டும் பெயரைக் கொண்ட படத்தில் இரண்டு இளைய நட்சத்திரங்கள் இணைந்து நடித்தார்கள். இவர்கள் படத்தில் மோதிக் கொண்டது, போதாதென்று இப்போது நிஜத்திலும் மோதலைத் தொடர்ந்து வருகிறார்கள். இதில் அலைபாயும் இளையவர் அந்த அப்பாவியை அடிக்கடி ஆளை வைத்து வழிமறித்து அடித்து துவைக்கிறாராம். பொறுமையான 'அப்பாவி எப்போது எதிர்த்து அடித்து 'பாஸ்' பண்ணப் போகிறாரோ?!

இளைய நட்சத்திரங்களில் அதிகமாக பேசி 'வாய்கொழுப்பு நடிகர் என சிறப்பு பெற்றவர் 'வாலி' நாயகன். இவர் 'சிவப்பு' படத்தை தீபாவளிக்குத் தருவதாக ரசிகர்களிடம் வாக்கு கொடுத்து வெட்டி விளம்பரத்தை அள்ளி விட்டிருக்கிறார். இப்போது வழக்கமான ராசி 'சிவப்பு' படத்தையும் தாமதமாக்கிவிட்டது. 'வாலி' நாயகன் தீபாவளியே வேண்டாம் என சோகத்தில் இருக்கிறாராம்.

'விவரமில்லாத ஆளு'க்கு எதிர்பதமான பெயரில் லொள்ளு ஜொள்ளு நாயகர் நடித்து வருகிறார். இந்தப் படத்திற்கு இயக்குநரும், தயாரிப்பாளரும் தேவ நடிகையை ஒப்பந்தம் செய்தார்கள். அந்த ஜோடியிடம் லொள்ளு பண்ண முடியாது, எனவே இந்தப் பழம் புளிக்கும் என அடம் பிடித்திருக்கிறார் நடிகர். ஆனால், தயாரிப்பாளர் வேறு வழியில்லை அட்ஜஸ்ட் செய்து கொள்ளுங்கள் என்றிருக்கிறார். பிறகு வேறு வழியில்லாமல் இலவச இணைப்பாக ஷாஜகானின் மனைவியும், ஸ்லிம்மின் சகோதரியும் ஊறுகாயாக நடிகரின் உரசலுக்காக சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்.

சின்னத்திரைக்குள் புனிதி, குஷ்பு, மதுபாலா, ரஞ்சிதா இவர்களைத் தொடர்ந்து கௌதமியும் காலடி பதிக்க, எங்கே தனது கேரியருக்கு ஆபத்து வந்துவிடுமோ என்று பயத்திலிருக்கிறார் 'சித்தி' பொது இடங்கள் மற்றும் வெளிநிகழ்ச்சிகளில் வெளிநாட்டு கணவருக்குப் பிறந்த தனது குழந்தையை 'கோலிவுட் சுப்ரீம் ஸ்டாரை' கட்டாயப்படுத்தி அப்பா என அழைக்கச் சொல்கிறாராம். இதுவும் 'சித்தி' ஸ்டைலோ!



விக்ரம்-கிரண்
படம்: 'ஜெமினி'

# தேன் கிண்ணம்

## காதலனே என் காதலனே

முகவரி தவறிப்போய்!
முகம் மாறி வருகின்ற மடலைப்போல
வெகுதூரம் வந்துவிட்டேன் நான்!
ஆனால் நீ!
நின்ற இடத்தை விட்டு கொஞ்சம் கூட
நகரவேயில்லை!
*
பரிமாறத்துடிக்கும் பருவத்தின் வாசலில்
பதில் பார்த்துக் கொண்டிருக்கின்றேன் நான்!
நீயோ! மௌன வாசிப்புக்களாகவே
மொழி பெயர்த்துக்கொண்டிருக்கின்றாய்!

கடைசியாக இந்த கருணை மனுவை
உன் சபையில் சமர்ப்பிக்கின்றேன்!
காலங்களை செலவு செய்து
உன் ஞாபகங்களை சேமித்தேன் நான்!
என் கவிதையின் கணக்கை
என் கண்ணீரால் நிரப்பிவிடாதே!
*
கனிவான என் காதல் கவிதையானதே
உறவான அவனெந்தன் உயிரானதே!
கண்டதும் கொண்டதில்லை என் காதலே
என் கடந்த ஜென்மத்தின் காதல் கடனாளி நீயே!
இந்த உலகிலாவது சொல்வாயா?...
உன் இதய காதலி எனக்கு
ஐ லவ் யு......!

எம்.கவிதா-வவுனியா.

## புறங்களுக்கு ஏனிந்த புராணங்கள்?

உலகம் சுற்றும்
வேகத்தில்
புறங்களே அதிகம்
பூஜிக்கப்படுகின்றன
அகங்களை யாரும்
அறிவதில்லை!
••
வெள்ளை வேட்டி
கட்டிய பக்தன்
பசு அருகேயிருந்து
கள்ளருந்துகிறான்...
••
பகலெல்லாம்
பல்லாண்டுபாடப்பட்டவன்
இரவில்
படுகொலைக்கத்தியுடன்
ஆம்!
••
உலகம் சுற்றும்
வேகத்தில்
நிஜங்களை விட்டுவிட்டு
நிழல்களே
புகழ்பாடப்படுகின்றன
உண்மைகள்
கொல்லப்படுவதோடு
பொய்கள்
போற்றப்படுகின்றன.
••
இங்கு பூக்களுக்கே
அதிக புராணங்கள்
உண்டு
வேர்களுக்கு-ஒரு
வெண்பாகூட
இல்லையே
••
ஏ மனித சமூகமே!
விளங்கிக்கொள்
போர்த்துக்கொள்வதால்
அழகுதான்; ஆனால்
பொன்னாடையில்
எங்கு பொன்?!

என். தனுசுஜன்-
யாழ்.சண்டிலிப்பாய்.

## இது காதலா...? வெறும் நேசமா....?

கண்ணீரும் கம்பலையுமாக
வெப்புசாரத்தோடு
சிநேகிதனின் தேசம் விட்டு,
உனது
தேசம் சென்றாய்
மூன்றாண்டுப் பயிற்சியின் பின்!
*
உனது கண்ணீரும்,
எனது கண்ணீரும்
கைக் குட்டைக்குள்
சங்கமமாகிக் கொண்டன!
*
மேகங்களிருண்டு
உரசியது போல...!
*
பிரிவின்துயரினைத்
தாங்க முடியாதவளாக
"தண்ணீரோடு சங்கமிப்போமா?"
என் ரகோர வார்த்தைகள்
இதயத்தைச்
சுட்டெரித்துச் சென்றதனால்,
வார்த்தைகள்
இடைவிட்ட மௌனங்களாகின!
*
தூக்கமிழந்த
இராத்திரிப் பொழுதின்
விடிகாலை வேளையில்
சுட்டெரிக்கும்
பனித் துளியைப் பொருட்படுத்தாது,
காத்திருந்த சிநேகிதனை
பிரிந்து செல்ல முடியாது.
*
தவித்த இதயத்திற்கு
அலை புரண்ட
கண்ணீரைக்
காணிக்கையாக்கிச் சென்றாய்!
*
என்
விழி பதிந்த வழியால்
பாதி மனதோடு!
சுதி பாடுகின்ற
சிரிப்பொலியைக் காணவில்லை
உன் பயணத்தில்...!
*
நானழும் போதெல்லாம்
சிண்டிச் சிண்டி
சிரிப்பை உண்டாக்கிய
உனது கைகள்
தேம்பித் தேம்பியழுகின்றன...!
நீ
விடைபெறும் வேளையில்...!
எனது மனது
மௌனமாய் முகாமிட்டது
கண்ணீரைச் சுற்றி...!
நீ
இன்னுமழுதுவிடுவாய் என்பதற்காக..!

முஹம்மது ஹாரீத்-அட்டாளைச்சேனை.

## டிசம்பர்-05

மீண்டுமொருமுறை
எங்களின் வாழ்க்கையை
அடகு வைத்த நாள்!
*
இவர்களின்
வாக்குறுதிகளை நம்பவில்லை
பேச்சையும் நம்பவில்லை
இவர்களிடம் நாங்கள்
ஒன்றும் எதிர்பார்க்கவில்லை
இவர்களால் பலனேதும்
எமக்கு கிடைக்கப்
போவதுமில்லை
இருந்தும்
நாங்களும்
புள்ளடி இடுகிறோம்!
*
எமக்கிருக்கும்
ஒரே உரிமை
வாக்களிப்பது மட்டுமே
என்பதனால்!

நீ. நந்தேஸ்வரன்-கல்லடி-மட்டக்களப்பு.

## முதல் முத்தம்

காதலரின் முதல் முத்தம்
நீ பருகியதுண்டா?..
இன்ப வேதனையில் மூழ்கியதுண்டா?.
இரு மனங்கள் மோதி
இன்ப மின்னல் இதயம் பரவும்
நீரின்றி மோரின்றி தாகம்தீரும்;
நீருண்டும் மோருண்டும்
தீராதாகம் பற்றும்.
காதலின் முதல் முத்தம்
பருகிப் பார்த்துக் கொள்.
*
வார்த்தைகள் தொலைத்து
உதடு மட்டும் கதறும்.
நாவுக்குள் அடங்காமின்சாரத் தாக்கம்
பிறக்கும்.
இணைந்து கொண்டே
பிரிவொன்று கேட்கும்.
பிரிவு மனமில்லாமல்-உயிர்
உதட்டினில் ஒட்டிக் கொள்ளும்.
அமைதி மட்டும் வேண்டும்.
அனுமதியின்றி இதய மலர் பூக்கும்.
முதல் முத்தம் பருகத் தெவிட்டாத தேன்.
*
யுத்தமின்றி ஒரு வீழ்ச்சி
சத்தமின்றி உயிர்பறிப்பு உடனே நடக்கும்.
நடக்கையிலேயே சாவை வேண்டும்.
பைத்தியமாய் மாற்றிக் கொள்ளும்.
ஆயிரம் ஆயுள் வேண்டி வரம் ஒன்று
கேட்கும்.
மெத்தை உதடு மெல்ல
பிரிவொன்று கேட்டதும்-இதயம்
துடிப்புக்கொரு தடா போடும்.
உதிரப் பாதை.
அணைக் கட்டுக்குள் போடும்.
காதலின் முதல் முத்தம்
இதயங்களிக்கிடையிலான யுத்தம்.
*
காதல் வேதனைக்கு ஒருமைச் சொல்
இன்பவேதனையாகும்.
சாதல் காதலை நெருக்கினாலும்
காதல் சாதலை வெறுக்கும்.
இன்ப நினைவை மாத்திரம்
கனவுகள் துணைக்கழைக்கும்.
உலகம்!
இடம் மாறிக் கொள்ளும்.
இதயமதில் குடியேறத் துடிக்கும்.
வெட்கம் ஒளிய முத்தம் தந்து-பின்
நாணம் திரண்டு நிற்க-நாணும்
நாணிப் போகும்.
காதலின் முதல் முத்தம்
நீ பருகியதுண்டா?...

ஜா.மிஸ்மீரா-
புத்தளம்.

## கவலைகள் கலையட்டும்

அபூர்வ
அவனியில் அவதாித்த
ஆத்மாக்களே...
*
அகிலத்தில் நீ
அவதரித்தது அனைத்தையுமே
அனுபவிப்பதற்கே
அழுது புலம்ப அல்ல....!
கவலைகள் என்ற வலையில்
கட்டுண்டு
காலத்தை வீணடித்து
கண்ணீர் சிந்தாதே!
*
உன்னத உண்மைகளுக்கும்
பரிசுத்தமாய் பரிணமிக்கும்
பாச பிணைப்புக்களுக்கும்
அன்பாய் அடிவணங்கு!
*
வாய் வார்த்தைகள்
வசீகரமானவையாக இருக்கட்டும்
வசந்தம் உன் வாசல் வரும்.
வாழ்வும் வளம் பெறும்.
*
உணர்வுகளுக்கும் உந்துதலுக்கும்
உயிர்கள் உடன் படுவது
உண்மைதான்.
*
விளைவுகளை விளங்கிகொண்டால்
விழித்துக் கொள்வதுதானே
விடிவின் முதற்படி
எதிர்படும் இன்னல்களை
எதிர்த்துப் போராடு
சிகரத்தை தொடுவது ஒன்றும்
சிரமமானதன்று.

எஸ்.மனோஹரன்-பத்தனை.


## ஏன் மறுக்கிறாய்

உன் கண்களை நேர்
நான் பார்த்த போது
உன் பார்வை
தாழ்ந்ததேன்?
*
உன்னை நான்
தொட்ட போது எடுத்து
பின்பு அதே இடத்தில்
மீண்டும் நீ
வைத்ததேன்?.
*
உனக்குச் சிரிப்பூட்ட
நண்பனுக்கு நான்
கதை சொன்னபோது
உன் இதழ்கள்
சிரித்ததேன்?
*
உன்னை என்
காதலியென
நண்பன் சொன்னபோது
மறுப்பு நீ
தெரிவிக்காததேன்?
*
சரிதான் பெண்ணே
என் காதலைத்தான்
என் பொய்யாக
இதழ்களால் மட்டும்
நீ மறுக்கிறாய்?

என். சந்திரராஜன்-கிழக்கு வளாகம்.

## பேனா நண்பர்கள்

|  |  |  |  |
|---|---|---|---|
| பெயர்: இ. ஜீவராஜ் | பெயர்: எம்.எம். நிம்ஸத் | பெயர்: கே. பாபு | பெயர்: ஏ. முபாறக் |
| வயது: 22 | வயது: -- | வயது: 22 | வயது: 18 |
| முகவரி: ஒழுங்கைத் தெரு, எருவில், களுவாஞ்சிக்குடி. | முகவரி: பெருக்குவத்தன், கொத்தான்தீவு,முந்தல். | முகவரி: இல.95, செட்டியார் தெரு, கொழும்பு -11. | முகவரி: 73, ஹுதா வீதி, ஏறாவூர்-03 |
| பொழுது போக்கு: வானொலி, கிரிக்கெட். | பொழுது போக்கு: பத்திரிகை வாசித்தல். | பொழுது போக்கு: வழமையானவை. | பொழுது போக்கு: பத்திரிகை, கிரிக்கெட். |




கர்சன் பிரபு ஒரு கூட்டத்தில் பேசிக் கொண்டிருந்தார். அப்பொழுது அவர் என்னிடம் எவரும் கேள்வி கேட்க விரும்பினால் ஒரு பேப்பரில் எழுதி அனுப்பலாம் என்று கூறினார். உடனே அவருக்கு ஒரு பேப்பர் வந்தது. அதில் 'அற்பக் கழுதை' என்று எழுதப்பட்டிருந்தது.

அதைப் பார்த்ததும் கர்சன் பிரபுவின் முகம் சிவந்துவிடவில்லை. அவர் அதனைக் கிழித்து வீசவும் இல்லை.

## இனிமை ஒரு வழமை

புன்முறுவலுடன் அவ்விரு சொற்களையும் படித்து விட்டு, "ஒரு கனவான் தான் கேட்க வேண்டிய கேள்வியை எழுத மறந்துவிட்டு தன்னுடைய கையெழுத்தை மட்டும் இதில் எழுதி இருக்கிறார்" என்றார்.

கூட்டமே சிரிப்புக் கடலில் மூழ்கியது.

இனிமை அவரிடம் இருந்தபடியினால்தான் கடுமையான வார்த்தைகளைக் கூட நகைச்சுவையாக மாற்றிக் காட்டினார்.

கடுமையும் இனிமைக்கு முன்பு அடிபணிந்து விடும். இனிமையான பேச்சுக்களால் நம்முடைய வியாபாரத்தை வெற்றிகரமாக முடித்துக் கொள்ள முடியும்.

முடப்பட்ட கதவுகள் எல்லாம் இனிமையைக் கண்டதும் தானாகவே திறந்து விடும்.

இனிமையான பேச்சு மற்றவர்களின் உள்ளத்தை அப்படியே கைப்பற்றி நாம் சொல்வதை எல்லாம் அவர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு செய்யும்.

கடுமையான பேச்சு என்றென்றும் மற்றவர்களுடைய மனதில் நினைவு படுத்திக் கொண்டே இருக்கும். அதுவே தீராத பகையாகிவிடும்.

'பல்லக்கு ஏறுவதும் வாயாலே, பல் உடைபடுவதும் வாயாலே' என்ற பழமொழி பேச்சின் சிறப்பை விவரித்துக் கூறுகிறது.

நாவிலே நஞ்சு தடவி பேசும் முறையை கட்டாயம் அகற்றியே ஆக வேண்டும். 'ஒரு சொல் வெல்லும், ஒரு சொல் கொல்லும்' என்பதனை என்றும் நினைவில் வைத்துப் பேசுவது நல்லது.

வாயிலிருந்து ஒரு சொல் வந்து விட்டால் மீண்டும் அதனைக் திரும்பப் பெற முடியாது. எய்த அம்புக்கு நிகரானது சொல்.

நம்முடைய உரையாடல் பிறருக்கு நன்மை அளிக்க வேண்டும். அதற்கு எளிய சொற்களையே தெளிவாக எடுத்துரைப்பது முக்கியம்.

வழக்கில் இல்லாத சொற்களையும் அகராதியைப் புரட்டி அர்த்தம் தெரிந்து கொள்ளவேண்டிய வார்த்தைகளையும் கூறாமல் இருப்பது நல்லது.



இல்லையெனில் கேட்பவர்களுக்கு விளங்காது. கூறுகின்ற கருத்து அவர்களுடைய மனத்தில் பதியாது.

பண்பாட்டின் சிகரம் எது வென்றால் ஒரு செய்தியைச் சுருக்கமாகச் சொல்லி விளங்க வைக்கும் திறன்தான்.

ஒரு செய்தியை அரைகுறையாகக் கூறுவதின் காரணமாக கேட்பவர் அதை தவறாக விளங்கிக் கொள்ள வாய்ப்பாக அமைந்து விடும்.

சொல்ல வேண்டியதைச் சொல்ல வேண்டிய இடத்தில் ஆணித்தரமாக எடுத்துரைக்க வேண்டும்.

பிறர் விரும்பிக் கேட்காதபோது நம்முடைய கருத்தை அவர்கள் மீது திணிக்கக் கூடாது?

## இந்தவாரம் உங்கள் பலன்

23.12.2001 தொடங்கி 29.12.2001வரை

### மேடம்:
(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்,) கருமங்களில் சிறு தடை ஏற்பட்டு மறையும். தொழில் நிலையில் உயர்வு வார இறுதியில் ஏற்படும். பணவரவு திருப்தி தரும். உத்தியோகஸ்தர்களுக்கு எதிர்பார்த்த நன்மைகள் வந்தடையும். மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை எடுக்கவேண்டும். விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபமடைவர்.
அதிஷ்ட நாள்: புதன்.
அதிஷ்ட இலக்கம்: 04.

### இடபம்:
(கார்த்திகை பின்முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை,) மனக்குறை நீங்கி, குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். தொழிலில் சிறு பிரச்சனைகள் வார இறுதியில் ஏற்படும். பணக்கஷ்டம் விலகும். உத்தியோகஸ்தர்கள் மேலதிகாரிகளுடன் இணைந்து நடப்பது நல்லது. வியாபாரிகள் இலாபம் அடைவார்.
அதிஷ்ட நாள்: வியாழன்.
அதிஷ்ட இலக்கம்: 07

### மிதுனம்:
(மிருக சீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்,) புதிய முயற்சிகளில் கவனமெடுப்பது நல்லது. பணவரவு சுமாராக இருக்கும். குடும்பத்தில் ஏற்பட்டிருந்த பிரச்சனைகள் தீரும். உத்தியோகஸ்தர்கள் தமது பதவிகளில் மாற்றத்தை பெறுவர். மாணவர்களுக்கு கல்வியில் உயர்ச்சி கிடைக்கும். விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம் பெறுவர்.
அதிஷ்ட நாள்: திங்கள்.
அதிஷ்ட இலக்கம்: 02.

### கடகம்:
(புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்,) தொழில் நிலையில் உயர்ச்சியும், குடும்பத்தில் மகிழ்ச்சியும் தோன்றும். பணக்கஷ்டங்கள் தீரும். வெளியிட பிரயாணங்களில் அவதானத்துடன் நடந்து கொள்ளவும் உத்தியோகஸ்தர்கள் தமது கடமைகளில் அக்கறை கொள்வது நல்லது. மாணவர்களுக்கு கல்வியில் மந்தம் தோன்றும். விவசாயிகள், வியாபாரிகள் உரிய இலாபமடைவர்.
அதிஷ்ட நாள்: செவ்வாய்.
அதிஷ்ட இலக்கம்: 06.

### சிங்கம்:
(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்,) தொழிலில் நன்னிலை தோன்றும். குடும்பத்தில் மகிழ்ச்சிக்குரிய சம்பவங்கள் நடந்தேறும். பணவரவு திருப்தி தரும். மாணவர்கள் கல்வியில் கூடிய கவனம் கொள்வது நல்லது. விவசாயிகள் எதையும் திட்டமிட்டுச் செய்வது நல்லது.
அதிஷ்ட நாள்: வெள்ளி.
அதிஷ்ட இலக்கம்: 03.

### கன்னி:
(உத்தரத்து பின் முக்கால், அத்தம் சித்திரையின் முன்னரை,) தொழில் முயற்சிகளிலும், குடும்பநிலையிலும் ஏற்பட்டிருந்த பிரச்சனைகள் தீரும். பணவரவு சுமாராக அமையும் உத்தியோகஸ்தர்கள் எந்த விடயத்திலும் விழிப்புடன் நடந்து கொள்வது நல்லது. மாணவர்களுக்கு கல்வியில் உயர்ச்சியளிக்கும். விவசாயிகள் வியாபாரிகள் உரிய இலாபம் பெறுவர்.
அதிஷ்ட நாள்: திங்கள்.
அதிஷ்ட இலக்கம்: 05.

## சோதிட மாமணி தில்லை

### துலாம்:
(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன்முக்கால்) தொழிலில் மாற்றங்கள் ஏற்படும். வார இறுதியில் பணவரவு சிறப்பாக இருக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சிக்குரிய சம்பவங்கள் நடந்தேறும். உத்தியோகஸ்தர்கள் பதவிகளில் மாற்றத்தைப் பெறுவர். மாணவர்களுக்கு கல்விச் சிறப்பளிக்கும். விவசாயிகள், வியாபாரிகள் உரிய இலாபமடைவர்.
அதிஷ்ட நாள்: செவ்வாய்.
அதிஷ்ட இலக்கம்: 01.

### விருட்சிகம்:
(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை) தொழில் சிறப்பும், குடும்பத்தில் மகிழ்ச்சியும் ஏற்படும். வெளிநாட்டு தொழில் வாய்ப்புக்கள் சிலரை வந்தடையும். உத்தியோகத்தில் உள்ளவர்கள் கவனமுடன் நடந்து கொள்வது நல்லது. மாணவர்களுக்கு கல்வியில் சிறிது பிரச்சனைகள் தோன்றும்.
அதிஷ்ட நாள்: வியாழன்.
அதிஷ்ட இலக்கம்: 04.

## கிரக நிலை

| | |
|---|---|
| தனு | - சூரியன், புதன், கேது, வெள்ளி |
| கும்பம் | - செவ்வாய் |
| இடபம் | - சனி |
| மிதுனம் | - வியாழன், இராகு. |

சந்திரன், மீனம், மேடம், இடபம், மிதுனம் இராசிகளில் இந்தவாரம் சஞ்சரிப்பார்.

### தனு:
(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்) எடுத்த கருமங்களில் வெற்றி கிடைக்கும். பணவரவு சிறந்து விளங்கும். குடும்பத்தில் மகிழ்ச்சிக்குரிய சம்பவங்கள் நடந்தேறும். உத்தியோகத்தில் உள்ளோர் மேலதிகாரிகளுடன் இணைந்து நடப்பது நல்லது. மாணவர்களுக்கு கல்வி சிறப்பளிக்கும். விவசாயிகள், வியாபாரிகள், இலாபமடைவர்.
அதிஷ்ட நாள்: திங்கள்.
அதிஷ்ட இலக்கம்: 04.

### மகரம்:
(உத்தராடத்து பின்முக்கால், திருவோணம் அவிட்டத்து முன்னரை,) மனக்குறை நீங்கி, குடும்பத்தில் மகிழ்ச்சிக்குரிய சம்பவங்கள் நடந்தேறும். வெளியிடப் பிரயாணங்களில் கவனமுடன் நடந்து கொள்ளவும் உத்தியோகஸ்தர்கள் மேலதிகாரிகளுடன் இணைந்து நடப்பது நல்லது. மாணவர்களுக்கு கல்வியில் உயர்ச்சியுண்டாகும். விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபமடைவர்.
அதிஷ்ட நாள்: சொவ்வாய்.
அதிஷ்ட இலக்கம்: 07.

### கும்பம்:
(அவிட்டத்து பின்னரை, சதயம், பூரட்டாதி முன்முக்கால்,) குடும்பத்தில் மகிழ்ச்சிக்குரிய சம்பவங்கள் நடந்தேறும். பணவரவு திருப்தி தரும். தொழில் முயற்சிகளில் முன்னேற்றம் ஏற்படும். உத்தியோகத்தில் இருந்து வந்த கஷ்டங்கள் தீரும். மாணவர்களுக்கு கல்வியில் உயர்ச்சியுண்டாகும். விவசாயிகள் வியாபாரிகள் இலாபமடைவர்.
அதிஷ்ட நாள்: புதன்.
அதிஷ்ட இலக்கம்: 05.

### மீனம்:
(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி ரேவதி,) செய்தொழிலில் கஷ்டங்கள் தோன்றும். செலவுகள் அதிகரிக்கும். உத்தியோகஸ்தர்கள் எதையும் நிதானித்து செய்வது நல்லது. மாணவர்களுக்கு கல்வியில் ஏற்பட்டிருந்த தடைகள் விலகும். விவசாயிகள் வியாபாரிகள் குறைந்த இலாபமடைவர்.
அதிஷ்ட நாள்: திங்கள்.
அதிஷ்ட இலக்கம்: 01.

# மணப் பெண்ணா நீங்கள்



நீங்கள் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்த அந்த நாளுக்குத் தேதி குறித்தாயிற்றா? மணப்பெண் பிரமோஷனுக்காகக் காத்திருக்கிறீர்களா? கல்யாண ஏற்பாடுகள் ஒரு பக்கம் நடக்கட்டும். உங்களை நீங்கள் தயார்படுத்திக் கொள்ள வேண்டாமா? மணப்பெண் என்றால் பின்னே சும்மாவா? திருமணத்திற்கு சில மாதங்கள் முன்பிருந்தே அதற்கு நீங்கள் தயாராக வேண்டும். இதோ உங்களுக்கு உதவ சில டிப்ஸ்...

**3 முதல் 4 மாதங்களுக்கு முன்:**

* ஹேர் ஸ்டைல் பிடிக்கவில்லையா? புதிதாக மாற்ற நினைக்கிறீர்களா? நல்ல சிகையலங்கார நிபுணராகப் பார்த்து உங்களுக்கேற்ற வேறு ஸ்டைலை மாற்றிக் கொள்ளுங்கள்.
* சருமப் பராமரிப்பில் இப்போதிலிருந்தே அக்கறை செலுத்த ஆரம்பிக்க வேண்டும்.
* உங்கள் உடல் சரியான ஷெப்பில் இல்லையென உணர்கிறீர்களா? உடனடியாக ஒரு நல்ல ஜிம்மில் சேருங்கள். அதற்கு வசதியில்லையா? தினமும் சிறிது நேரம் வாக்கிங்போகத் தொடங்குங்கள்.

**1 முதல் 2 மாதங்களுக்கு முன்:**

* நம்பிக்கையான அழகுக்கலை நிபுணரிடம் குறிப்பிட்ட இடைவெளிகளில் ஃபேஷியல் செய்து கொள்ளுங்கள்.
* பியூட்டி பார்லருக்குச் சென்று வந்தாலும், வீட்டிலும் அழகு சிகிச்சையைத் தொடருங்கள். பாலாடை, மஞ்சள் பொடி, கடலை மாவு கலந்த கலவையை முகத்தில் தடவி ஊறிக் கழுவி வரலாம்.
* கிளிசரின், பன்னீர், எலுமிச்சம் பழச்சாறு ஆகியவற்றை சம அளவு எடுத்துக் கொண்டு குளித்து முடித்ததும் தினம் சருமத்தில் தடவிக் கொள்ளுங்கள்.
* தினம் எட்டு டம்ளர் தண்ணீர் குடிக்கவும். அது உங்கள் உடலிலுள்ள கழிவுகளை அகற்றி சருமத்தை அழகாக வைக்கும். எடையும் குறையும்.
* முடிகிற போதெல்லாம் நறுக்கிய பச்சை உருளைக் கிழங்கு ஸ்லைஸை முகத்தில் வைத்தபடி ஓய்வெடுக்கவும் அது இயற்கையாக உங்கள் கருமத்தை பிளீச் செய்யும்.
* கை, கால்களை அழகாக, மென்மையாக வைத்துக் கொள்ள முறையாக பெடிக்யூர் மற்றும் மெனிக்யூர் செய்து கொள்ளவும்.

**இரண்டு வாரங்களுக்கு முன்:**

* உணவில் உப்பையும், கொழுப்பையும் குறைத்துக் கொண்டு நிறைய பச்சைக் காய்கறிகளையும், பழங்களையும் சேர்த்துக் கொள்ளவும்,
* உடற்பயிற்சி செய்கிற நேரத்தை அதிகரிக்கவும்.
* ஹேர் கட் செய்து கொள்ளவும். கூந்தல் நுனிகளை டிரிம் செய்து கொள்ளவும்.
* பியூட்டி பார்லர் சென்று கை, கால் முட்டிகளில் உள்ள சொர சொரப்பை நீக்க பிரத்யேக சிகிச்சையைச் செய்து கொள்ளவும்.

**ஒரு வாரத்திற்கு முன்:**

* ஃபேஷியல் செய்த இரண்டு நாட்களுக்குப் பிறகு தான் சருமத்தில் ஒருவிதப் பளபளப்பும், பொலிவும் தெரியும். எனவே திருமண நாளுக்கு இரண்டு நாட்களுக்கு முன்பாக சிறப்பு ஃபேஷியலைச் செய்து கொள்ளவும்.
* கடைசியாக புருவங்களை ஷேப் செய்துகொள்ளவும். தேவையற்ற ரோமங்களை அகற்றிக் கொள்ளவும்.

**ஒரு நாள் முன்:**

* நிறைய தண்ணீர் குடிக்கவும்.
* தலைமுடியை சுத்தமாக அலசி, கண்டிஷன் செய்யவும்.
* நிதானமாக, அமைதியான மனநிலையில் நன்றாகக் குளிக்கவும்.
* எவ்வளவு நேரம் முடியுமோ அவ்வளவு நேரம் தூங்கவும். அழகுக்கு அதுதான். அடிப்படை.


# பட்டுச் சேலை பரிசுப் போட்டி

**மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்**



☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** KP

பெயர்:......................
முகவரி:......................
......................
தொழில்:......................
கையொப்பம்:......................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 29-12-2001**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை? புத்தளம் வாசகிக்கு அதிஷ்டம்!

**இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்**

எஸ்.எம்.என்.ஹுஸ்னா,
இல: 1335/4, மன்னார் வீதி, புத்தளம்.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.
அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!
இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.


எதுக்குச் சொல்றேன்னா... சில பேருக்குச் சில முகங்கள் க்ளிக் ஆயிரும். 'தி ரைட் கர்ள்'னு சொல்வாங்க. உன் முகத்தை நான் சின்ன வயசிலருந்து தேடிக்கிட்டு வந்திருக்கேன். ரொம்ப ரொம்ப கிளியரா இருந்து வந்திருக்கு. உன் முகம்-என் மனசில! எப்பவாவது எங்கயாவது இந்த முகம் என் கனவில வந்திருக்கு. எத்தனையோ தடவை வந்திருக்கு. 'ஒரு நாள் இந்த முகத்தை சந்திக்கத்தான் போறேன்'னு டைரில எழுதிவெச்சிருக்கேன். காட்டறேன். அந்த முகம்தான் நீ! என்ன... பேச மாட்டியா... ஸ்மோக் பண்ணட்டுமா?"

"எனக்கு சிகரெட் புகை பிடிக்காது..." என்றவள், "இவ்வளவு சொல்றீங்களே... என்னை, இந்தக் கல்யாணத்துக்கு இஷ்டமான்னு கேட்டீங்களா...?" என்றாள்.

"கேக்லையா?" என்றான். பற்ற வைத்த சிகரெட்டைக் குற்றுயிராய் அணைத்துவிட்டு.

"கேக்கலை... எனக்கு மூச்சு விடக்கூட அவகாசம் கொடுக்கலை."

"இப்ப கேக்கிறேன்.. உனக்கு இந்தக் கல்யாணத்துல இஷ்டமா?"

"இப்ப கேட்டு என்ன பிரயோஜனம்?"

"என்னை எதுவும் ஜட்ஜ் பண்ணாதே. இன்னிக்கு என்ன தேதி... பதினெட்டு!






அடுத்த மாதம் பதினெட்டாம் தேதி சொல்லு."

"அதுக்குள்ள என்ன?"

"என்னை முழுசா தெரிஞ்சுக்க அவகாசம்... ஒரு நிமிஷம்" என்று படுக்கை அருகே இருந்த போனை எடுத்து, "இது என்ன... ஸீரோ டயலா?" என்றான்.

"எனக்குத் தெரியாது."

எண்களை ஒத்தினான்..

"யாதவ்! இண்டெக்ஸ் விழுந்ததா?" என்று போனில் பேசத் தொடங்கினான்.

அனிதா தன் வளையல்களை ஆராய்ந்து கொண்டிருந்தாள்.

"......"

"எத்தனை?"

"........."

"சொன்னேன்... பாத்தியா" என்று தங்க பேனாவால், ஓட்டல் காகிதத்தில் எழுதிக்கொண்டான் வைரவன்.

அப்போது 'ஏ.வி.' என்று சாக்லெட் கோடு போட்ட வடிவ கேக்கை ஓட்டல் சிப்பந்தி உள்ளேகொண்டு வைத்து விட்டு, "சார்... ஷாம்பேன் பாட்டிலை நான் திறக்கட்டுமா சார்...?" என்று கேட்டான். சின்னக் குழந்தை போல் போர்த்தப்பட்டு ஐஸ் பக்கெட்டில் இருந்த அந்தப் பச்சை பாட்டிலை அழகாகத் துடைத்து அவனிடம் காட்டினான், கிளவுஸ் அணிந்த சீக்கிய இளைஞன்.

வைரவன் ஆராய்ந்துவிட்டு "சரி.. திற" என்று கட்டளையிட, வெள்ளி கார்க் ஸ்க்ரூவால் அதன் மூடியைத் திறக்க, ஷாம்பேன் உற்சாகமாகப் பொங்கி வழிந்தது. நெட்டையான காம்பு வைத்து நின்று கண்ணாடிக் கிண்ணங்களில் அந்தத் துல்லிய திரவத்தைச் சாய்த்து விட்டு சிப்பந்தி சப்தமில்லாமல் நழுவினான்.

வைரவன் ஒரு கோப்பையை எடுத்துக் கொண்டு மற்றதை அனிதா கையில் கொடுத்தான்.

"இது என்ன"- அனிதா.

"ஷாம்பேன்"- வைரவன் சொல்ல.

"ஷாம்பேன்னா ஆல்கஹாலா?" என்றாள்.

"சும்மா சொல்லாதே... இது தெரியாதா உனக்கு?"

"தெரியாது."

"உன் ஃப்ரெண்ட் மது சொல்லலையா?"

"அவ ஜின் சாப்பிடுவா."

"ஜின்னைவிட இது மைல்டு."

"நான் சாப்ட்டதே இல்லை" என்றாள் அனிதா.

"ஒண்ணும் பண்ணாது."

அவள் கையை உயர்த்தி உதட்டருகில் கோப்பையைக் கொண்டுபோய், "கமான்... ஸிப்" என்றான், வைரவன்.

அதை ஒரு முறை சுவைத்துவிட்டு 'கசக்கறது" என்றாள் அனிதா. அதை அப்படியே வைத்துவிட்டாள்.

ஃபோன் ஒலிக்க, எடுத்து கேட்டு "தயாள்... இனிமே டிஸ்டர்ப் பண்ணாதே. நான் இப்ப என் ஹனிமூன்ல இருக்கேன் தெரியுமில்லை.. டாமிட்" என்றான்.

அனிதா தன் கைப்பையிலிருந்து மாற்றுப் புடவை எடுத்துக்கொண்டு பாத்ரூமுக்குப் போனாள். எதிரே கண்ணாடியில் மறுபடி தெரிந்த அனிதாவைக் கொஞ்ச நேரம் பார்த்தாள். டவலில் 'அனிதா' என்று எம்ப்ராய்டரியில் போட்டிருந்தது. மற்றதில் 'வைரவன்' என்று! 'காசு கொடுத்தால் என்னவெல்லாம்... என்னவெல்லாம் கிடைக்கிறது! மைகாட்... நான் எத்தனை அதிர்ஷ்டசாலி' தன் உடையைக் களைந்து மாற்றிக் கொள்ளும்போது, பின்னால் சப்தம் கேட்டுத் திடுக்கிட்டாள் அனிதா. கண்ணாடி வழியாக அவளை வைரவன் தரிசித்தான்.

"என்னது... பாத்ரூமுக்குள்ள... இங்கெல்லாம் ஏன் வந்தீங்க...?" என்றாள் பதற்றத்துடன்.

"ஏன்... உரிமையில்லையா அனிதா? நமக்குக் கல்யாணம் ஆயிடுச்சு... தெரியமில்லை? பாரு... தாலியைப் பாரு... பாரு" என்று அவள் தாலியை ரவிக்கையிலிருந்து உருவிக் கண்ணாடியில் காட்டி, அப்படியே தோளில் அவளை முகத்தால் அழுத்தி, திருப்பி, முகத்தாலேயே உடல் முழுவதும் சரிந்து, காலைப் பற்றிக்கொண்டு பாதங்களை முத்தமிட்டான். அவளை பாத்ரூமின் தரையில் வீழ்த்தினான். "அனிதா.. அனிதா! அவளைப்போல இருக்க! அவதான் நீ!" என்றான்.

எழுந்து அவளைத் தூக்கினான். "பரவால்ல... கொஞ்சம் கனமாத்தான் இருக்கே" என்று அவளைப் படுக்கையில் வைத்து விரலால் அவள் வடிவத்தை நிருடினான்.

அனிதாவுக்கு மூச்சு முட்டியது.

"அனிதா... இதான் முதல் தடவையா?"

'இது என்ன கேள்வி' என்று நினைத்தவள், கொஞ்சம் மௌனத்துக்குப் பிறகு "நீங்க?" என்று கேட்டாள்.

"கஷ்டமா இருந்தா சொல்லு."

மாஸ்டர் ஸ்விட்சைத் தட்ட, அறையில் இருட்டு விரவ, டி.வி. பிம்பங்கள் அவர்கள் உடல்களின் விளிம்பளை மழுப்பின.

பின்னிரவில் அவர்கள் மறுபடி விழித்துக் கொண்டார்கள்.

அனிதா காலையில் எழுந்தபோது வைரவன் "குட்மார்னிங்" என்றான்.

"குளிச்சாச்சா நீங்க?"

சுத்தமாகக் குளித்து தலைவாரி பத்து நிமிஷத்துக்கு முன்தான் பிறந்தவன் போல இருந்தான்.

"குளிச்சாச்சு... நான் இப்ப ஒரு மணி நேரம் ஆபீஸ் போய் வரேன். படுத்துக்கிட்டு இரு.. வந்துர்றேன்!" என்றான்.

"இல்லை, நான் ஆத்துக்கு... வீட்டுக்குப் போறேன்!"

"எங்கே... சாந்தோம் போறயா?"

"இல்லை... எங்கப்பா அம்மா" என்றாள் அனிதா.

"உங்கப்பாவெல்லாம் சாந்தோம் வீட்லதான் இருக்காங்க!" வைரவன் சொல்ல.

"சரி... அங்கயே போறேன்" என்றாள் அனிதா.

"ஒரு வாரம் அப்புறம் புறப்படறோம். தெரியமில்லை?"

"எங்கே?"

"ஹனிமூன் தொடர்ச்சி... முதல்ல பாரிஸ் போறோம். அப்புறம் லண்டன், அப்புறம் டோக்கியோ, ஸான்ஃப்ரான் ஸிஸ்கோ, நியுயார்க்."

அனிதாவை நோக்கி அருகில் வந்து லேசாக முத்தம் ஒத்திவிட்டு, "உனக்குப் பொங்கல் வடையெல்லாம் ஆர்டர் பண்ணியிருக்கேன். தின்னுட்டு, ஸாரி சாப்பிட்டுட்டு ரிசப்ஷன்ல சொன்னா கார் வந்துரும்.. வீட்டுக்குப் போகலாம் என்ன? சரி... எப்படி இருந்தது?"

"என்ன?"

"நேத்திக்கு எப்படி இருந்ததுன்னேன்?"

"ஞாபகமில்லை" என்றாள், நாணத்துடன்.

அவன் சென்றதும், அரைமணியில் குளித்துவிட்டுத் தயார் ஆனாள். ரிசப்ஷனுக்கு வந்தபோது அவளுக்காக இரண்டு பேர் மரியாதையுடன் காத்திருந்தார்கள். வெளியே வந்ததும் கார் கதவை ஒருவன் திறந்து விட்டான்.

சாந்தோம் வீட்டுக்குச் சென்றபோது அம்மாவை ஆம்புலன்ஸில் ஏற்றிக் கொண்டிருந்தார்கள்.

***

**நவீன எழுத்துலக வேந்தன் சுஜாதா**

ஆம்புலன்ஸில் ஏற்றிக் கொண்டிருந்த அம்மாவை, அனிதா அருகில் சென்று பார்த்தாள். கமலத்தின் காலில் கைக்குட்டை கட்டி ரத்தமாக இருந்தது. பக்கத்தில் வேலைக்காரன் அசட்டுத்தனமாக நின்று கொண்டிருக்க, "என்னம்மா ஆச்சு?" என்றாள் அனிதா.

"நாய் படுங்கிடுத்து..."

"ஏம்பா... நாயைக் கட்டி வைக்கக் கூடாதோ?" வேலைக்காரன் அண்ணாமலையிடம் விசாரித்தாள் அனிதா.

"கடிக்கவே கடிக்காதுங்க... புது மனுசங்கன்னு பயந்துடுச்சு... ஏய் ஜிம்மி, ஏன் அம்மாவைக் கடிச்சே?"- அண்ணாமலை அதட்ட, ஜிம்மி வாலை ஆட்டி சந்தோஷத்தைத் தெரிவித்தது.

இடையில் வைரவனின் அம்மா வந்து பார்த்து, "என்னம்மா ஆச்சு உங்களுக்கு?" என்று விசாரித்தாள்.

"ஊம்.. நாய் கடிச்சிருச்சா? அடடா... பல்லு பட்டிருச்சா! ஆனா, பயப்படாதீங்க. உடனே ஃபர்ஸ்ட் எய்ட் பாண்டேஜ் கொடுத்து காட்டரைஸ் பண்ணிருவாங்க. இன்ஜெக்ஷன் எதும் தேவையில்லை. வீட்டு நாய் அது... கடிக்காது..."

அருகே இருந்த குற்றவாளி நாய் அவளைக் கண்டதும் வாலை வேகமாக ஆட்ட, வைரவன் அம்மா அதன் வாயில் தன் புஜத்தைக் கொடுத்துக் கவ்வ வைத்தாள்.

[அனிதா வருவாள்...]

# இந்திரன் கேட்ட வரம்!

முன்னொரு காலத்தில் பேரரசன் ஒருவன் வாழ்ந்து வந்தான். பல கலைகளில் திறமை பெற்றிருந்த இவன், இன்னும் அரிய கலைகள் பல பெற்று சிறப்பு பெற நினைத்தான்.

எனவே, காட்டிற்குச் சென்று கடும் தவம்புரிய ஆரம்பித்தான். கடுமையான இவனது தவத்தை மெச்சிய இறைவன், இவன் முன் தோன்றினான்.

அரசன் கேட்ட வரங்கள் அனைத்தையும் வழங்கினான். பல ஆற்றல்கள் பெற்றதும் பெருமையடைந்த அரசன், இந்திரலோகத்தை நோக்கிப் படையெடுத்தான். அவனது ஆற்றல் முன்பாக இந்திரனால் ஒன்றும் செய்ய முடியவில்லை தோற்றுப் போய் ஓடினான்.

அவனது சிம்மாசனத்தில் அமர்ந்த அரசன் வெற்றிச் சிரிப்பு சிரித்தான். இறைவன் வரம் கொடுத்துவிட்டதால், அவனது அரிய ஆற்றலின் முன்பாக நிற்க முடியாது; எனவே, அரசனை சூழ்ச்சியால் தான் வெல்ல முடியும் என்பதை அறிந்தான் இந்திரன்.

அதனால் மெல்ல அரசனிடம் சென்றான். "பேரரசனே... உண்மையிலேயே உன்னுடைய ஆற்றல்கள் பெரியது; உன்னைப் பாராட்டித் தான் ஆகவேண்டும். உனக்கு என்ன வரம் வேண்டும் கேள்," என்றான் இந்திரன்.

அதைக் கேட்டதும் 'ஹ... ஹா..' என்று சிரித்தான் அரசன். "என்னிடம் தோற்றோடிய நீ எனக்கு வரம் தருகிறாயா? நல்ல கதை இது. நான் அல்லவா உனக்கு வரம் தரவேண்டும்? உனக்கு என்ன வரம் வேண்டுமோ கேள்!" என்றான் திமிராக.


இந்தச் சந்தர்ப்பத்திற்காக காத்திருந்த இந்திரன், "நான் ஒரு வேள்வி செய்யப்போகிறேன். அதில் வேள்விப் பசுவாக நீர் வந்து பலியாக வேண்டும். இதுவே நான் விரும்பும் வரம்," என்றான்.



இதைக் கேட்டதும் திடுக்கிட்டான் அரசன். இந்திரனது சூழ்ச்சி அப்போது தான் அவனுக்குப் புரிந்தது. தான் இத்தனை அரிய கலைகளைப் பெற்றிருந்தும் ஏமாந்துவிட்டதை எண்ணி வருந்தினான்.

வேறு வழியின்றி இந்திரனுடன் வேள்விப் பசுவாக வரச் சம்மதித்தான். நிம்மதியடைந்த இந்திரன் வேள்வித் தீயில் பசுவை பலியிட்டான்.


எத்தனை தான் திறமைகள் உங்களிடமிருந்தாலும் தலைக்கணம் கூடாது; பெருமை அழிவைத் தரும்.





பறக்கும் தட்டில் உள்ளவர்கள் எந்தப் பக்கம் இறங்குவார்கள் என்பதைக் காட்டுங்கள்.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **29.12.2001.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **426**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 424

பரிசுக்குரியவர்:
எ.ராஜீவ் குமாரன்,
விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரி, நீர்கொழும்பு.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| எஸ்.தயாபரன்,<br>ஸ்ரீ இராமகிருஸ்ணா மத்திய கல்லூரி, கலஹா. | சி.விசித்ரா,<br>ப/அப்புத்தளை த.ம.க., அப்புத்தளை. |
| வி.ராகுலன்,<br>ஆரையம்பதி, பரமனைநார் கோயில் வீதி உள்வீதி. | இரா.விகாஷினி,<br>ஹைலன்ஸ் மத்தியக் கல்லூரி, ஹட்டன். |
| து.கார்த்திகேயன்,<br>ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி, திருகோணமலை. | ஜே.சிந்துஜா,<br>1/3,பிரதானவீதி, மடுல்கல. |
| ஸ்ரீ லங்கீர்த்தன்,<br>கொ/இந்துக்கல்லூரி, கொழும்பு-04. | அஜீம் அன்வர்பே,<br>மலாய் வீதி, மணல்தோட்டம், கல்பிட்டி. |
| எஸ்.கவிஷாலினி,<br>இந்துதேசிய கல்லூரி, புஸ்ஸல்லாவ. | அசானா இல்மா அம்சீக்,<br>புனித தோமையார் கல்லூரி, மாத்தளை. |

## வரைபடங்கள்

* வரைபடங்களை வரையும் முறை 4000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே நடைமுறையில் இருந்து வருகிறது. பாபிலோனியர்கள் களி மண்ணால் வரைபடத்தை வரைந்தார்கள்.
* பழங்கால எகிப்தியர்கள் பேபிரஸ் (பேப்பர்களின் முன்னோடி) என்ற பொருள்களால் வரைபடத்தை தயாரித்தார்கள்.
* உலக வரைபடத்தை தொலமி என்ற கிரேக்க அறிஞர் கி.பி.160ல் வரைந்தார். இந்த வரைபடத்தில் அமெரிக்கா, அஸ்திரேலியா, அண்டார்க்டிகா போன்றவை இருக்காது. ஏன் தெரியுமா? இவை இருப்பதே தொலமிக்கு தெரியாது.
* அச்சிடப்பட்ட வரைபடத்தை முதல் முதலாக தயாரித்தவர்கள் சீனர்கள். கி.பி.1155ல் இதை அச்சிட்டார்கள்.
* டாக்சுவல் மேப் என்பதைப் பற்றி கேள்விப்பற்றிருக்கிறீர்களா? பார்வையற்றவர்கள் தெரிந்துகொள்வதற்காக 3-டி'யில் வரையப்பட்டிருக்கும் வரைபடங்களைத்தான் டாக்சுவல் மேப் என்கிறார்கள். வரைபடங்களின் எல்லைக்கோடுகளை தொட்டு உணர்ந்துகொள்ளலாம்.

## நூலகங்கள்

உலகிலேயே மிகப் பெரிய நூலகம் அமெரிக்காவில் வாஷிங்டனில் உள்ள லைப்ரரி ஆப் காங்கிரஸ் இங்கு சுமார் ஏழு கோடி புத்தகங்கள் உள்ளன. இதற்கடுத்து ரஷ்யாவில் மாஸ்கோவில் உள்ள லெனின் நூலகம். இங்கு சுமார் இரண்டரை கோடி புத்தகங்கள் உள்ளன. சோவியத் ரஷ்யாவில் 600 பேருக்கு ஒரு நூலகம். இங்கு 96,700 பொது நூலகங்கள் உள்ளன. இந்தியாவில் மொத்தம் 6150 நூலகங்கள்தான் உள்ளன. தமிழகத்தில் மட்டும் சுமார் 1,500 நூலகங்களுக்கு மேல் உள்ளன. சென்னை கன்னிமாரா, தஞ்சை சரஸ்வதி மகால், அடையாறு உ.வே.சா. நூலகங்கள் தமிழகத்தில் சிறப்பானவை.

## தவளைகள்

தவளைகள் பற்றி பெரும்பாலானோருக்கு பல உண்மைகள் தெரியாது. தெரியாது என்ப வர்கள் தெரிந்து கொள்ளுங்கள். தவளைகள் பெரும்பாலும் பூச்சிகள், புழுக்கள் மற்றும் சிலந்திகள் ஆகியவற்றைத் தான் உண்ணும். இதைத் தவிர இன்னொன்றையும் சாப்பிடும்.



சில நேரங்களில் தனது தோலையே தவளை கடித்து விழுங்கும். ஆண்டுக்கு சில முறை தவளை தனது தோலை உரிக்கும். அப்போது தனது முன்னங் காலால் தலையில் இருக்கும் பழைய தோலை பிடித்து இழுத்து வாயில்போட்டு மெல்லும்.

தவளை பூச்சியைப் பிடித்து விழுங்குவது எப்படி தெரியுமா? நாக்கை நீட்டி பூச்சியை பிடித்து வாயில் போட்டுக் கொள்ளும். பிறகு தனது கண்களை இறுக மூடும். முட்டை போலிருக்கும் அதனுடைய கண்கள் கீழ்நோக்கித் தாழ்ந்து வாயின் கூரையை



அழுத்தும். அவ்வளவு தான்! வாயில் இருக்கும் பூச்சி வயிற்றுக்குள் போய்விழும்.

### உங்களுக்கு தெரியுமா?

* தவளைகளின் நாக்கில் ஏராளமான சுவை அரும்புகள் உள்ளன.
* உணவு நன்றாக இல்லாவிட்டால் அவற்றை தவளைகள் வெளியே துப்பிவிடும். அடேயப்பா! ருசியாகத்தான் சாப்பிடும் போலிருக்கிறது என்கிறீர்களா?


### தவளை தண்ணீர் குடிக்குமா?

தவளை தண்ணீர் குடித்து யாராவது பார்த்திருக்கிறீர்களா? யாரும் பார்த்திருக்க மாட்டீர்கள். தவளைக்கு தாகமே எடுக்காதா? இல்லை... தண்ணீர் குடிக்க வேண்டிய அவசியமே இருக்காது. நாள் முழுவதும் தண்ணீரில் மூழ்கியிருப்பதால் தனக்கு வேண்டிய தண்ணீரையெல்லாம் தோல் மூலமாகவே உறிஞ்சிக் கொள்ளும்.

### தவளையின் கண்கள்

தவளையின் கண்கள் நீர் மூழ்கி கப்பலில் இருக்கும் பெரிஸ்கோப் கருவியைப் போல முகத்துக்கு மேலே நீட்டிக் கொண்டிருக்கும். அதன் மூலமாக எல்லா திசைகளிலும் அதனால் கூர்ந்து பார்க்க முடியும். எந்தப் பக்கம் பூச்சி வந்தாலும் ஒரே 'லபக்'தான். முட்டைக் கண்களை வைத்துக் கொண்டு தண்ணீரில் மூழ்கிக் கொண்டே தனக்கு சாதக பாதகமாக ஏதாவது நடக்கிறதா என்று பார்க்கும். ஏதாவது கண்ணில் மாட்டினால் அவ்வளவுதான். சாப்பிட்டுவிடும்.

பாம்புக்குத்தான் இங்கே விஷம் அதிகம். ஆனால் தென் அமெரிக்காவில் 'கோல்டன் டார்ட் ப்ராக் அதாவது பொன்னிற கோடுள்ள தவளைகளைக் கண்டாலே தலை தெறிக்க ஓடிவிடுவார்கள். இவைகளில் ஒரு தவளையின் உடலில் 1500 பேரைக் கொல்வதற்கு ஏற்ற விஷம் இருப்பதாகத் தெரியவந்துள்ளது.



# மௌனராகம்



பற்குணன் அம்பிகாபதி–மன்னார்

அந்த ஆசிரியர் கலாசாலை அன்று அமர்க்களமாகக் காணப்பட்டது. காரணம் கலாசாலையின் இறுதி நாள் என்பதே தான், ஆசிரியமாணவர்கள் எல்லோரும் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தனர். ஆனால் வினித் மட்டும் எதையோ பறி கொடுத்தது போல் சோகமே உருவாக அமர்ந்திருந்தான். ஆம் அவன் அதே கலாசாலையில் பயின்று வந்த சக ஆசிரியை சகியை மனமார நேசித்தான். ஆனால் சகியோ இவன் காதலுக்குப் பச்சைக் கொடி காட்ட மறுத்தாள். கல்வியிலே கரை கண்ட வினித் தற்போது காதல் வசப்பட்டதில் தவறு என்று சொல்ல என்ன இருக்கின்றது; இருந்தும் சகி இவன் முன் கேள்விக் குறியாகவே விளங்கினாள். காதல் வேதனையில் கருகிப்போயிருந்த வினித்தைப் பார்த்து ஏனைய ஆசிரிய மாணவர்கள் கேலி செய்ய ஆரம்பித்தனர். "என்னடா மச்சான் உனக்கு இவள விட்டா வேற பொம்பிளயா இல்ல?" என்று கூறிக்கொண்டிருக்கையில் அவ்வழியால் சகி சென்று கொண்டருந்தாள். "டேய் மச்சான் அங்க பாருடா உன்ர கனவுக் கன்னி போறா" என்று கூறவும் அது எதிர்பாராத விதமாக சகியின் காதில் விழுந்து விட்டது. அவள் இவர்களைப் பார்த்து ஒரு முறை முறைத்து விட்டுச் சென்றாள், இவ்விடயம் வினித்திற்கு வெந்த புண்ணில் வேல் பாய்ந்தது போல் இருந்தது. வினித்தின் வேதனை அவனுக்கல்லவா தெரியும். இருந்தும் வினித் அமைதியாக இருந்தான்.

நேரஞ் செல்லச் செல்ல ஒவ்வொருவராக கலாசாலையை விட்டு வெளியேறிக் கொண்டிருந்தனர். வினித் மட்டும் சகியின் வருகைக்காக வாயிலில் காத்திருந்தான். சகிதன் தோழிகளுடன் சுவாரசியமாக உரையாடியபடி வந்து கொண்டிருந்தாள். திடீர் என வினித்தைக் கண்டதும் அவள் முகம் சட்டென மாறியது. வினித்தை ஏறிட்டுக் கூடப் பார்க்காமல் மௌனமாக அவ்விடத்தை விட்டுக் கடந்து சென்றாள். கொஞ்சத் தூரம் சென்றவள் ஏதோ நினைத்தவளாக திரும்பி வினித்தை வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள். இதனை அவதானித்த வினித் அவள் நிற்கும் இடத்திற்கு விரைந்து சென்றான். பாவம் அவன் சகியை நெருங்க முன் அவளருகே வந்து நின்ற பேருந்து அவளைச் சுமந்த வண்ணம் விரைந்து சென்றது. மனதில் சோக அலை வந்து மோத அவள் சென்ற பேருந்து மறையும் வரை பார்த்துக் கொண்டிருந்தான். சிறிது நேரம் செல்ல அவன் பயணிக்கும் அந்த தனியார் பேருந்து வந்து அவன் அருகில் நிற்கவும் ஏற மனமின்றி அதில் ஏறிக் கொண்டான் வினித். எண்ணங்கள் பலவாறு அலை மோத எங்கோ சிந்தனையைப் பறி கொடுத்தவன் போல் இருந்தவனை நடத்துநரின் ஆறாங்கட்டை இறக்கம் என்ற குரல் கேட்டு பதறி அடித்துக்கொண்டு கீழே இறங்கினான் வினித், வீட்டை அடைந்தவன் மறு நாளே அந்த இந்துக்கல்லூரிக்குள், காலடி எடுத்து வைத்து தனது பணியைச் சிறப்பாகச் செய்து வந்தான். நாட்கள் நகர நகர வீட்டிலே பெற்றோர் திருமணப்பேச்சை ஆரம்பித்தனர்..........

ஆனால் வினித் தனக்கு திருமணமே வேண்டாம் என்றும், தான் திருமணம் முடிப்பதில்லை என்றும் ஆணித்தரமாகக் கூறினான். பெற்றோரும் எவ்வளவோ வற்புறுத்தியும் வினித் தன் மனதை மாற்றப் போவதில்லை என அடித்துக் கூறிவிட்டான்.

காலங்கள் இறக்கை கட்டிப் பறந் தது. இப்போதெல்லாம் பெற்றோர் வினித்தின் முன்னிலையில் திருமணப் பேச்சே எடுப்பதில்லை. சுமார் ஆறு வருடங்கள் கழிந்த நிலையில் வினித்திற்கு முதுமை தட்டி தலையில் மொட்டை விழ ஆரம்பித்தது. வீணாக அவனது வாழ்வும் பாழ் அடைந்து கொண்டிருந்தது. இவ் வேளையில் அவனுக்கு அந்த இடமாற்றக் கடிதம் வந்தது. மாற்றம் கிடைத்த அந்த இடம் ஒரு கிராமப்புறம் என்பதால் இயற்கை வளம் எழில் கொஞ்சிக் காணப்பட்டது. பாடசாலையும் ஒரு ஏரிக் கரையோரம் அமைந்திருந்ததால் இதமான காற்று எந்த நேரமும் சில் என்று வீசிய வண்ணம் ஏதோ ஒரு வித இன்ப உணர்வை ஏற்படுத்தியது. அவனது மனம் ஏதோ ஒரு புதுவித சுகத்தை அனுபவிப்பது போல் இருக்க அவன் அந்தக் கல்லூரிக்குள் கால் பதித்து நின்ற போது பாடசாலை அதிபர் அவனை வரவேற்று அவனுக்குரிய கட்டளைகளை இட்டார். அதிபரின் கட்டளைக்கு இணங்க அந்த ஆரம்பக் கல்வி வகுப்புக்குள் காலடி எடுத்து வைத்தவன் ஒரு கணம் அதிர்ச்சியுற்று நின்றான், ஆம் சகி அவனுக்கு அயல் வகுப்பில் பாடம் நடத்திக் கொண்டிருந்தாள்.


வினித்தைக் கண்ட சகியும் திக்பிரமையுடன் செய்வதறியாது சிலையாக நின்றாள். வினித்தின் விழிகள் சகியை மெய் மறந்து பார்த்தன.இடையிடையே இளம் நரை தலையில் கூடவே குழி விழுந்த கன்னம், நெற்றியிலே வெட்டி ஒட்டப்பட்ட இஸ்டிக்கர் பொட்டு, கழுத்திலே ஒற்றைச் சங்கிலி எல்லாமே அவள் இன்னும் திருமணம் முடிக்கவில்லை என்பதை அப்பட்டமாகக் காட்டிக் கொடுத்தன. "ஆ...ஆ...ஆ... அப்படியானால் சகி சகி-இன்னும் எனக்காகவே காத்திருக்கின்றாளா? வினித்தின் மனதில் ஏற்பட்ட கேள்விக்கு சகி விடையளிப்பது போல் சகியின் மெல்லிய புன்னகை அமைந்திருக்க அவள் ஏதாவது பேசுவாள் என்று அவனை ஏங்க வைத்தது. ஆனால் புன்னகையைப் படரவிட்ட சகி மௌனமாகவே நின்றாள். வினித்திற்கு வார்த்தைகள் வெளிவர மறுத்தன. சகியின் மனதில் மௌனம் நிரந்தரமாகவே குடி கொண்டது போல் அவள் பேசாதிருக்க, வினித் செய்வதறியாது தடுமாறி நின்றான்.

# ஐயோ நான் இல்லை

"மகன் நண்டு வாங்கி கொண்டு வந்திருக்கிறேன் கொண்டு போய் டவுனில இருக்கும் உன் மாமி வீட்ல கொடுத்து விட்டு வா" என கூறிக் கொண்டே நண்டு வைத்திருந்த பையை கையில் தந்து இருபது ரூபாய் காசை நீட்டினார் அப்பா.

வாங்கிக் கொண்ட நான் வீதிக்கு வந்தேன் சிவராசாவின் பஸ் வந்தது. நிறுத்தி ஏறிக் கொண்டேன். அப்பஸ்ஸில் அதிகமான இருக்கைகள் ஆள் இன்றி வெறுமையாக இருந்தன. நன்றாக காற்று படக்கூடிய இடமாக இருந்த இருக்கையில் போய் அமர்ந்து கொண்டேன்.

நான் அமர்ந்திருந்த இருக்கைக்கு முன் இருக்கைக்கு கீழ் நண்டு இருந்த பையை வைத்து விட்டேன். பஸ் நாவமரத்தடி சந்திக்கு போய் நின்றதும் பலர் ஏறிக் கொண்டார். பஸ் நிரம்பி விட்டது. என் இருக்கைக்கு முன் இருக்கையில் ஒரு நடுத்தர வயதுப் பெண் அமர்ந்து கொண்டாள்.



ஆரையம்பதி சி. நாகேந்திரன்

பஸ் காத்தான்குடியால் போய்க் கொண்டிருக்கும் போது என் இருக்கைக்கு முன் இருக்கையில் இருந்த அந்த பெண் என்னைத் திரும்பிப் பார்த்து முறைத்துக் கொண்டாள். அவளைப் பார்த்து புன்னகை ஒன்று செய்தேன் திரும்பிக் கொண்டாள். சில நிமிட இடைவெளிக்குப் பின்னர் மீண்டும் என்னைப் பார்த்து பல்லைக் கடித்துக் கொண்டே முறைத்துப் பார்த்தாள்.

அவளின் அந்த பார்வையில் முன்பை விட கோபம் அதிகமாக காணப்பட்டது. அதனை பொருட்படுத்தாது மீண்டும் அவளை பார்த்துப் புன்னகைத்தேன். அவளுக்கு மேலும் கோபம் அதிகரித்திருக்க வேண்டும் கடிக்க வரும் நாய் போல் பார்த்த அவள் மறு பக்கம் திரும்பிக் கொண்டாள்.

அவளின் அந்த கோபப் பார்வையின் அர்த்தம் எனக்கு விளங்கவில்லை. "இவக்கு என்ன செய்தேன். என்னையே திரும்பித் திரும்பி பார்த்து கோபப் படுகிறாவு. இனி என்னைப் பார்த்து முறைத்தால் வாய்க்கு வந்தமாதிரி கதைத்து போடுவன்" என நினைத்துக் கொண்டேன்.

அவள் மீண்டும் முறைத்துப் பார்த்தாள். எனக்கு வந்த கோபத்துக்கு அவளை பார்த்தேன் ஒரு பார்வை அவ்வளவுதான்" ஏய் உன்ர வயசி என்ன என்ர வயசி என்ன" என கேட்டவாறு எழுந்தாள்.

அவளின் அந்த வார்த்தையில் நிலை குலைந்து "என்ன... என்ன செய்த" வார்த்தை தடுமாற கேட்டேன். "செய்வதையும் செய்து விட்டு நல்ல பிள்ளையாகவ நடிக்கிறாய்?" அவள் கேட்டாள்.

"என்ன நடந்தது" என்று கேட்டவாறு பஸ்ஸில் இருந்த சில நடுத்தர வயது மதிக்கத் தக்க ஆண்கள் சிலர் எழுந்து கொண்டனர்.

"இவன் என் காலை சுரண்டுகிறான்" என்றாள். "ஐயையோ நான் ஏதுவும் செய்யவில்லை அப்படி செய்கிற ஆளும் இல்ல" என்றேன் பதற்றத்துடன். "இப்படி செய்தவன் எல்லாம் நான் தான் செய்தன் என்று சொல்லுவானுகாள இப்படியான ஆக்களுக்கு ரெண்டு போட்டால்த்தான் திருந்துவானுகள்" என கூறியவாறு "என் காலையும் யாரோ சுரண்டுகிறாங்க" என கூறியவாறு இருக்கைக்கு கீழ் பார்த்தார். "இதுதானா? சுரண்டுன" என கேட்க எல்லோரும் இருக்கைக்கு கீழ் பார்த்தனர். அங்கே நான் கொண்டு வந்த நண்டுகள் பையை விட்டு வெளியே வந்து அங்கும் இங்குமாய் ஊர்ந்து திரிந்தன. அந்த நடுத்தர வயதுப் பெண் என்னைப் பார்த்தாள் இப்போ அவள் பார்வையில் கோபம் தணிந்து சாந்தம் தெரிந்தது. என்னை பரிதாபத்தோடு எல்லோரும் பார்த்துக் கொண்டிருந்தனர். அந்த பெண்ணின் கண்களில் கண்ணீர் கசிந்து முகத்தை நனைத்துக் கொண்டிருந்தது.

# சாயும் காதல் கோபுரங்கள்

'விஜயாவை சந்திப்பது, கதைப்பதை விடு. அவளை நீ கலியாணம் முடிப்பதை நாங்கள் அனுமதிக்கப் போவதில்லை.' அம்மா அப்படி சொல்லிவிட்டா.

விஜயாவை நான் ஆரம்பகாலத்தில் சந்தித்தபோது தேவகன்னி போல... நெருங்க முடியாத நெருப்பாக அவள் இருந்தாள். எனது நினைவிலும் கனவிலும் ஒளி வெள்ளம் போல ஊடுருவி அந்த ஆனந்த வெள்ளத்தில் என்னை தெப்பம் போல மிதக்க வைத்தாள்.

அவளில்லாமல் நான் வாழ்வது அரிதிலும் அரிது என்பதை அவளது பெண்மைக்கேயுரிய போராயுதங்கள் எனக்கு நாழிகைக்கு நாழிகை எச்சரிக்கைகளை விடுத்துக்கொண்டிருந்தன.

பல நாட்கள் அவள் பின்னால் அலைந்தேன். அந்த ரதியின் கடைக்கண் பார்வைக்காக தவமிருந்தேன். அவள் முன்பாக எனது தகுதியின்மைகள்கூட சூரிய கதிர் முன் பனிபோல மறைந்துவிட ஆண்மைக்கே உரிய பேராண்மை என்னுள் துளிர்விட்டது.

அத்துடன் அந்த பூமகள் பார்வை என்பக்கம் திரும்பியது மெல்ல...

'மச்சான்.. நீ விஜயாவை மணம் செய்வதை எங்களுடைய உயர் சமூக மட்டம் என்றைக்குமே அனுமதிக்கப் போவதில்லை. இதனால் உனக்கு மட்டிலுமன்றி விஜயாவுக்குமே என்றும் பிரச்சனையாகத்தான் இருக்கும். இந்த நிலையிலேயாவது நீ அவளை விட்டு விடுவதே நல்லது.'

எனது உயிருக்குயிரான நண்பன்கூட கூறிவிட்டான்.

விஜயா நல்லவள், அதனால்தான் அவள் தனது தகதி தகுதியின்மைகள் பற்றி வெளிப்படையாகவே பேசுகின்ற சுபாவம் கொண்டவளாக இருந்தாள். எந்த நிலையிலும் தனது ஏழ்மையை மனதில் கொண்டு பெண்மையை பயன்படுத்தி என்னை தனது வலையில் வீழ்த்த அவள் எத்தனிக்கவில்லை.

இன்று விடுமுறைதினம். பத்துமணிக்கெல்லாம் புதின பத்திரிகைகள் அனைத்தும் வாசிகசாலைக்கு வந்துவிடும். அங்கு சென்றால் அவளை சந்திக்கலாம்.

எப்படியும் இன்று ஒரு தீர்க்கமான முடிவு எடுத்துவிட வேண்டும்.

நகரை நோக்கி செல்லும் வழியில்... உள்துறை முகவீதியிலிருந்து பிரியும் சவக்காலைத்தெரு எப்போதும் சன நடமாட்டம் குறைந்தே காணப்படும். ஆனால் பராய மடையாத சிறிசுகள் பாடசாலை மாணவர்களின் காதல் அரங்கேற்றங்களுக்கான திட்டங்கள் வகுக்கப்படும் ஒதுக்குப்புறமும் அதுதான். தெருவின் மதிலுக்கு மறுபுறமாக திட்டமிடல் அமைச்சு என இயங்குவது வேறு.

விடுமுறை தினமாதலால் நகரத் தெருக்கள் வெறிச்சோடி இருந்தன...

பிச்சை எடுக்கும் ஏழ்மை நிலையிலும் காதலால் இணைந்த ஒரு நடுத்தர சோடியை இந்த நகரில் கவனிக்காதவர்கள் இருக்கமாட்டார்கள்.

நல்ல முறுக்கேறிய உடல் வளம் கொண்ட அவன் அழுக்கடைந்த நாலு முழ வேட்டியை மடித்துக் கட்டியபடி குடி போதைக்கிறக்கம் கண்களில் துவங்க நெஞ்சை நிமிர்த்தி ராஜ திமிருடன் நடந்து செல்வதும் அவள் சில நாட்களாகவே அவன் வயப்பட்டு பின்னால் சுற்றுவதும் எவர் கவனத்தையும் திருப்பவே செய்யும்.

தோளை உயர்த்தி தலையை சுழற்றிய வேகத்தில் அவளது இரட்டைப் பின்னல் எனது முகத்தைச் சீவிச் சென்றது.

மச்சாளுக்கும் நான் தன்னை தவிர்த்து விஜயாவை விவாகம் செய்ய எண்ணுவது அறவே பிடிக்கவில்லை. விஜயா என்னை ஒத்த வயதினள். ஆனால் மச்சாள் ஆறுவயதாக்கிலும் இளையவள். நேற்றுவரை பாடசாலை போய்க் கொண்டிருந்தவள். ஒத்த வயதாக இருந்திருந்தால் விஜயாவை விரட்டிவிட்டு என்னைக் காதில் பிடித்து தன் வீட்டு மூலையில் இருத்தியிருப்பாள்! சொல்ல முடியாது.

நகர பிரதான வீதியை நான் தாண்டும் போது இருவரும் என்னை கடந்து சென்றார்கள்.

வாசிகசாலையை சென்றடைந்தபோது விஜயா வந்திருக்கவில்லை. சில மணி நேரம் பத்திரிகைகள் படித்தபடி அங்கு தாமதித்தேன். எப்படியும் விஜயா வந்து விடுவாள்... நிச்சயமாக வந்துவிடுவாள்...

அந் நாட்களிலெல்லாம் விஜயாவை அண்மித்தவுடன் எனது நெஞ்சு படபடக்கத் தொடங்கிவிடும். அவளது பெண்மையின் சாயல்களை அருகருகாக காணும் தைரியமற்றவனாக நான் இருந்தேன். எப்படி இவளை என்னால் கவர முடிந்ததென எண்ணி ஆச்சரியமடைவேன்.

நான் நாட்டிவிட்ட காதல் பயிருக்கு அவள் நீரூற்றினாள்... படிப்படியாக எனது அச்சத்தை தெளிவித்தாள்... தன்னை நெருங்க இடம் கொடுத்தாள்... எனது பதட்டத்தை அர்த்தமற்றதாக்கினாள். அவளை அண்மிக்க அவளுடன் காலத்தைக் கழிக்க வெறி கொண்டேன்.

மதியம் பன்னிரண்டு மணி. இதன்மேல் விஜயா வரமாட்டாள். விடுமுறை தினங்களில் விஜயா வாசிகசாலைக்கு வராவிட்டால் மாலையில் கடற்கரையில் என்னை எதிர்கொள்வாள். வாசிகசாலையில் பேசி கதைக்க முடியாதாகையால் அவசியம் கருதி அந்த ஏற்பாடு.

வாசிகசாலை படியை தாண்டி சிறிது தூரமே நடந்திருப்பேன்... எனது முறை மச்சாள்... எனக்கு மிக இளையவள் எதிரே வந்து கொண்டிருந்தாள். என்னை கடக்கும் சமயம் வெட்டு ஒன்று துண்டு இரண்டாக கூறினாள்..

'இவையளுக்கெல்லாம் தங்களுடைய உறவுக்குள்ளாக உள்ள பெண்கள் கண்ணுக்குள் குத்துகிற மாதிரி இல்லை. ஆருக்கும் பின்னால் அலைந்து திரிந்து பிடிச்சாத்தான் பொம்பிளையாகப்படுகிறது.'



திருமலை வீ.என். சந்திரகாந்தி

விஜயா சுயநலக்காரி அல்ல. எனக்காக எதையும் செய்ய தயாரான பெண்தான் அவள்.

ஒரு கட்டத்தில் அண்மிக்க முடியாத தீப்பிழம்பாக இருந்த அவளை நெருங்க நெருங்க அச்சுடர் தான்னென ஒளி பாய்ச்சும் நிலாவாக மாறி போதையூட்டியது.

'நான் உம்மைத்தான் மணம் முடிப்பேன்' போன்ற பல உறுதி மொழிகளை இருவரும் பரிமாறிக் கொண்டோம். திருமணப் பதிவோ மத ரீதியான அங்கீகாரமோ காதலில் கட்டுண்டு காதோடு கதை பேசும் மொழிக்கு முன்னால் செயலிழந்து விடுகின்றன...

நான் எங்கு செல்ல அழைத்தாலும் விஜயா வந்தாள்... எந்த எல்லைக்கும் அவள் வந்தாள்.. என்னை நம்பினாள்!

விஜயாவை சந்திக்காமலே வாசிகசாலையால் வீடு வந்து சேர்ந்தபோது மதியம் ஒரு மணி. தங்கை உணவை மேசைக்கு எடுத்துவிட்டு காத்திருந்தாள்.

உணவு பரிமாறியபடியே அவள் பேசினாள்...

'அண்ணா... சிறிது நேரம் முன்பதாக ஒரு மாப்பிள்ளையின் பெற்றோர் வந்திருந்தவை. என்னை பெண் பார்க்க வேண்டுமென்று அடம் பிடிக்க தொடங்கிவிட்டினம். அப்பாவாலும் மறுத்துக் கூற முடியவில்லை. பெண் வடிவாக இருந்தால் சீதனத்தில் 'கறாராக' இருக்கப் போவதில்லை என்று கூறி அப்பாவை சம்மதிக்க வைச்சிட்டினம். நிதி நெருக்கடியாக இருக்கிறதாலைதான் அப்பா இறங்கி வந்தவர் என்று அம்மா எனக்கு சமாதானம் கூறினா. அண்ணாவை கேட்காமல் இந்த ஏற்பாட்டுக்கு நான் தயாரில்லை என்று கூறி மறுத்துவிட்டேன்.'

தங்கை பாவம். என்னை நம்பியிருக்கிறாள். எனது வாழ்க்கையை தியாகம் செய்தாகிலும், அவளுக்கு நல்லதொரு வரனைப் பெற்றுக் கொடுக்க வேண்டும்.

ஒரு கணம் அந்த ஏழ்மை நிலையில் உள்ள நடுத்தர வயது சோடியை மனம் எண்ணிப் பார்க்கின்றது. அங்கு நிபந்தனைகளோ நிர்ப்பந்தங்களோ கிடையாது. ஏழ்மையின் மத்தியிலும் அது ஒரு காதல் சாம்ராஜ்யம்!

எனக்குத்தான் விஜயாவை மணம் முடிக்க கொடுத்து வைக்கவில்லை போன்று இருக்கின்றது.

எனது சுபீட்சமான எதிர்காலத்தை எண்ணி ஏங்கும் அம்மா... எனது நன்மையில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்ட எனது நண்பன்... தனது வாழ்க்கையை எனது கைகளில் ஒப்படைத்துவிட்ட தங்கை... என்மீது உரிமை பாராட்டும் எனது மச்சாள்.

மாலை நான்கு மணிக்கு மேல்... கடற்கரையில் விஜயாவை சந்தித்தேன். அலைகள்மோதிப் பிரியும் வெண்மணற் பரப்பில்... சீறிப் பாயும் நீருக்கு போக்கு காட்டியபடி அவள் என்பின்னால் ஓடி வருவதும் என்னை தோளில் தள்ளிவிடுவதுமாக குழந்தையாக மாறி குதூகலித்து துள்ளி விளையாடினாள்.

இன்றுஎப்படியும் விஜயாவுக்கு எனது மறுப்பைத் தெரிவித்து விட வேண்டும். காதலிக்கும் ஆண்கள் எல்லோருமே கட்டாயம் விவாகம் செய்ய வேண்டுமென்று சட்டமா இருக்கின்றது.. ஒரு இளமை வேகம்... இனம் புரியாத கவர்ச்சி... ஒரு உத்வேகம் சில தூண்டுதல்களை ஏற்படுத்துகின்றன. அந்த இளமைத் துடிப்பு தணியும் போது ஆணைப் போலவே பெண்ணும் தனக்கு எது சரி எது பிழை என்பதை சிந்திக்கவே தலைப்படுவாள். விஜயா தனது சமூக அந்தஸ்து... நிதி நிலைமை ஆகியவை பற்றிய விளக்கங்கள் அற்றவளல்ல. நான் கூறினால் புரிந்து கொள்வாள்.

விடுமுறை தினமாதலால் மக்கள் கூட்டம் வெள்ளமாக அலைமோதியது. எங்களுக்கு முன்னால் சனத்திரள் மத்தியில் சிறியதொரு சல சலப்பு. திரும்பி பார்த்தேன். நான் நகரில் சந்திக்கும் நடுத்தர வயது காதல் சோடி! இரண்டு 'பொலிசார்' அவனை தர தரவென இழுத்து சென்று 'ஜீப்' வண்டி ஒன்றில் ஏற்றினார்கள். அவனிடம் போதை வஸ்து பழக்கம் இருந்திருக்க வேண்டும். அந்த நடுத்தர வயது ஏழைப் பெண் தலையில் இரு கைகளாலும் அடித்து ஓலமிட்டபடி அந்த 'ஜீப்' வண்டியின் பின்னால் ஓடினாள். நானும் அண்மித்தேன்.

'ஜீப்' வண்டி போய்விட்டது. அவள் தனது காதலனை இழந்து விட்டாள். அந்த வேக்காட்டில் அவளைத் திட்டினாள்.

திரும்பி விஜயாவை பார்த்தேன். அவள் யாரோ ஒரு குழந்தைக்கு விளையாட்டு காண்பித்தபடி இருந்தாள்.

தன் காதலனால் ஏமாற்றப்படும் நிலையில் எந்த ஒரு பெண்ணும் ஆத்திரமுற்று பிரயோகிக்கக்கூடிய யதார்த்தமான கருத்துச் செறிவு அந்த ஏழைப் பெண்ணின் சொற் பிரயோகத்தில் இருந்தமை எனக்கு உறைக்க செய்தது

'ஏய் பாவி மனுஷா... ஒரு வயிற்று சோற்றுக்காக உனக்குப் பின்னால் வந்தேனே... இப்போ இரண்டு வயிறுகளை பட்டினி போட்டு போகிறாயே.. நீயும் ஒரு ஆண்மகன் தானா?'

என்மனச் சாட்சி என்னை சுட்டெரிக்கின்றது!

“யெஸ். மதுலதா ஸ்பீக்கிங்” என்றாள் தோட்டத்தில் மூங்கில் கூடையில் சன்னமாக சுழன்று கொண்டு- கார்லெஸ் டெலி போனில். மடியில் நாய்க்குட்டி.

“என் பேரு மாது” என்றான் பொது தொலைபேசியில் இருந்து சேது.

“ரசிகனா?”

“அப்படியும் சொல்லலாம். இந்த நிமிஷம் கூட நான் உங்களை ரசிச்சிக்கிட்டுதான் இருக்கேன்.”

“பிக்சர் போன் இங்கே இன்னும் வரல்லையே. ஓ. கைல என் போட்டோ வச்சிருக்கிங்களா?”

“ஆமாம். ஆனா மதுலதாவோட போட்டோ இல்லை, ரோஸ்லின் போட்டோ.”

“வாட் ஈஸ் த டிஃபரன்ஸ் சார்?”

“எ ட்ரெஸ் மேடம்.”

“என்னது?”

“அதாவது நீங்க ரோஸ்லினா இருந்தப்போ எடுத்த பலான புகைப்படங்கள் நெகட்டிவோட என்கிட்டே இருக்குன்னு சொல்றேன். ஒண்ணு, ரெண்டு இல்லை; ஒரு டஜன். பிளாக் அண்ட் வொய்ட் போர்டோஸ்தான். ஆனாலும்... என்ன அப்ப ஒரு பதினெட்டு வயசு இருக்குமா உங்க ளுக்கு?”

“நான்சென்ஸ்!”

“தப்பா சொல்லிட்டனா? இருபது இருக்குமா?”

> “எக்ஸ்ட்ரா ஆர்ட்டிஸ்ட் சார். துர்க்கான்னு பேரு. மதுலதாவுக்கு டூப்பா தாராளமா பயன்படுத்தலாம். ரேப் சீன்ஸ்ல எல்லாம் இன்னும் கொஞ்சம் தாராளமாவே கேமிராவை ஓட விடலாம் சார்”

இந்த முனையில் சேது மிக அதிர்ந்து போனான்.

பப்ளிக் பூத்தில் கதவைத் திறந்து வைத்து இந்த முட்டாள் இந்த மிரட்டல் சமாச்சாரம் என்னவோ புண்ணாக்கு வியாபாரம் போல பேச...

போன் உபயோகிக்க வந்தவன் சேதுவின் தோளைத் தொட்டான்.

“தம்பி, நீங்க பேசினதை எல்லாம் கேட்டேன். அதுக்கு மதுலதா என்ன சொன்னாப்பா?”

“நீ.. நீங்க யாரு?”

“கவலைப்படாதே. உனக்கு நல்லது செய்ய வந்திருக்கேன். வா, என்னோட. நீ பார்க்க வேண்டியது மதுலதாவை இல்லை.”

செய்த சத்தியத்தை பகலில் காப்பாற்றி விட்டான்.

துர்க்கா குளத்தில் கதாநாயகியுடன் சற்று தள்ளி குளித்தாள். திருவிழா டான்சில் ஒரு ஓரமாக சொல்லிக் கொடுத்த ஸ்டெப்சில் ஆடினாள். குடிசைகள் தீப்பற்றி எல்லோரும் ஓடும் போது இவளும் ஓடினாள். கடைசி காட்சியில் கம்பு, அரிவாளுடன் வில்லனை ஊரே துரத்தும் போது இவளும் துரத்தினாள்.

திடீரென்று ஒரு நாள் உதவி டைரக்டர் வஸந்த் இவளைப் பார்த்து தன் சகாவிடம், “ஏன்யா இவ அப்படியே அச்சா நம்ம மதுலதா சாயல்ல இல்லை?” என்றான்.

துர்க்கா அழைக்கப்பட்டாள். உயரம், அகலம், அளவுகள் எல்லாம் அளக்கப்பட்டாள். மேக்கப் போடப்பட்டு... பின் போஸ் சைடு போஸ் என்று ஒரு ரோல் முழுக்க படம் எடுக்கப்பட்டாள்.

டைரக்டர் கூட ஒரு வினாடி ஏமாந்து போய், “மதுலதாதானே?” என்று விட்டார் புகைப்படங்களைப் பார்த்து.

“நல்லா பாத்து சொல்லுங்க சார்.”

“மதுலதா இல்லையா? அப்படியே அவங்க மாதிரியே இருக்கேப்பா... எங்க பிடிச்சிங்க?”

“எக்ஸ்ட்ரா ஆர்ட்டிஸ்ட் சார். துர்க்கான்னு பேரு. மதுலதாவுக்கு டூப்பா தாராளமா பயன்படுத்தலாம். ரேப் சீன்ஸ்ல எல்லாம் இன்னும் கொஞ்சம் தாராளமாவே கேமிராவை ஓட விடலாம் சார்.”

# கண்ணாமூச்சி ரே... ரே... 4

“என்னை சந்திச்சிப் பேசணுமா உனக்கு?”

“நான் கேக்க வேண்டிய கேள்வி.”

“நான் நம்பலை.”

“நாளைக்கு பத்திரிகையிலே வந்தா நம்புவிங்க இல்லையா?

“மிரட்டலா?”

“பயமா இல்லையா?”

“எதுக்கு பயம்?”

“படம் வெளிவந்தா என்ன ஆகும்?”

“என்னதான் ஆகும், சொல்லேன்.”

“லட்சோப லட்ச ரசிகர்களோட கனவுக் கன்னியோட கடந்த கால வாழ்க்கையோட வண்டவாளம் தெரிஞ்சதும், ச்சீ! இவ்வளவுதானா இவள்னு ஆய்டும். கிர்ருன்னு ஏறின அதே ஸ்பீடுல கொடி இறங்கிடும். இதெல்லாம் சந்தோஷம்தானா உங்களுக்கு?”

“மிஸ்டர், ஏய்.. கடிக்காதே...”

“என்னது?”

“இங்கே.. இங்கே... என் நாய்குட்டியை” என்று மடியில் இருந்து அதை இறக்கி புல்வெளியில் விட்டுவிட்டு, “ம்.. மிஸ்டர். பேரென்ன சொன்னிங்க?”

“மாது.”

“மாது, நீங்க அந்த படங்களை எந்த பத்திரிகைக்கு வேணும்னாலும் வித்து பணம் சம்பாதிச்சிக்கலாம் தாராளமா. நேர்ல வந்தா என் லெட்டர் ஹெட்ல பரிபூர்ண உரிமை வழங்கி எழுதி வேணாலும் தர்றேன். வச்சிடவா போனை?”

“மேடம், விளையாடறிங்களா?”

“லுக் மிஸ்டர், மக்கள் ரொம்ப பக்குவமடைஞ்சிட்டாங்க. நான் எப்பவும் என்னை கற்புக்கரசின்னு சொல்லிக்கிட்டதில்லை. எத்தனையோ பேட்டிகள்ல, மனம் திறந்து பேசற கட்டுரைகள்ல நான் சினிமா உலகத் திலே வளர்றதுக்காக பலர் இஷ்டப்படி வளைஞ்சி கொடுக்க வேண்டியதா இருந்திச்சின்னு பளிச்சுன்னு பல தடவை சொல்லியிருக்கேன். எவ்வளவோ நல்ல குடும்பங்களேர்ந்து சினிமாவை ஒரு கலையா நினைச்சி ஈடுபட எத்தனையோ பெண்கள் வந்துக்கிட்டு இருந்தாலும். பனை மரத்தடியில பால குடிக்கிற மாதிரி.. சினிமா பெண்களைப் பத்தி பொதுமக்கள் கிட்டே எப்பவும் ஒரு சந்தேகப் பார்வை இருந்துக்கிட்டுதான் இருக்கு. அதைப் பயன்படுத்திதான் டிசைன் டிசைனா எங்களை வச்சி நினைச்சிக்கூட பார்க்க முடியாத படிக்கெல்லாம் கிசுகிசு எழுதறாங்க. என் வீட்ல இருக்கிற சித்தப்பாவுக்கும் எனக்கும் தொடர்பு இருக்குன்னுகூட ஒரு தடவை எழுதினாங்க. எழுதினவனை ஷூட்டிங் ஃப்ளோர்ல பத்து பேர் முன்னாடி அடிச்சேன். நான் ஒரு மாதிரி தம்பி. என்கிட்டே வாலாட்டினா வாலை மட்டும் நறுக்க மாட்டேன், தலையும் சேர்த்துதான். என்னோட படம் வித்துப் பாரு. தைரியம் இருக்கிறவன் போடட்டும். அதுக்கப்புறம் உன்னைக் காப்பாத்திக்க வழி யோசிச்சி வச்சிக்க.. ஐ டோண்ட் கேர் ஃபார் எனிதிங். வைடா ஃபோனை.”



## பட்டுக்கோட்டை பிரபாகர்

“பின்னே யாரை?”

“சங்கரதாஸை.”

“அது யாரு?”

“என் ஃபிரண்ட். வா, உன்னை ஒண்ணும் கற்பழிச்சிட மாட்டேன். கை நிறைய பணம் கிடைக்கும்” என்று காரில் ஏறிக்கொண்டு சுதிர் கதவைத் திறந்து விட...

சற்றுத் தயங்கிவிட்டு ஏறிக் கொண்டான் சேது.

* * *

அவள் பெயர் துர்க்கா. துர்க்காவிற்கு எலுமிச்சைப் பழத் தோலின் நிறம். மூவேழு வயதிற்குள் பதினேழு முதல் அறுபத்தேழு வரை பலவகை ஆண்களை இன்ச் இடைவெளி இல்லாமல் சந்தித்தாயிற்று. பம்பாயில் ஆறு மாதம். ஒரு தினத்திற்கு ஆறு பேரை விடுதித் தலைவி சந்திக்கச் சொல்ல. திருட்டு ரயிலில் சென்னை வந்து சொந்தமாய் குடிசை போட்டு சுயமாய் தொழில். கூட இருப்பவள் வயசான அம்மா. நாலு மாசத்திற்கு ஒரு தடவை ‘உன் தலைல விதி இப்படி எழுதி இருக்கே என் பொண்ணே’ என்று அழுவதோடு சரி, தினம் பணம் வாங்கி கணக்கு கேட்டு இடுப்பில் செருகிக் கொள்பவள் அம்மாதான்.

துர்க்காவை சேகரன் பார்த்தான்.

உடனே துர்க்காவிற்கு பதவி உயர்வு கிடைத்தது. அதாவது சினிமாவில் எக்ஸ்ட்ரா அந்தஸ்து. சேகரன் ராத்திரி

அன்றிலிருந்து அடுத்த பதவி உயர்வு துர்க்காவிற்கு.

டூப் ஆர்ட்டிஸ்ட்!

மலை மேலிருந்து கீழே குதிக்கிற ரிஸ்க்கான காட்சியா? மதுலதா தள்ளி நாற்காலி போட்டு ஆப்பிள் கடித்துக் கொண்டிருக்க... துர்க்கா குதித்து காலில் காயம், சிராய்ப்பு எல்லாம் பட்டுக் கொள்வாள்.

கதாநாயகன் கேமிராவைப் பார்த்துப் பேச, கதாநாயகி ஓரத்தில் முதுகு காட்டி நிற்க வேண்டிய காட்சியில்... கால் கடுக்க ஸ்டார் மதுலதா நிற்கலாமோ? கூப்பிடு துர்க்காவை.

பாத்ரூமில் தனிமையில் குளிக்கிற காட்சியா? மதுலதா நனைந்து கழுத்து வரை மட்டும் காட்டி விட வேண்டியது. அப்புறம் துர்க்காவை வைத்து எங்கெங்கோ சோப்பு போடச் சொல்லி எடுத்துக் கொள்வார்கள்.

ஒரு தடவை மதுலதாவே துர்க்காவை தன்னுடன் ஒரு சினிமா சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிக்கு அழைத்துச் சென்று, தன்னைப் போலவே மேக்கப் போட்டு விட்டு, மேடையில் பேச வைத்து... பிறகு இவள் மேடையேறி இதுவரை பேசியது நானல்ல என் டூப் ஆர்டிஸ்ட் துர்க்கா என்று சொல்லி ஆயிரக்கணக்கானவர்களை அசர வைத்தாள்.

*(கண்ணாமூச்சி தொடரும்)*

## அதிரடித் தீர்ப்பு

**கா**தலர்களின் உலகத்தில் ஒரு புரட்சியே நடந்துள்ளது. இங்கிலாந்தில் பிராட் டினியன் என்கிற இராணுவ வீரர் தனது காதலியான அன்னா ஹோம்சி என்பவருடன் சுமார் ஏழு வருடங்களாக காதல் வாழ்க்கை நடத்தினார். திருமணம் செய்து கொள்ளவில்லை. இத் தருணத்தில் சியராலி யோன் என்னுமிடத்தில் இங்கிலாந்து பணயக் கைதிகளை, தீவிரவாதிகளிடமிருந்து மீட்பதற்காக அனுப்பப்பட்ட ஆங்கில அதிரடிப் படையில் பிராட்டியனும் சேர்க்கப்பட்டார். அங்கே நடந்த போரில் பணயக்



காதலன் பிராட் டினியன்



காதலி அன்னா ஹோம்ஸி

கைதிகள் அனைவரும் மீட்கப்பட்டனர். ஆனால் பிராட்டினியன் கொல்லப்பட்டார். அவர் இறந்த அதே சமயம், அவரது குழந்தை, காதலி அன்னாவின் வயிற்றில் வளர்நத கொண்டிருந்தது. கர்ப்பவதியான காதலியை அவரது பெற்றோரும், பிராட்டின் பெற்றோரும் துரத்தியடித்து விட்டனர். ஆனால் மனம் தளராத அன்னா, “வெளியுலகத்திற்கு வேண்டுமானால் நாங்கள் காதலர்களாக இருக்கலாம். ஆனால் எங்களைப் பொறுத்தவரை நாங்கள் கணவன் மனைவி யாகவே வாழ்ந்தோம். அதற்கு எனது வயிற்றில் வளரும் சிசுவே சாட்சி, எனவே எனது காதலருக்கு தர வேண்டிய அரசாங்க ஈட்டுத்தொகை முழுவதையும் எனக்கே தரவேண்டும்” என வாதாடினார். இராணுவ அமைச்சகம் ஒப்புக்கொள்ள வில்லை. அன்னா, கோர்டில் வாக்குத் தொடர்ந்தார். முடிவில், “காதலரது ஈட்டுத்தொகையை காதலியிடம் வழங்க வேண்டும்” என்று தீர்ப்பு கூறியது. ஆனால் அரசாங்கம், “பாதித் தொகைதான் தருவோம்” என்றது. கடுப்பாகிப் போன நீதிபதி, “சரி! பாதித்தொயை கொடுங்கள். ஆனால் பிறந்த குழந்தை 18 வயது அடையும் வரை அதன் எல்லா செலவுகளையும் இராணுவமே செய்ய வேண்டும்” என்று மற்றொரு அதிரடி தீர்ப்பை வழங்கி அசத்திவிட்டார். ஈட்டுத் தொகையான இரண்டரை லட்சம் பவுண்டுகளை பெற்றுக்கொண்ட கையோடு காதலி அளித்த பேட்டியில், “நான் பணத்திறகாக போராடவில்லை. ஆனால் எதிர்காலத்தில் நான் ஒழுக்கம் கெட்டவள் என்றும், எனக்கு பிறந்திருக்கும் பெண் குழந்தை தவறான வழியில் பிறந்தவள் என்ற பெயரும் வந்துவிடக் கூடாதென்பதே எனத லட்சியமாக இருந்தது” என கண்ணீர் மல்கக் கூறியுள்ளார்.

## மாற்றம்




**இ**ருபது ஆண்டுகளுக்கு முன்பு அமெரிக்காவை சாத்தான் என்று வர்ணித்து, அன்றைய லிபிய ‘ஷா’ (மன்னர்) ஆட்சியை வீழ்த்திய புரட்சியாளர்களில் ஒருவராகத் திகழ்ந்தவர் ஷாலா சர்கத்! ஆனால் அதன் பின்னர் ஏற்பட்ட ஆட்சி பழைமைவாதத்தை ஆதரித்ததால் அதை எதிர்த்து பெண்ணுரிமைக்காக போராடியவர்களில் ஒருவராக மாறி 1997ல் சீர்திருத்தவாதியான அதிபர் முகமது கடாபி ஆட்சி உருவாகவும் உதவியாக இருந்தார். ‘சனன்’ (பெண்) என்னும் பத்திரிகையும் நடத்தும் இவர் இஸ்லாமிய பெண்களின் உடை பற்றி பேசியதால் விமர்சனத்திற்குள்ளானார். அமெரிக்கா மீதான தீவிரவாதத் தாக்குதலையும் அவர் கண்டித்துள்ளார்.

## மாப்பிள்ளைக் கொரில்லா

**ஹெ**லன் மைக் கிராகன் என்ற விலங்கு மருத்துவர் பற்களைப் பரிசோதிப்பது ராயல் மெல்போர்ன் மிருகக் காட்சிசாலையின் ‘புலாண்டி’ என்ற மாப்பிளைக் கொரில்லாவை ஆகும்.

ஜெர்மனியில் ஹென்னோவர் மிருகக் காட்சிசாலையிலள்ள பெண் கொரில்லாவுக்கு ஜோடி சேர்க்க இந்த ஆண் கொரில்லாவை அனுப்ப இருப்பதால் கண், காத, மூக்கு, வாய், பல் மற்றும் உடம்பு முழுவதும் மெடிக்கல் செக்கப் முடித்து டிபி, பிரஷர், எய்ட்ஸ், ரைபாய்டு போன்ற வியாதிக் கிருமிகளையும் பரிசோதித்து அனுப்புகின்றனர்! ராயல் மெல்போர்ன் மிருகக்காட்சி சாலையில் ஆண் கொரில்லாக்களின் ஆதிக்கம், அடாவடித்தனம் அதிகதித்து விட்டதால் ஒவ்வொன்றாக வெளியே கிளப்புகிறார்கள் என்பது சூசகமான தகவல் ஆகும்! எப்படியோ ஜோடி சேர்ந்தால் கொட்டம் அடங்கிவிடும்!

## ஸ்டெபிக்கு வாழ்த்து



**ச**மீபத்தில் டென்னிஸ் உலகில் பரபரப்பாக பேசப் பட்ட விஷயம், காதலர் அகாசியுடன் ஸ்டெபியின் திருமணம், அடுத்த சில நாட்களிலேயே அவர் குழந்தை பெற்றுக் கொண்டதும் தான்!

ஸ்டெபியின் திருமண செய்தி அறிந்ததும் அவரது சொந்த ஊர் கோலாகலப் பட்டிருக்கிறது. தென் மேற்கு ஜெர்மனியில் உள்ள ஸ்டெபியின் சொந்த ஊரான புருஹி அமர்க்களப் பட்டி ருக்கிறது. அந்த ஊரின் சொந்த வெப்சைட்டில் ஸ்டெபியின் பள்ளிப் பருவத்து புகைப் படத்துடன், அவரது திருமணத்திற்கு வாழ்த்துச் செய்தி வெளியிடப்பட்டது.

சிறு வயதில் ஸ்டெபி இங்கு வாழ்ந்த போது விட்டுச் சென்ற விஷயங்களை திரட்டுமாறு புருஹி நகர மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார் மேயர் ரால்ப் காக். “ஜனவரி மாதம் ஸ்டெபி இங்கு வரும்போது வித்தியாசமான இந்தப் பரிசை அவருக்கு வழங்குவோம்” என்கிறார் ரால்ப். புருஹி டென்னிஸ் கிளப்பில் ஒரு முறைகூட டென்னிஸ் ஆடியிராத ஸ்டெபிக்கு தங்கள் வாழ்நாள் உறுப்பினர் அட்டையை பரிசாக அனுப்பி வாழ்த்து தெரிவித்துள்ளது.

# எஸ்.டி.எஸ். தொடர் 78

இரண்டாவது பாராளுமன்றத் தேர்தல் 1952ம் ஆண்டு நடைபெற்ற போது இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு வயது ஆக மூன்றுதான் ஆகியிருந்தது. இருப்பினும் வடகிழக்கு மாகாணங்களில் கட்சிக்கு ஆக மொத்தம் 45,331 வாக்குகளே கிடைத்தன. ஆனால் 1956ம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் தமிழரசுக்கட்சி சுமார் ஒரு இலட்சத்து 42 ஆயிரம் வாக்குகளைப் பெற்றது. இதன் அடிப்படையில் கட்சியின் சார்பில் பத்து பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றம் செல்ல வாய்ப்புக்கிடைத்தது.

மட்டக்களப்பில் கட்சியின் வேட்பாளராகப் போட்டியிட்ட திரு.செல்லையா இராசதுரை அவர்களுக்கு உயர் மட்டத்தினர் என்று கூறிக் கொள்வோரிடமிருந்து எத்தகைய ஆதரவும் கிடைக்கவில்லை. பாராளுமன்றக் கதிரையை அலங்கரிக்க ஒரு பட்டதாரியோ அல்லது ஓர் அப்புக்காத்தோ, பெருக்கிளாசி (வழக்கறிஞர் )யோதான் லாயக்கானவர் என்ற நம்பிக்கை இருந்து வந்தது. ஆனால் அத்தகைய எண்ணத்தை திரு.இராசதுரை நிர்மூலமாக்கிவிட்டார். "அவருடைய தெள்ளு தமிழ்ப் பேச்சு ஒன்றே அவருக்கு பாராளுமன்றத்துக்கு வழி காட்டும்" என்று தந்தை செல்வா அவர்கள் அன்று கூறியது வீண் போகவில்லை.

திரு.இராசதுரை அவர்களை மட்டக்களப்பு தமிழரசுக் கட்சி வேட்பாளராக கட்சி நியமித்தபோது சில சலப்பு ஏற்படவே செய்தது. குறிப்பாக மட்டக்களப்பிலுள்ள மேல் மட்டத்தினர் அவரை ஏற்றுக் கொள்வார்களா என்பதே பெரிதாகக் தலையெடுத்தது. அத்தகைய சந்தேகங்களுக்கெல்லாம் இடமில்லாதவாறு செய்தவர் தந்தை செல்வா அவர்களே.

'பொதுத் தேர்தல் அடுத்த வருடமே வரப் போகிறது' என்பது 1955ம் ஆண்டிலேயே தெரிய வந்துவிட்டது. இக்காலகட்டத்தில் நாட்டின் ஆட்சி மொழி பற்றிய சர்ச்சைகளும் தலையெடுக்க ஆரம்பித்திருந்தது. இச்சந்தர்ப்பத்தில் தமிழரசுக் கட்சியும் தனது மூன்றாவது தேசிய மாநாட்டை நடத்து வதற்கான ஆயத்தங்களைச் செய்து கொண்டிருந்தது.

திருகோணமலை நகரமே கட்சியின் கேந்திரஸ்தானமாக கருதப்பட்டு வந்தமையினால் அந்நகரிலேயே 1955ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16ம் திகதி மாநாடு ஆரம்பமானது. கட்சி தொடங்கிய 1949ம் ஆண்டிலிருந்து ஆறு ஆண்டுகள் திரு.எஸ்.ஜே.வி. செல்வநாயகம் அவர்களே கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்றிருந்தார். ஆனால் மேற்கொண்டும் தன்னைத் தலைமைப்பதவியில் வைத்திருக்காமல் ஏனைய தலைவர்களுக்கும் அப்பதவியில் அமர்வதற்கான வாய்பினை அளிக்க வேண்டும் என்று தந்தை செல்வா வலியுறுத்தி வந்தார். இதன் பயனாக கோப்பாய் கோமான் திரு.கு.வன்னியசிங்கம் அவர்களுக்கு கட்சியின் தலைமைப்பதவியை வழங்க கட்சி தீர்மானித்தது. 14.05.1955ல் நடைபெற்ற கட்சியின் செற்குழுக் கூட்டத்தில் திரு.கு.வன்னியசிங்கம் (பா.உ) அவர்கள் ஒரே மனதாக கட்சியின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

திரு.வன்னியசிங்கம் அவர்கள் தனது தலைமையுரையின் போது சிங்கள அரசு தமிழ் பேசும் மக்களை இந்தநாட்டில் எந்த உரிமையும் அற்றவர்களாக ஆக்கிவிட வேண்டும் என்பதற்காக படிப்படியாக செயற்படுத்திவரும் திட்டங்களை அம்பலப்படுத்தினார். குறிப்பாக பாராளுமன்றத்தில் தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதித்துவத்தை சரி அரைவாசியாகக் குறைப்பதற்கு இந்திய-பாகிஸ்தானிய குடியுரிமை, வாக்குரிமைச் சட்டங்களை இயற்றிய கொடுமையினைச் சுட்டிக் காட்டினார். இத்தகைய சட்டங்களுக்கு முட்டுக் கொடுத்த சில தமிழ்த் தலைவர்களின் சதி வேலைகளையும் விளக்கிக் கூறி

## இராசதுரையின் வளர்ச்சி



கோப்பாய் கோமான் கு.வன்னியசிங்கம்

னார். அடுத்து வடக்கு கிழக்கில் உள்ள தமிழ்ப் பிரதேசங்களை சிங்களப் பிரதேசங்களாக மாற்றுவதற்கு ஆட்சியாளர்கள் நடத்திவரும் நாடகங்களையும் சுட்டிக்காட்டினார்.

"தமிழ் பேசும் இனத்தின் அரசியல் பலத்தைக் குறைப்பதற்கு ஆட்சியாளர்கள் கையாளும் மற்றத் தந்திரம்-தமிழ் பேசும் மக்கள் வாழும் பிரதேசங்களில் திட்டமிட்ட குடியேற்றங்களைச் செய்வதேயாகும். இம் முறையைத் தொடர்ந்து நடத்துவதால் தமிழ் பேசும் மக்கள் பெரும்பான்மையாக தலைமுறை தலைமுறையாக வாழ்ந்து வந்த பிரதேசங்களில் கூட அவர்களை சிறுபான்மையினராக ஆக்கிவிட முடியும். தமிழர் தாயகத்திலேயே தமிழர்கள் சிறுபான்மையினராகிவிட்டால், பாராளுமன்றத்தில் தமிழ் பேசும் மக்களின் பிதிநிதித்துவம் மேலும் குறைந்து போகும். எந்தப் பிரதேசத்திலாவது தமிழ் மொழி பெரும்பான்மை மொழியாக இருக்காது. தமிழ் பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றத்தை ஆரம்பம் முதலே இருந்து தமிழரசுக் கட்சிதான் கண்டித்து வந்திருக்கிறது.

அரசாங்கத்தை ஆதரிக்கும் சில தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினர்களும் சிங்களக் குடியேற்றத்தை கண்டிக்க ஆரம்பித்திருக்கிறார்கள். இவர்களுள் மூதூர்ப் பாராளுமன்ற பிரதிநிதி ஜனாப் முகம்மது அலி அவர்கள் அதிக சிரத்தை காட்டியுள்ளார்.

மூதூர்த் தொகுதியில் உள்ள அல்லைத்திட்டத்திலும் கந்தளாய்த் திட்டத்திலும் சிங்களக் குடியேற்றம் நடைபெறாது தடுப்பதற்கு அவர் பிரயத்தனம் செய்திருக்கிறார். ஆயினும் சென்ற வருடத்தில் கொடுக்கப்பட்ட காணித் துண்டுகளில் மூன்றில் இரண்டு பங்கு சிங்கள மக்களுக்கும் மூன்றில் ஒரு பங்கு மட்டுமே தமிழ்பேசும் மக்களுக்கும் கொடுக்கப்பட்டது. திருகோணமலை அரசாங்க உப பகுதியில் தமிழ் குடியேற்ற உத்தியோகஸ்தர்களே இல்லை.

இந்த அநீதியான செயலை எந்த இடதுசாரி இயக்கமும் கண்டிக்க முன்வரவில்லை. ஆனால் அரசாங்கத்தை ஆதரிக்கும் இரண்டொரு தமிழ் பேசும் பிரதிநிதிகளும் தமிழரசுக் கட்சியுடன் இணைந்து கண்டனக் குரல் எழுப்பி வருகிறார்கள்." இவ்வாறு தமிழரசுக் கட்சியின் மூன்றாவது மாநில மாநாட்டில் கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட திரு.கு.வன்னியசிங்கம் அவர்கள் தமது தலைமைப் பேருரையில் குறிப்பிட்டார்.

மட்டக்களப்பில் 1956ம் ஆண்டு ஏப்ரல் மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தலில் தமிழரசுக் கட்சியின் பிரதிநிதியாக திரு.செ.இராசதுரை அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதைத் தொடர்ந்து மட்டக்களப்பில் ஒரு புதுயுகம் ஆரம்பமாகியது என்றே சொல்லலாம்.

கனதனவான்கள் என்று கூறிக் கொள்வோரின் எத்தகைய அனுசரணையும் இல்லாமல் சாதாரண பாமர மக்களின் வாக்குகளைப் பெற்றே இராசதுரை அவர்கள் வெற்றிபெற்றார். மட்டக்களப்பில் இன்று மகாஜனக் கல்லூரி என்றழைக்கப்படும் பள்ளிக்கூடம் அன்று அரசடிப்பள்ளி என்றே பெயர் பெற்றிருந்தது. இதே பாடசாலையில் எட்டாம் வகுப்பு வரை திரு. இராசதுரை அவர்கள் தமிழ் படித்தார். அப்போது அவர் மோர்சாப்பிட்டி என்ற பகுதியில் தான் வாழ்ந்து வந்தார். அவருடைய தகப்பனார் திரு.செல்லையா அவர்கள் சாதாரணமான ஒரு வர்த்தகர். தலையில் குடுமி வைத்திருந்த அவர் உடம்பில் சட்டை அணியமாட்டார். வேட்டியும், சால்வையும் அணிந்து கொள்வார். திருநூறு பூசி அகலமான சந்தனப் பொட்டு நெற்றியில் இட்டுக் கொள்வார். புளியந்தீவு, ஆனைப்பந்தி பிள்ளையார் கோயிலின் வடமேற்கு மூலையில் ஆஸ்பத்திரிவீதி, கோணல்வீதி, மற்றும் கோவிந்தன்வீதி ஆகிய மூன்று தெருக்களும் சந்திக்கும் சந்தியில் திரு.செல்லையா அவர்களின் கடை அமைந்திருந்தது.

திரு.இராசதுரை அவர்கள் மாணவனாக பள்ளியில் படிக்கும் போதே

அவருடைய கழுத்தில் தங்கமாலையும் கையில் தங்கச் சங்கிலியும் போட்டுக் கொண்டேயிருப்பார். ஆங்கிலக் கல்வியின் மகத்துவம் தலையெடுத்திருந்த காலமது.

எனவே தமிழில் படித்த மாணவர்கள் பலர் ஆங்கிலக் கல்வி கற்பதற்கு ஆங்கிலக் கலாசாலைகளை நாட ஆரம்பித்திருந்தனர். மட்டுநகர் மத்திய கல்லூரியில், தமிழ் படித்துவிட்டு ஆங்கிலக் கல்வியில் தேர்ச்சி பெறுவதற்காக சேர்ந்த பல மாணவர்களுள் திரு. இராசதுரையும் ஒருவரானார்.



ஜனாப் எம்.எஸ்.ஏ.அஸீஸ்

மட்டக்களப்பில் கூட்டுறவுத் திணைக்களத்தில் பணிபுரிந்துவந்த திரு.எஸ்.டி.சிவநாயகம் அவர்கள் அரசாங்க ஊழியத்தில் இருந்து மெல்ல விடுபடக் கருதியிருந்தமையினால் அவருடைய பால்ய நண்பரான ஓவியர் எம்.ஏ.ரஸாக் அவர்களையும் அணைத்துக் கொண்டு மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்தின் எதிர்ப்புறமிருந்த சர்ணலிஸ் டி.சில்வா கட்டடத்தின் மாடியில் சித்ரா ஸ்டூடியோ என்ற நிழற்படப்பிடிப்பு நிறுவனத்தை ஆரம்பித்தார். (இந்த நிறுவனம் பற்றி இத்தொடரின் ஆரம்பத்தில் பல விவரங்களை நான் தெரிவித்திருந்ததை வாசகர்கள் அறிந்திருப்பீர்கள்)

திரு.சிவநாயகம் அவர்கள் திரு

**இரா. பத்மநாதன்**

கோணமலையை பிறப்பிடமாகக் கொண்டிருந்த போதிலும், அவருடைய வாழ்க்கை மட்டக்களப்புடன் அவரை நெருக்கமாகப் பிணைத்துவிட்டது. இதனால் மட்டக்களப்பு மாநிலத்தின் முன்னேற்றத்திற்காக திரு.சிவநாயகம் அவர்கள் அரும்பெரும் தொண்டாற்றியிருக்கிறார் என்பதை மறுக்கவோ, மறக்கவோ முடியாது. இதற்கு சித்ரா ஸ்டூடியோவே ஓர் ஒப்பற்ற தளமாக அமைந்திருந்தது.

திரு.ரஸாக் அவர்கள் ஓர் ஓவியர் மட்டுமல்ல சிறந்த இசைஞானமுடையவர். தவிர தமிழ் இலக்கிய அறிவும் பெற்றவர். திருகோணமலையில் வசிக்கும் காலத்தில் கோட்டு வாத்தியம் என்று அழைக்கப்படும் வாத்தியக் கருவியை தானாகவே உருவாக்கி அதில் எழும் நாதத்துடன் சுத்தானந்த கீர்த்தனைகளைப்பாடி அருட்திரு விபுலாநந்த அடிகளாரை மகிழ்வித்திருக்கிறார். சித்ரா ஸ்டூடியோவில் அவர் இருந்த காலத்தில் அவருடைய கைத்திறனால் வரையப்பட்ட, அப்போதிருந்த வர்த்தக நிலையங்களின் பெயர்ப்பலகைகள் அவருடைய சிறப்புக்கு சான்று கூறின.

திரு.ரஸாக் அவர்களுடைய ஓவியக் மயங்கி அவருடைய பிர இருந்தவர் கலாபூஷணம் எம்.பி. குமார் அவர்கள் அதே நிறுவனத்தில் திரு.கந்தையா என்பவரும் ஒரு புகைப்படக் கலைஞராக பெயர் பெற்று விளங்கினார்.

திரு.சிவநாயகம் அவர்கள் தாமரைக் கேணியில் உள்ள அவருடைய சிற்றப்பா திரு. செல்லையா உபாத்தியாயர் அவர்களுடைய இல்லத்தில்தான் வசித்து வந்தார்.

மோர்சாப்பிட்டியில் திரு.இராசதுரை அவர்களின் பால்ய நண்பராக விளங்கிய திரு.அஸிஸ் அவர்கள் பிற்காலத்தில் பிரபல ஓவியக்கலைஞராக உருப்பெற்றார் திரு.இராசதுரையும் திரு. அஸிஸ் அவர்களும் இலக்கிய சர்ச்சையில் ஈடுபடுவதுண்டு. அடிக்கடி திரு.சிவநாயகம் அவர்களையும் போய்ப்பார்த்து நெருங்கிப் பழகுவார்கள். சிறு வயதில் இருந்தே ஓவியக் கலையில் நாட்டம் கொண்டிருந்த அஸிஸ் அவர்களுக்கு தரு.ரஸாக் அவர்களுடைய நட்புக் கிட்டியமையினாலும் திரு.சிவநாயகம் அவர்களின் தூண்டுதலினாலும் அக்கலையில் மென்மேலும் தேர்ச்சிபெற ஊக்கம் ஏற்பட்டது. கொழும்பில் உள்ள அரச ஓவியக் கலைக் கல்லூரியில் திரு.அஸிஸ் அவர்கள் இணைந்து பயிற்சி பெற்றார். அவர் அவ்வாறு பயிற்சி பெறும் காலத்திலேயே 'தினகரன்', 'சுதந்திரன்', ஆகிய பத்திரிகைகளுக்கும் அவர் ஓவியங்களை வரைந்து கொடுத்தார்.

திரு.எம்.எஸ்.ஏ.அஸிஸ் அவர்கள் அட்டாளைச்சேனை அரசினர் ஆசிரியர் கல்லூரியில் ஓவியக் கலை விரிவுரையாளராக பல ஆண்டுகள் பணிபுரிந்தார். பின்னர் மட்டக்களப்பில் உள்ள அரசினர் ஆசிரியர் கல்லூரியில் இணைந்து உப அதிபராகவும் பணியாற்றி ஓய்வு பெற்றிருக்கிறார்.

(வளரும்)

---

# வாரம் ஒரு வார்த்தை!

**தென்கச்சி – கோ.சுவாமிநாதன்**

**45. மனிதனின் மகத்துவம்**

யூதேயா மலைப் பகுதி. ஒரு பெரிய கூட்டம். இயேசு நாதர் பேசிக்கிட்டிருக்கார்.

அப்போ பிரம்மாண்டமான துலாக்கோல் ஒண்ணை அந்த ஜனங்களுக்குக் காட்டறார்.

அது மாதிரி ஒரு தராசை அந்த மக்கள் முன்னே பின்னே பார்த்ததே இல்லே. அவ்வளவு பெரிய தராசு.

இந்த உலகத்துலே உள்ள எல்லாத்தையும் அந்தத் தராசிலே வச்ச எடை போடறார் அவர்.

அந்த பெரிய தராசு ஆகாயத்துலேயிருந்து தொங்கவிட்டது மாதிரி இருக்கு.

அந்தத் தராசுலே ஒரு பக்கத்து தட்டுலே அந்த யூதேயா மலைப்பகுதியிலே கண்ணுக்குத் தெரிஞ்ச அத்தனைப் பெருள்களையும் எடுத்து வைக்கிறார். மலைச்சாரல்லே வளர்ந்திருக்கிற ஆலிவ் மரங்களையெல்லாம் எடுத்து அதுலே வைக்கிறார்.

மலையடிவாரத்தில் மேஞ்சிக்கிட்டிருந்த ஆட்டு மந்தைகளையெல்லாம் அதுலே தூக்கி வைக்கிறார்.


அதுவரைக்கும் தோண்டி எடுக்கப்பட்ட தங்கத்தையெல்லாம் அங்கே வைக்கிறார்.

உலகத்துலே உள்ள விலை உயர்ந்த பொருள்களையெல்லாம் வைக்கிறார்.

இவ்வளவும் இடது பக்கத் தட்டுலேயே வைக்கிறார். மக்களெல்லாம் ஆச்சரியமா பார்த்துக்கிட்டிருக்காங்க.

'இன்னொரு தட்டுலே வைக்கறதுக்கு மீதி எதுவுமே இல்லையே!'ன்னு அவங்கள்லாம் ஒருத்தொருக்கொருத்தர் பேசிக்கிறாங்க.

உலகத்துலே உள்ள எல்லாத்தையும் ஒரு பக்க தட்டுலேயே வச்சாச்சு. அவ்வளவையும் ஈடு கட்டுற அளவுக்கு அடுத்தப் பக்கத்துத் தட்டுலே என்னத்தை வைக்க முடியும்?



எல்லாரும் ஆவலோட பார்த்துக்கிட்டிருக்காங்க!

இயேசு நாதர் சுற்றும் முற்றும் பார்க்கிறார்.

அங்கே பக்கத்துலே இருந்த ஒரு சின்ன குழந்தையை எடுத்து வலது பக்கத்துத் தட்டுலே வைக்கிறார். அவ்வளவுதான்.

இடது பக்கத்தட்டு ஆட ஆரம்பிச்சிது-மெதுவா மேலே போக ஆரம்பிச்சுட்டுது. ரொம்ப ரொம்ப உயரத்துக்குப் போயிட்டுது. அதுலே இருந்த பொருள்லாம் கீழே விழுந்துடுமோன்னு நினைக்கிற அளவுக்கு ஆயிட்டுது.

எல்லாரும் ஒண்ணும் புரியாமே இயேசு பெருமான் முகத்தைப் பார்க்கிறாங்க. அவர் சொல்றார்:

"ஒருவன் தன் ஆன்மாவுக்கு கேடு விளைவித்து உலகமெல்லாம் தனதாக்கிக் கொள்வதனால் அவனுக்கு வரும் பயனென்ன? ஒருவன் தன் ஆன்மாவுக்கு ஈடாக எதைக் 'கொடுக்க முடியும்?" (மாற்கு 8:36–37) அப்படிங்கறார்.

இந்த சம்பவத்துலேயிருந்து நாம புரிஞ்சிக்க வேண்டியது என்ன?

இந்த உலகத்துலே இருக்கிற எல்லாத்தையும்விட அதிக விலையுடையது எதுன்னு கேட்டா அது மனிதனின் ஆன்மாதான் அப்படிங்கறதை இந்த சம்பவம் மூலமா அவர் ஜனங்களுக்கு எடுத்துக் காட்டறார்.

இன்னைக்கு நாம படற கவலைகளுக்கெல்லாம் என்ன காரணம்ன்னு நினைக்கிறீங்க?

மனிதனின் மதிப்பை மனிதன் இன்னமும் முழுசா புரிஞ்சிக்கலே, அதுதான் காரணம்.

இப்பல்லாம் உலகத்துலே அங்கே இங்கே நடக்கற சம்பவங்களைப் பார்த்தா..

மனுஷ உயிர் ரொம்ப மலிவா போயிட்டு தேங்கற நினைப்புதான் வருது!

சமீபத்துலே பத்திரிகையிலே ஒரு நகைச்சுவை துணுக்கு பார்த்தேன்.

ஒரு ராஜா காட்டுக்கு வேட்டைக்குப் போயிட்டு திரும்பி வந்துக்கிட்டிருக்கார்.

அப்போ கூட வந்துக் கிட்டிருக்கிறவங்க கிட்டே விசாரிக்கிறார்:

"அமைச்சர் இருக்காரா?"ங்கறார் ராஜா.

"இதோ இருக்கேன்!"ங்கறார் அமைச்சர்.

"சேவகர் இருக்காரா?"ங்கறார்.

"இதோ இருக்கேன்!"ங்கறார் அவர்.

"தளபதி இருக்காரா?"ங்கறார்.

"இருக்கேன்!"ங்கறார் தளபதி.

"அப்பாடா! அப்படின்னா நான் சுட்டது கரடியைத் தான்!" அப்படிங்கறார் ராஜா.

மனுஷன் உயிர் மேலே மன்னருக்கு எவ்வளவு அக்கறை பார்த்தீங்களா?

(வார்த்தைகள் தொடரும்)

# ஸ்போர்ட்ஸ்

## கிரஹெம் தோப்பின் மணமுறிவு



இந்தியாவில் சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டு, கடந்தவாரம் அவசர மாக லண்டன் திரும்பிய இங்கிலாந்து அணி கிரிக்கெட் வீரர் கிரகாம் தோர்ப், தன் திருமணம் முறிந்துவிட்டதாக துய ரத்துடன் தெரிவித்தார்.

அஹமதாபாத்தில் இரண்டாவது டெஸ்ட் தொடங்குவதற்கு முன்பாக அவசர மாக இலண்டன் புறப்பட்டுச் சென்றார். தோர்ப்பும் அவரது மனைவி மிக்கியும் கடந்த 2 மாதங்களுக்கு முன்பே பிரிந்து விடுவதாக முடிவுசெய்துள்ளனர். புகழ் பெற்ற டென்னிஸ் நட்சத்திரம் டிம் ஹென்மானின் தென்னாபிரிக்கப் பயிற்சி யாளர் கீரோன் வோர்ஸ்டருடன் தோப்பின் மனைவி மிக்கி தொடர்பு வைத்திருக் கிறார். இதனால் தம்பதியினரிடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டதென்று கூறப்படுகிறது.

என்றாலும் இலண்டனில் நிருபர் களிடம் பேசிய தோர்ப் எல்லாவற்றையும் மறுத்தார்.

எங்கள் திருமணம் முறிந்துவிட்டது. நத்தாருக்கும் பிறகு பிரிந்துவிட முடிவு செய்துவிட்டோம். இந்த முடிவை நாங்கள் எடுத்து இரண்டு மாதம் ஆகிறது. இதில் வேறு யாரும் இடையில் குறுக்கீடு செய்ய வில்லை. என்னைப் பொறுத்தவரை என் மனைவி வோர்ஸ்டருடன் தொடர்புவைத் திருக்க வில்லை கிரிக்கெட் மற்றும் ஓய்வ அற்ற பணிதான் பிரிவுக்குக் காரணம்.

இவ்வாறு தோர்ப் கூறினார். இந்தத் தம்பதிக்கு ஹென்டி (4) அமீலியா (2) என்ற இரண்டு பிள்ளைகள் உள்ளனர்.

## 'கண்டி மோதலில்' லாராவின் மூட்டு விலகியது



இலங்கை அணியுடனான ஒருநாள் போட்டியின் போது மேற்கிந்திய வீரர் பிரைன் லாராவின் கை மூட்டு விழ கியது.

சனிக்கிழமை அன்று கண்டியில் நடைபெற்ற இப் போட்டியில் ஓட்டம் ஒன்றைப் பெறுவதற்காக ஓடிய லாரா அவரை ஆட்டம் இழக்கச் செய்வதற்காக விக்கெட்டை நோக்கி ஓடிய மாவன் அத் தப்பத்துவுடன் எதிர்பாராத விதமாக மோதியதில் காயமடைந்தார். இதனால் லாராவுக்கு முழங்கை மூட்டு கலன்றது. அவர் உடனடியாக கண்டி பொது வைத் தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். பின்னர் ஹெலிக்கப்டர் மூலம் கொழும்புக்கு அனுப்பப்பட்டார்.

குறைந்தது 6 மாதகாலத்துக்கேனும் அவரால் போட்டியில் பங்குபற்ற முடியாது எனத் தெரிவிக்கப்படுகிறது. இதனால் எல் ஜி அபான்ஸ் சுற்றுப்போட்டியில் இருந்து அவர் விலக நேரிட்டுள்ளது. அத் துடன் பெப்ரவரியில் இடம்பெறவுள்ள மேற்கிந்திய அணியின் பாகிஸ்தான் சுற் றுலா அதன் பின் நடைபெறவுள்ள இந்திய சுற்றுலா ஆகியவற்றிலும் லாரா பங்கு பற்ற முடியாதுள்ளது.

1999 ஆகஸ்ட் மாதம் இதே மைதானத் தில் நடைபெற்ற டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலிய வீரர்களான ஸ்டீவ் வோவ், ஜேசன் கிலெஸ்பி இருவரும் மோதிக் கொண்டனர். இதனால் ஸ்டீவ் வேவ்வுக்கு மூக்கில் காயம் ஏற்பட்டதோடு ஜிலேஸ்பிக்கு காலில் கடும் காயம் ஏற்பட்டமை குறிப் பிடத்தக்கது.

"இந்த ஆண்களே சுத்த மோசம்" என்றாள் மலர்விழி.

"சரிதான்!" என்றாள் அவளருகிலேயே நடந்துவந்து கொண்டிருந்த நாளாயினி.

"என்ன சரிதா? உன்னை யார் மோசம் செய்தார்கள்?" என்று ஆச்சரியத்தோடு திரும்பிக் கேட்டாள் மலர்விழி. நாளாயினி சிரித்தாள்.

"எந்தக் காலத்திலடி, தோழிக்கென்று ஒரு தனிக்கதை இருந்தது? நான் சரிதான் என்று சொன்னது, நீ மோசம் போயிருக்கிறாய் என்று நான் நினைத்தது சரியாகிவிட்டது என்று தெரிந்ததால்தான்!"

"நான் மோசம் போயிருக்கேன் என்று நீ நினைத்தாய்? உனக்கெப்படித் தெரிந்தது!"

"தலைவன் தலைவி காதலும் ஊடலும் பற்றி தோழிக்குத் தெரியாத ஒன்றுண்டா? அவன் என்ன ஏமாற்றினான் என்பதைச் சொல்" என்று மீண்டும் சிரித்தாள் நளாயினி.

மலர்விழி சிறிது மௌனம் சாதித்தாள். பிறகு, "வா, இப்படி அமர்ந்துகொள்ளலாம்" என்று நளாயினியின் கையைப் பற்றி இழுத்துச் சென்று புதர்கள் அடர்த்தியாக முளைத்திருந்த தலைப்பகுதியைத் தேடி அமர்ந்து கொண்டார்கள்.

முழங்கால்களை மடித்து அதன் குறுக்காக கைகளைக் கட்டிக் கொண்டு, மோவாயை மூங்கால் மீது பதித்து அமர்ந்திருந்த மலர்விழி தோழியைப் பார்த்துச் சொன்னாள்: "அவன் ஒன்றும் என்னை மோசம் செய்யவில்லை. பெண்ணைக் கண்டால் சூடு சுரணையற்ற அரட்டப் பிறவிகளாக அவர்கள் மாறிப்போகும் விந்தையைச் சொன்னேன்."

"என்ன விந்தையைப் புரிந்தான் உன் கள்வன்.... சொல்லேன்!" நளாயினி தோழியையே பார்த்தபடி பேசினாள். ஆனால் மலர்விழியோ பார்வையை எங்கோ நிலைக்கவிட்டு, அவள் கேள்விகளைக் காதில் வாங்கிக் கொள்ளாதவளாகத் தெரிந்தாள்.

"என்னடி கனவு?" என்று அவளை உலுக்கினாள் நளாயினி.

"ஆ... என்ன கேட்டாய்?" என்று திடுக்குற்று விழித்தவள்போல தோழியைப் பார்த்துக் கண்களை வெட்டினாள்.

"இந்த அழகுக் கண்களின் சிற கடிப்பில் மயங்கி அவன் ஏதும் அனாவசியமாய் உளறிக்கொட்டினானா?" என்று சிரித்தாள் நளாயினி.

"போடி, நான் ஒன்றும் சொல்லமாட்டேன் போ..." மலர்விழி சிணுங்கினாள்.

"இல்லையில்லை... என் செல்லம் நீ, சொல்லு... நான் கேலி செய்யவில்லை..."

மீண்டும் பார்வையைத் தொலைவில் வெறிக்கவிட்டபடி மலர்விழி பேசினாள்:

# அவன் ஏன் போனான்?

இலக்கிய நயம்

"நேற்று நான் தோட்டத்திற்குக் கன்றைப் பிடித்துச் சென்று கொண்டிருந்தபோது அவன் திடீரென்று குறுக்கே வந்தான்..."

இடையே எதுவும் பேசினால், அவள் வெட்கப்பட்டு எழுந்த ஓடிவிடக்கூடும் என்பதால் எதுவும் பேசாமல் "உம்... உம்..." என்று கேட்டுக்கொண்டிருந்தாள் நளாயினி.

"நான் பிடித்திருந்த கன்றின் கயிற்றை அவனும் வந்து பிடித்தான். 'உனக்கென்ன பைத்தியமா? வழியை விடு நான் போவதற்கு...' என்று

"பிடித்துத் தள்ளிவிட்டுப் போனாயாக்கும்..."

"ஹ்ஹூம்... எருமையே என்று பேசினேன்."

"அட! நீயா? அவனை எருமை என்று பேசினாயா?"

"பின்னே? நான் எவ்வளவு சொல்லியும் அசையாமல் நிற்கிறாயே! பெரு மழைக்கும் அசையாமல் நிற்கும் எருமையைப் போலவா நீயும்?" என்று கேட்டேன்...."

"அவனுக்கு கோபம் வந்ததா... என்ன செய்தான்?"



சினந்தேன் நான். 'போகமாட்டேன், அப்படி நீ போக வேண்டுமானால் என்னைப் பிடித்துத் தள்ளிவிட்டுச் செல்' என்று குறுக்கே வழிமறித்து நின்றான் அந்தக் கள்வன்...."

"அடடா, அப்படியா? பிறகு நீ என்ன செய்தாய்?" என்றாள் போலியான வியப்புடன் நளாயினி.

"போடி, நீ கேலி செய்கிறாய்... நான் சொல்ல மாட்டேன்."

"அடடே... என் கண்ணை நான் கேலி பண்ணுவனா..." என்று அவளருகே வந்து மோவாயைக் கைகளால் தூக்கி நிமிர்த்திச் செல்லம் கொஞ்சினாள் நளாயினி. "பிறகு என்னதான் செய்தாய் நீ?" என்று ஆதரவோடு கேட்கவும் செய்தாள்.

"நீ வழியை விட்டுவிடுவது நல்லது. இல்லாவிட்டால் இப்போது அம்மா இந்த வழியே வருவாள். தன் கன்றைப் பிடித்துக்கொண்டு நிற்கும் வேற்றானைப் பார்த்தால் அவள் பத்திரகாளியாகி விடுவாள். எனவே போய்விடு என்று சொல்லிப் பார்த்தேன். அவனோ மசிவதாயில்லை. "இந்த நாட்டின் மன்னனே வந்தாலும் போகமாட்டேன். நீ மட்டும் என்மேல் அன்பிருக்கிறன் தென்று சொல்லிவிடு நான் போகிறே ன் என்று பிச்சைக்காரன் இரஞ்சுவதைப்போல பரிதாபமாக நிற்கிறானடி அவன்... நான் என்ன செய்ய முடியும் சொல்!"

"சீ... அவனுக்காவது கோபம் வருவதாவது... எருமையைப் போல அசையாமல் நின்று, நான் என்ன சொன்னாலும் பதிலுக்கு இளித்தபடி அன்பைச் சொல்ல அன்பைச் சொல்லு என்று இறைஞ்சி நிற்கிறாயே... நாளைக்கு நான் பசுவின் பாலைக் கறப்பதற்காகக் கலம் கொண்டு புறத்துக்குச் செல்வேன். அங்கேயும் வந்து இப்படித் தொந்தரவு செய்வாயா? என்று சினந்து கேட்டேன் உடனே போய்விட்டான்..."

"அடி கள்ளி! என்ன மாதிரி ஒரு ஜாலக்காரி நீ?"

"ஏன்? ஏன்? நான் நைச்சியமாகப் பேசி அவனை வழியை விடச் செய்தது உனக்கு ஜாலமாய்த் தெரிகிறதா?"

"ஆ... ஆஹா பச்சைக் குழந்தை. பேசுகிற மாதிரிப் பேசி நாளைக்கும் அவன் வரவேண்டிய இடத்தைக் குறிப்பால் சொல்லிவிட்டாயே... நீ மாபெரும் கள்ளியடி!"

**நின்னையான் சொல்லினவும் பேணாய் நினை இக்**
**கனை பெயல் ஏற்றின் தலைசாய்த்து எனையதூஉம்**
**மாறு எதிரி கூறி மயக்குப் படுகுவாய்**
**கலத்தொடு யாஞ் செல்வழி நாடிப் புலத்தும்**
**வருவையால் நாணிலி நீ.**

(கலித்தொகை 16:13-17)

தருவது முழுடியன்

* சமாதானத்தைக் கொண்டுவருவது தொடர்பாக புதிய அரசாங்கத்தினது பேச்சும் மாறி வருகிறதே?

க.கமால்தீன், ஏறாவூர்-03.

அச்சப்பட வேண்டியதில்லை. அர சாங்கத்தைக் கொண்டுவந்ததே நம் தமிழ், முஸ்லிம் கட்சியினர்தானே. அவர்கள் விடமாட்டார்கள், பார்த்துக் கொள்வார்கள்.

* இந்த அரசாங்கமும் மீண்டும் விடுதலைப் புலிகளோடு உக்கிரமான போரை ஆரம் பித்துவிட்டால், அப்போது தமிழ்க் கூட்ட மைப்பு எம்.பி.க்களின் நிலைப்பாடு என்ன வாக இருக்கும்?

வி.இரவீந்திரன், வவுனியா.

இருந்தாலும் இத்தனை அவசரம் கூடாது உங்களுக்கு. புலிகளுக்குத் தடு மாற்றம் வரலாம். ஆனால் பாராளு மன்றத் தமிழ்க் கட்சிகளுக்குத் தங்கள் கொள்கையில் எப்போதும் தடுமாற்ற மில்லை. சண்டையை எதிர்த்து ஆக்ரோச மான அறிக்கைகள் விட்டுக் கொண்டே இந்த வருடத்தை ஓட்டிவிடுவார்கள். அடுத்த தேர்தலில் இந்த அரசாங்கத்தை மாற்றி, அடுத்த கட்சி அரசாங்கத்தின் மூலம் சமாதானத்தைக் கொண்டுவர நீங்கள் அவர்களுக்கு வாக்களிப்பீர்கள். புலிகளுடன் பேசி சமாதானத்தைக் கொண்டுவர முடியாத அந்த அரசாங் கத்திற்கும் எதிராக அறிக்கைகள்... (சங்கரியும் சிறீகாந்தும் குறுக்கிடுகிறார்கள்... "ஆக்ரோசமான கண்டன அறிக்கைகள்") விட்டுக் கொண்டே அடுத்த ஐந்து வருட காலம்... செத்துச் சீரழிந்து கொண்டிருக் கும் நாங்களே ரோசத்துக்காக வாக்கு களைக் கொட்டத் தயாராயிருக்கும்போது... பஜீரோ, பங்களா, உற்றசுற்றத்துக்கு வேலை வாய்ப்பு எட்செட்ரா ஆச்சு! வெல்க தமிழினம்!

* தொலைக்காட்சி சிறுவர் நிகழ்ச்சி ஒன் றில் நாய் வள் வள் என கத்தும் என்று கூறுகிறார்களே! நாய் கத்துமா? குரைக் குமா?

எஸ்.பிரதாப், கொழும்பு-14.

கதைப்பதாகக் கூறிக்கொள்ளும் நாங் களே அவ்வப்போது குரைக்கவும் கத்த வும் செய்யும்போது, நாய்கள் கத்தக்கூடாதா? விடுங்கள். நாய் உங்களைக் காண்டால் வள் வள் என்று குரைக்கும். நீங்கள் கல்லாலடித்தால் வீல் வீல் என்று கத்திக் கொண்டே ஓடும். சரிதானே அப்படியே அனுஷாவின் கேள்விக்கு வாருங்கள்.

* சிந்தியா கத்துவதை ஏன் 'வீல் வீல்' என்று கத்தினான் என்கிறார்கள்?

வி.அனுஷா, கண்டி.

கத்திக் கொண்டே ஓட நேர்ந்தபோது யாராவத 'வீல்' இருந்தால் ஓட இன்னும் வசதியாக இருக்குமோ என்று யோசித்திருக் கக் கூடுமோ!

* அறிவு கெட்டவன் என்று உங்களிடம் யாராவது திட்டி இருக்கிறார்களா?


ஜெ.லக்கி, பெரியகல்லாறு.

இல்லையே... 'அறிவு' ரொம்ப நல்லவ னாச்சே!

* சிந்தியா, தொலைக்காட்சி நாடகங்கள் பார்ப்பதுண்டா?

பி.ஆர். அசோக்குமார், டிக்கோயா.

பொரும்பாலம் பெண்பார்வை யாளர்களைக் குறித்தே எடுக்கப்படும் இந்த நாடகங்கள் பெண்களுக்கு செய்யும் மோச மான இழிவுபடுத்தல் சகித்துக் கொள்ள முடியாததாக இருக்கிறது. அவர்கள் காட்டுகிற பெண்கள் சித்திரவதை செய்யும் கணவனைத் தெய்வம் என்று கொண்டாடு



கிறார்கள்; குடும்பத்திற்காகத் தங்களை வருத்தி, சகல உழைப்பையும் பொறுமை யோடு சுமந்து, அக்குடும்பத்தின் விசுவாச அடிமையாக, தம்மை மற்றைய மனிதர் களுக்குக் கீழானவளாக உறுதிப்படுத்தும் போது, "மாதர்குல மாணிக்கங்க"ளாகி றார்கள். இதைத் தொலைக்காட்சியில் நாளாந்தம் பார்த்துக் கொண்டிருக்கும் நம் பெண்கள் ஏனைய குடும்ப அங்கத் தினர்களின் (மாமியார் உட்பட்ட) பார்வை யில் குற்றவாளிகளாக்கப்படுகிறார்கள். இதை எப்படி நம்மவர்கள் சகித்துக் கொண்டே பார்த்துக்கொண்டு இருக்கி றார்கள் என்ற கேள்வி இந்த நாடகங்களைப் பார்க்கிறபோதெல்லாம் எழுகிறது. கடந்த ஞாயிறு தினக்குரல் பத்திரிகை வார இதழில் அபிராமி என்பவர் எழுதியிருந்தது கொஞ்சம் ஆறுதலாக இருந்தது.

* 'ஆளவந்தான்' எப்படி?

இ.ஆனந்தராஜா, மண்டூர்.

ஹொலிவூட் படங்களின் தரத்திற்குத் தமிழ்படங்கள் இல்லையே என்ற ஏக்கம் இருந்தது உண்மைதான். ஆனால், ஹொலிவூட் படங்களையே இங்கே தமிழிலும் எடுக்கச் சொல்லி யார் கேட்டார்கள்?

* உங்கள் சிம்ரன் ரசிகர் மன்றம் என்னாச்சு?

எஸ்.தேவா, பொகவந்தலாவ.

உள்ளமும் கெட்டு உடலும் கெட்டு இப்போதைய படங்களில் (12B, பார்த்தாலே பரவசம்) ஏனோதானோவென்று வரும் முன்னால் 'சிக்' இடையாளியைப் பார்த்த பிறகு, பேசாமல் நானும் 'மலமலமலே'க்கு மாறி விடலாமா என்று பார்க்கிறேன். குறிப்பாக, மலேசியா நிகழ்ச்சி மேடையில் விவேக்கின் கேள்விக்குப் பதிலளிக்கும்போது, என்ன ஒரு நெளிவு! என்ன ஒரு ஞானம்! (பத்து வருடங்களுக்குப் பிறகு நான் பழைய நினைவுகளோடு உங்களை நினைத்து ஏங் கிக் கொண்டிருப்பேன். நீங்களோ என்னை யாரென்றே கண்டுகொள்ளாமல் புதிய கவர்ச்சி நடிகை ஒருவருக்கு கோயில் கட்டிக்கொண்டிருப்பீர்கள்!)

* பாராளுமன்றக் கதிரைக்கும், ஜனாதிபதிக் கதிரைக்கும் ஏன் இவ்வளவு சண்டை? சாதாரண மனிதராக இருப்பதில் உள்ள சுகம் தெரியாதவர்கள்தானே அமைதியின்மை யும் குழப்பமுமாகப் போய் நிறைந்த அந்தப் பதவிகளுக்கு அலை மோதுகிறார்கள்?

எஸ். சிறீதரன், யாழ்ப்பாணம்.

பதவிகளையும், பணம், பவிசு, அதி காரத்தையும், அரச வாழ்க்கையையும் எட்டி உதைப்பதாக இகழந்து குடிசைக் காரர்கள் தங்கள் குடிசை வாழ்வே ஆனந்தம் என்று சொல்வதைப் போல,

## சிந்தியா பதில்கள்

'என் அரச வாழ்வே ஆனந்தம், உங்கள் குடிசை வாழ்வில் இன்பமில்லை அதை எட்டி உதைக்கிறேன்' என்று எந்த அரச வாழ்க்கைகாரரும் சொல்லியதில்லை. இது நாமறியாமலே நமக்குள்ளிருக்கும் 'சீ சீ இந்தப் பழம் புளிக்கும்' கதைதான்! கீழே உள்ளவர்களுக்கு மேற் சென்றுவிட்டவர் களின் மீது ஏற்படும் பொறாமையைத்தான் அந்த வாழ்க்கையை இழிவு படுத்தித் திட்டுவதன் மூலம் ஆற்றிக் கொள்கிறார் கள் என்று தோன்றுகிறது. மேலே உள்ள வர்கள் கீழுள்ள சாதாரண வாழ்க்கையைப் புகழ்ந்து, பேசுவார்களே தவிர திட்டுவ தில்லை. கிழுள்ளவர்களும் தங்கள் வாழ் வையே புகழ்ந்துகொண்டு மேலுள்ள வாழ்க் கையை இகழ்ந்துபேசி தற்திருப்தியடை கிறார்கள். யோசித்துப் பார்த்தால் நம் எல்லோர் அடியாழத்திலும் பதித்து வைக்கப்பட்டுள்ள இந்த ஏமாற்றுப் புரியும்.

* யுத்தத்தை ஏன் விட முடியாமலிருக்கிறது?

ம.விஜயராணி, கொழும்பு-05.

உரிமைகளை விடமுடியாமலிருப்ப வர்கள் யுத்தத்தை உருவாக்கிக் கொள்கி றார்கள். பிறகு யுத்தத்தை விட முடியாம லிருப்பவர்கள் எதிரியை உருவாக்கிக் கொள்கிறார்கள்.

* பக்தி என்பத எப்படி இருக்க வேண்டும்?

க. மலர் ராஜன், திருகோணமலை.

கடவுளிடம் தானே! "வாளால் அறுத் துச் சுடினும் மருத்துவன் பால் மாளாத காதல் நோயாளனாக...." என்பது குலசேகர ஆழ் வாரின் தியரி.

# மன்னாதி மன்னன்

86

இராஜகுமாரன்

போஜ மகாராஜாவினுடைய அரண்மையின் சிறப்பு மண்டபத்தில் வைக்கப்பட்டிருந்த-விக்கிரமாதித்த மாமன்னன் இரண்டாயிரம் ஆண்டு காலம் வீற்றிருந்து ஆட்சி புரிந்த சிம்மாசனம் இருக்குமிடத்திற்கு ஒன்பதாவது நாளன்று அதிகாலையில் போஜமாமன்னன் வந்து சேர்ந்தார். அவருடன் வந்த மந்திரிப் பிரதானிகள் சூழ்ந்து நிற்க பூசகர்கள் சிம்மாசனத்திற்கு முறைப்படி பூசை செய்தனர்.

பூசைகள் யாவும் முறைப்படி முடிந்த பின்னர் சூழ்ந்து நின்ற அனைவரும் தங்கள் இரு கைகளிலும் ஏந்தி வந்திருந்த பல வகையான மலர்களையும் சிம்மாசனத்தின் மீது தூவி வணக்கம் செலுத்தினர். இதன் பின் மந்திரிப் பிரதானிகள் அனைவரும் அந்த இடத்தைவிட்டு அகன்றனர்.

போஜ மாமன்னர் ஒவ்வொரு படியாக ஏறி ஒன்பதாவது படியை அடைந்ததும் அந்தப் படியில் அதுவரை அசையாமல் இருந்த நவரத்தினவல்லிப் பதுமை அசைந்து சுய உருவம் பெற்று ஓரழகிய பெண்ணாக படியில் நின்று, தனது வலது கையை நீட்டி போஜமகாராஜனை மேலே செல்ல விடாமல் தடுத்தது.

"போஜ மாமன்னரே, இந்த அரியணை எங்கள் விக்கிரமாதித்த மாமன்னரின் அரிய பெரிய செயற்பாடுகளால் பெருமை பெற்றது. மிகச் சிறப்பு வாய்ந்த விக்கிரமாதித்த மாமன்னரின் வீர தீர பராக்கிரமச் செயல்களில் ஒரு துளியாவது உம்மிடம் இருக்குமானால் நீர் மேலே சென்று அரியணையில் அமரலாம். கீழே உள்ள எட்டுப் படிகளிலும் காவலுக்கிருந்த பதுமைகள் எங்கள் மாமன்னரைப் பற்றிக் கூறிய கதைகள் எல்லாவற்றையும் கேட்டறிந்திருக்கிறீர்கள். என்னுடைய பங்கிற்கு விக்கிரமாதித்த மாமன்னரின் வீர தீர பராக்கிரமச் செயல்களைப் பற்றி நான் கூறப்போகும் கதைகளையும் கேட்டுவிட்டு நீர் மேலே செல்லலாம்." என்று கூறிய பதுமை கதை கூற ஆரம்பித்தது.

விக்கிரமாதித்த மாமன்னன் உஜ்ஜயினி மாகாளிப் பட்டணத்தில் ஆறுமாதங்கள் மிகச் சிறப்பாக ஆட்சிபுரிந்து விட்டு காடாறு மாதங்கள் செல்ல வேண்டிய காலக்கெடு வந்துவிட்டமையினால் அவருடைய தம்பியும், அமைச்சருமான பட்டியையும் அழைத்துக் கொண்டு நகர எல்லையில் இருந்த காளிகாம்பாள் ஆலயத்திற்குச் சென்று அம்பாளை வணங்கி விட்டு அருகே இருந்த காட்டினூடாக நடந்து சென்றனர்.

காடு முடியும் இடத்தில் துங்கபாத்ரா நதி கசகசத்து ஓடிக்கொண்டிருந்தது. நதியைக் கடப்பதற்கு ஓடம் செலுத்தும் ஓடக்காரனை அழைத்துக் கொண்டு நதியைக் கடந்து அம்பாள்புரி என்ற நகரத்தை அடைந்தனர்.

களைப்பாறுவதற்காக இருவரும் நதிக் கரையில் உள்ள ஒரு பெரிய ஆலமரத்தின் நிழலில் அமர்ந்து ஓய்வு எடுத்துக் கொண்டிருந்தனர். ஆனால் அவர்களால் கண்ணயர்ந்து தூங்க முடியவில்லை. பிணவாடை ஒன்று அவர்களுடைய மூக்கைத் துளைத்தது. பட்டி எழுந்து அந்த வாடை வரும் திசையை நோக்கி சென்று பார்த்தார். அங்கே ஒரு பெண்ணின் சடலம் அழுகிய நிலையில் கிடந்தது. இதனைக் கண்டதும் பட்டி விக்கிரமாதித்த மாமன்னரிடம் வந்து அங்கிருந்து வேறு இடம் செல்வதற்கு விக்கிரமாதித்தனை அழைத்தார்.

இதேவேளை அழகிய இரு பெண்கள் குடத்துடன் தண்ணீர் எடுத்துச் செல்வதற்காக நதிக்கரையை நோக்கி வந்து கொண்டிருப்பதைப் பார்த்தனர். அவர்கள் இருவரும் பெண்ணின் சடலத்தை பார்த்துக் கொண்டு சற்று நேரம் நின்றனர். அப்பெண்களுடைய உருவத்தைப் பார்த்ததும் இருவரும் அக்கா தங்கைகளாக இருக்க வேண்டும் என்று ஊகித்துக் கொண்டனர்.

பெண்ணின் உயிரற்ற சடலத்தைக் கண்ட அப்பெண்களில் ஒருத்தி விம்மி விம்மி அழ ஆரம்பித்தாள். இதனைக் கண்டு "அக்கா நீ ஏன் அழுகிறாய்?" என்று அடுத்தவள் கேட்டாள். அதற்கு பதிலளித்த மூத்தவள், "இவளும் நம்மைப் போல் ஒரு பெண்தானே இவள் எவ்வாறு வாழ்ந்தவள். நடத்தை கெட்டவள்தான். இதனால் ஊரவர்களில் சிலர் இவளை அடித்துக் கொன்று சட லத்தை இங்கே வீசியுள்ளனர்" என்று கூறி மேலும் கண்ணீர்விட்டாள்.

முத்தவள் கூறிய பதிலைக் கேட்டு இளையவள் சிரித்தாள். "அக்கா அவள் செய்யத் தெரியாமல் செய்து அகப்பட்டுக் கொண்டிருக்கிறாள். அதனால்தான் அவளை அடித்துக் கொன்றிருக்கின்றனர். இதற்காக நீ ஏன் வருந்த வேண்டும்? வா நாம் போகலாம்" என்று கூறி தனது அக்காளின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு ஆற்றங்கரைக்குச் சென்றாள்.

## பவளக் கொடி மீது படர்ந்த ஆசை

அந்த பெண்கள் இருவருக்குமிடையில் நடைபெற்ற உரையாடலை விக்கிரமாதித்தனும் பட்டியும் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தனர். அப்பெண்களில் இளையவள் வயதில் மிகக் குறைந்தவளாகக் காணப்பட்டாள். இருப்பினும் ஏதோ எல்லாம் தெரிந்தவள் போல் இவ்வாறு பேசுகிறாளே என்று விக்கிரமாதித்த மன்னன் ஆச்சரியப்பட்டார். இச்சிறு வயதில் இத்தனை அனுபவம் இப்பெண்ணுக்கு எவ்வாறு வந்திருக்க முடியும், என்பதை அறிந்து கொள்வதற்காக, அப்பெண்ணை தானே மணம் முடிக்க வேண்டுமென்று அமைச்சர் பட்டியிடன் தனது கருத்தை வெளியிட்டார். பட்டியும் அதற்கு சம்மதித்தார்.

இருவரும் அந்த நகரத்தை நோக்கி தண்ணீர் குடங்களுடன் சென்று கொண்டிருந்த இரு பெண்களின் பின்னால் சென்று கொண்டிருந்தனர். வழியில் இரு வழிப் போக்கர்கள் வந்து கொண்டிருந்தனர்.



அவர்களிடம் அந்தப் பெண்கள் இருவரும் யார் என்பதை விசாரித்து அறிந்தனர்.

அந்த நகரத்தில் மிகப் பெரிய இரத்தின வியாபாரியான முத்துமாணிக்கம் செட்டியாரின் பிள்ளைகள் அவர்கள் என்றும் மூத்த பெண்ணின் பெயர் முத்துநாயகி என்றும் இளைய பெண்ணின் பெயர் பவளக் கொடி என்றும் அவர்கள் சொன்னார்கள்.

விக்கிரமாதித்த மன்னரும், அமைச்சர் பட்டியும் இரத்தின வியாபாரிகளைப் போல் வேடம் அணிந்து கொண்டனர். வேதாளத்தின் உதவியுடன் நவரத்தினங்களை வரவழைத்துக் கொண்டு அம்பாள்புரியின் வர்த்தகர்கள் வசிக்கும் வீதியைச் சென்றடைந்தனர். அங்கொரு வசதியான இடத்தைப் பிடித்து, கம்பளத்தை விரித்து அதில் இரத்தினங்களைப் பரப்பி இருவரும் வியாபாரம் செய்தனர்.

புதிய இரத்தின வியாபாரிகள் அந்த நகரத்திற்கு வந்திருக்கிறார்கள் என்று செய்தி அறிந்த மக்கள் ஏராளமாக வந்து இருவரையும் மொய்த்துக் கொண்டனர். தகவல் அறிந்த முத்துமாணிக்கம் செட்டியும், அங்கு வந்து புதிய வியாபாரிகளிடம் தன்னை அறிமுகம் செய்து கொண்டார்.

தாங்கள் இருவரும் காஞ்சிபுரத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் அங்கு பிரபலமான இரத்தின வியாபாரி தனபால் செட்டியின் புதல்வர்கள் என்றும் முத்துமாணிக்கம் செட்டியிடம் கூறினார்கள். பட்டி "இவர் என்னுடைய அண்ணன் நாங்கள் பல ஊர்களுக்கும் சென்று இரத்தின வியாபாரம் செய்து வருகிறோம். அத்துடன் எனது அண்ணனுக்கு ஏற்ற ஒரு பெண்ணையும் தேர்ந்தெடுத்து திருமணம் முடித்து வைப்பதும் எமது நோக்கமாகும். இந்த ஊரில் கூட எங்களுடைய செட்டி வம்சத்தில் ஏற்ற ஒரு பெண் கிடைத்தால் அவளையே இவருக்கு மணமுடித்து வைக்கலாம் என்று கருதுகிறேன்" என்று கூறினார்.

இவ்வாறு பட்டி கூறிய கருத்துக்களைக் கேட்ட முத்துமாணிக்கம் செட்டி, அவர்கள் இருவரும் தங்களுடன் கொண்டு வந்திருந்த இரத்தினங்களையும், நன்றாக அவதானித்து விட்டு, 'இவர்கள் உண்மையிலேயே மிக் வசதி படைத்த செட்டி வம்ச வியாபாரிகளாகத்தான் இருக்க வேண்டும்' என்று முடிவு கட்டினார். அவர்கள் இருவரும் தன்னுடைய விருந்தினர் மாளிகையில் வந்து தங்கியிருந்து வியாபாரத்தைத் தொடரலாம் என்று கூறியதுடன் அன்றிரவு உணவருந்துவதற்கு தன்னுடைய இருப்பிடத்திற்கே வருமாறு அழைப்பு விடுத்தார்.

விக்கிரமாதித்த மன்னரும் அமைச்சர் பட்டியும் முத்து மாணிக்கம் செட்டியின் அழைப்பை ஏற்றுக் கொண்டனர். அன்றிரவு முத்துமாணிக்கம் செட்டியாரின் விருந்துக்குச் சென்றபோது செட்டியின் இரு புதல்விகளான முத்து நாயகியும், பவளக் கொடியும் உணவு பரிமாறினார்கள். அப்போது விக்கிரமாதித்தனின் பார்வை தனது இளையமகள் பவளக் கொடியின்மீது படர்வதை முத்துமாணிக்கம் செட்டி நன்றாக அவதானித்தார். விருந்து முடிந்து அவர்கள் இருவரும் ஓய்வெடுக்கச் சென்ற பின்னர் தனது இளைய மகளை அழைத்து செட்டி வேடத்ததுடன் வந்திருந்த விக்கரமாதித்த மன்னரைக் குறிப்பிட்டு அவளுடைய விருப்பத்தைக் கேட்டறிந்தார்.

(தொடரும்)

# காதில பூ கந்தசாமி

கீழுள்ள சத்தியக் கடதாசியில் கண்ணை மூடிக் கொண்டு கையெழுத்திட்ட பின்னர்தான் நீங்கள் மேற்கொண்டு வாசிக்க அனுமதி பெற்றவர்களாவீர்கள். அதனை வெட்டி. அல்லது போட்டோ பிரதி செய்து 'காதில பூ கந்தசாமி' என்ற தலைப்பில் தினமுரசுக்கு அனுப்புவோர் அபிமான வாசகர் போட்டியில் கலந்து கொள்ளும் தகுதியைப் பெறுவீர்கள். விபரம் கீழே.

### சத்தியக் கடதாசி:

நோட்டீஸ் பலகையிலுள்ள காதில பூ கந்தசாமியின் சத்திய வாக்கியத்தைத் தெளிவாகப் புரிந்துகொண்டு, எனக்குச் சுயமாகச் சிந்திக்கும் உரிமை இல்லையென ஏற்றுக்கொண்டு, அவர் கூறுகின்ற அத்தனை பொய்களையும் எள்ளளவு சந்தேகமுமின்றி நம்புவேன், அதைத் தவிர வேறொன்றையும் நம்பமாட்டேன், இப்படி நம்புவதன் விளைவுகளுக்கு நானே பொறுப்பாளியென சுய நினைவுடன் இத்தால் நான் உறுதியளிக்கிறேன்.

திகதி:............... பெயர்:...................... ஒப்பம்:...................



நோட்டீஸ் பலகை

நான் சொல்வதெல்லாம் பொய். பொய்யைத் தவிர வேறொன்றுமில்லை

*-காதில பூ கந்தசாமி*

**அபிமான வாசகர் போட்டியில் பத்தாவது:**
**இம்முறை தேர்தல் வாக்குறுதிகளில் அதிகளவு வயிறு குலுங்கச் சிரிக்க வைத்த ஷோக் எது? முடிவுத் திகதி டிசம்பர் 31**

**வ**ணக்கமுங்கோ! கொஞ்சநாளா என்னை இந்தப் பக்கம் காணயில்லையெண்டு பாக்கிறியலே? அதுபாருங்கோ உந்த இலெக்ஷன் முசுப்பாத்தியளை ஒருக்காச் சுத்திப் பார்த்திட்டு வந்தநான். குறையில்லை. நல்லாத்தான் நடத்தியிருக்கிறியள் இலெக்ஷன. ரெண்டாயிரக்கணக்கான வன்முறைகளை நடத்தி 225 பேரைப் பாராளுமன்றம் அனுப்பியிருக்கிறியள். கிறிக்கெட்டுக்குப் பிறகு இலங்கை செய்த உலக சாதனை இதுவாத்தான் இருக்கும். மெடல் வாங்கிக் குத்திக்கொள்ளத்தான் வேணும். எங்கட கட்சிகள் விட்ட தேர்தல் விஞ்ஞாபனங்களையெல்லாம் நடைமுறைப் படுத்தினால் போதும் நாட்டில ஒரு பிரச்சனையும் இருக்காது கண்டியளோ. இதில எனக்குப் பிடிச்ச சந்தோஷமான விஷயம் எங்கட மகேஸ்வரன் அண்ணை சொன்ன வாக்குறுதிதான். தாங்கள் பதவிக்கு வந்து 20 நாளில யாழ்ப்பாணத்தில இருந்து இராணுவத்தை வெளியேற்றிவாரெண்டும் 40 நாளில யாழ்ப்பாணத்துக்கான தரைப்பாதை திறப்பாரெண்டும் நாள்கெடு குறிச்சுச் சுண்டிச் சுண்டி விட்டாரே வாக்குறுதிகள.... யாரால ஏலும் கேக்கிறன்? உண்மையில எனக்கு உச்சி முதல் உள்ளங்கால் வரை அப்பிடியே குளிர்ந்து போய். என்ர வோட்டு, என்ர குடும்பத்திண்ட வோட்டுத் தொடக்கம், வெளிநாட்டுக்குப் போன அண்ணன் தம்பி, சொந்தக்காரர், செத்துப் போன பாட்டா பாட்டி, எல்லாற்ற வோட்டுமாச் சேர்த்து ஒரு 25 வாக்காளர் அட்டைகள அப்பிடியே அள்ளிக் குடுத்தனான் அவையிட்ட-எப்படியெண்டாலும் உந்த வாக்குறுதிகளச் செய்து தாருங்கோ எண்டு சொல்லி. அப்பவும் கேட்டனான், அடத் தம்பியவை, இல்லாத வோட்டுகளைக் கொண்டு போய் நீங்கள் வைச்சுப் போடுங்கோ. ஆனால் இருக்கிற வோட்டுகளை நாங்களே போட்டுத் தாறம் விடுங்களன் எண்டு.

அதுக்கு அவை சொல்லிச்சினம். "இல்லையண்ணை உங்களுக்கு ஏன் வீண் சிரமம்? சனம் இனிமேல் சிரமப் படக்கூடாதெண்டதுக்குத் தான் நாங்களே இலெக்ஷன் கேக்கிறம். இலெக்ஷனண்டைக்குச் சிலவேளை மழைகிளை அடிக்கலாம். உங்களுக்கும் காச்சல் கீச்சல் பிடிக்கலாம். எல்லாத்தையும் விட மற்றக் கட்சிக்காரன் வந்து அதையிதைக் கதைச்சு உங்களைக்கூட மனம்மாத்திப் போடலாம். அதால கையோட உங்கட வோட்டுகளையும் சேத்துத் தந்திடுங்கோ, நாங்கள் சிந்தாமல் சிதறாமல் எல்லாத்தையும் போடுவிக்கிறம். கவலைப் படாதேங்கோ" எண்டாங்கள். நானும் பின்னப் பாத்தன் அவை சொன்னது உண்மைதான். என்ர பாவிமனம் சொல்லுக் கேளாது. ஒரு கால்ப்போத்தல் அடிச்சால் தலைகீழா மாறி நிக்கும். நிதானமா இருக்கக்கையே நல்ல காரியங்களைச் செய்து போட வேணுமெண்டு அந்தப்படியே எடுத்து வெத்தில பாக்கு வைக்காமலே என்ர வாக்கையும் சேத்துத் தத்தம் பண்ணிக் குடுத்திட்டன். பிறகுதான் பின்வீட்டுக்காரன் வந்து சொன்னான். "மடைவேலை செய்திட்டீரே, நான் ஒரு வோட்டுக்கு நூறு ரூபாப்படி எழுபத்தைஞ்சு வோட்டுச் சேத்துக் குடுத்தனான். உம்மட 25ஐயும் தந்திருந்தால் 50 ரூபாப்படி 1250 ரூபாவை உம்மட கையுக்க பொத்தியிருப்பனெல்லே" யெண்டான். எனக்கும் அடிமனசில கொஞ்சம் கவலைதான்.

ஆயிரம் ரூபாயெண்டு பாத்தாலும் ஒரு ஐஞ்சு போத்தல் காசாச்சே! மனசில நொந்தது வெளியில காட்டாமல் நானும் நல்ல காட்டமாப் பதில் சொல்லி அனுப்பி வைச்சன் ஆளை. 'அடக் கேவலம்கெட்ட பிழைப்பெல்லே நடத்திறீர்? காசு முக்கியமோ, றோட்டத்திறக்கிறதும் ஆமிக்காறனை வெளியேற்றிறதும் முக்கியமோ? இப்பிடிக் காசுக்கு வாக்கு வித்தால் காரியம் நடக்கிறது எப்படி? கள்ள வோட்டப் போட்டாலும் நல்ல மனசோட போடவேணுமைசே! நீரும் ஒரு ஆளே? நாளைக்கு றோட்டுத் திறந்தப்பிறகு எந்த முகத்தோட கொழும்பு பஸ் ஏறப் போறீரெண்டு பாக்கிறன். போய்ட்டு வாரும்" எண்டு ஏச்சுக் குடுத்து அனுப்பிப் போட்டுத்தான் விட்டனான்.

எது எப்படியோ, காசு தவறிப் போனாலும் காரியம் நல்ல நடந்து முடிஞ்சிட்டுது எண்டதில எனக்கும் சந்தோஷம் உங்களுக்கும் சந்தோஷம். தேர்தல் முடிஞ்சு நம்மாள் எம்பியா வந்ததோட அவர் சொன்னாப் போலவே அவற்றை கட்சி ஆட்சியப் பிடிச்சு அவர் அமைச்சராயும் வந்திட்டார். இனிப் பிரச்சனையில்லை. இன்னும் 20 நாளில யாழ்ப்பாணத்தில இருந்து ஆமி வெளியேறிடும். 40 நாளில யாழ்ப்பாணத் தரைப்பாதை திறந்திடும். அதாவது டிசம்பர் 19ம் திகதி பாராளுமன்றம் கூடின நாள் தொடக்கம் கைவிரலை ஒவ்வொண்டா மடிச்சுக்கொண்டு வர எண்ணி இருபது நாளில,- அதாவது ஜனவரி 8ம் திகதி ஆமி போயிடும். எல்லாச் செக் பொயிண்டும் கிளியராகி, நாங்கள் பஸ்ஸால இறங்காமலே யாழ்ப்பாண டவுனுக்கப் போய் வரலாம். 40 நாள் கழிய-சரியா ஜனவரி 28ம் திகதியோட யாழ்ப்பாணக் கொழும்புப் பாதையும் திறந்திட்டுதெண்டால் கண்டியலோ, நாங்களிந்த வெங்காயம் மிளகாய் எல்லாத்தையும் அள்ளிக் கட்டி விடிய லொறியேத்தினால் நேரப் பெற்றா மார்க்கெட்டுக்குப் போய் வித்திட்டு பின்னேரமே திரும்பிடலாம் யாழ்ப்பாணத்துக்கு! இதுக்கு மேல என்ன வேணும் மனிஷனுக்கு? டோண்ட் வொரி கண்டியளோ. அவற்ர வார்த்தைக்கு நான் கறண்டி.

ஆள் இப்ப சாதாரணமானவரில்லை. அமைச்சராயும் விட்டார். அவற்றை கட்சியேதான் ஆட்சிக்கும் வந்திருக்கு. இதுக்கு மேலயும் சொன்னதைச் செய்யாட்டி அரசியல்வாதியா ஊரில உலகத்தில முகம்காட்ட ஏலுமோ." அதாலதான் சொல்லுறன், எண்ணிக்கொண்டே வாருங்கோ நாளை. கலெண்டர் இருந்தால் 2002 ஜனவரியில 8ம் 28ம் திகதிகளை சிவத்தப்பேனையால பெரிசாய்க் குறிச்சு வைச்சிட்டு இருங்கோ. அவர் ஒருதரம் சொன்னால் நூறுதரம் சொன்னமாதிரி. நாங்கள் அவருக்கு ஒரு கள்ள வோட்டுப் போட்டால் நூறு கள்ளவோட்டுப் போட்டமாதிரி. ஆனபடியாத்தான் நான் அசைக்க ஏலாத நம்பிக்கையோட இருக்கிறன். அந்த மகேஸ்வரக் கடவுளே வரம் தந்த மாதிரி அவர் சொன்ன முதலாவது வாக்குறுதி நிறைவேறும் நாள் கனநாள் இல்லை ஜனவரி 8ம் திகதி எல்லோரும் தேங்காய் உடைச்சு திருவிழாக் கொண்டாட ரெடியாய் இருங்கோ. நான்தான் எங்கதன்னும் ஓடி ஒளிஞ்சாலும் ஐயா அமைச்சரா இங்கதான் இருப்பார். சொன்னது நடக்காட்டால் நாங்கள் நேரயே போய்க் கேக்கலாம். என்னையும் உங்கட வாசலுக்கு வந்து வோட்டுக் கேட்டவையையும் தேடித் திரியாதேங்கோ. வெயிட் அன்ட் ஸீ!

Regd. as a News Paper at the G.P.O. (QD/38/NEWS/2001)




# தொன்மை

அதிக அளவிலான இந்து ஆலயங்கள் இந்தியாவில் காணப்பட்ட போதும் உலகிலேயே மிகப் பெரிய இந்துக்கோவில் கம்போடியாவில்தான் இருக்கின்றது. கம்போடிய நாட்டின் அங்கோர் என்ற இடத்தில் உள்ள ஆலயமே உலகில் உள்ள மிகப் பெரும் கோவிலாக கருதப்படுகின்றது. சுமார் 600 ஆண்டுகள் பழமைவாய்ந்ததாகக் கருதப்படும் இந்த கோவில் வனாந்திரப் பிரதேசமொன்றில் இருந்து கடந்த இரண்டு தசாப்தங்களுக்கு முன்னர்தான் கண்டு பிடிக்கப்பட்டது. 1989ம் ஆண்டு கம்போடியாவில் இருந்து வியட்நாம் வாபஸ்பெறும் வரையில் அங்கு கடைபிடிக்கப்பட்டு வந்த தீவிர கம்யூனிச சித்தாந்தம் காரணமாக பகிரங்க மத அனுஷ்டானம் தண்டனைக்குரிய குற்றமாக கருதப்பட்டதால் இவ்வாறான பல கோவில்கள் கைவிடப்பட்ட நிலையில் இருந்துவந்தன. கம்போடியாவில் பின்தங்கிய மாவட்டங்களில் இவ்வாறான மேலும் பல பாரிய கோவில்கள் காணப்படுகின்றன. இதன் அருகில் பனை மரங்களும் தென்படுகின்றன!






# உயரம்

உலகில் உள்ள மிகப்பெரிய கிறிஸ்தவ தேவஸ்தானம் வத்திகான் செனப்றா தேவாலயமாக இருந்தபோதிலும் உலகிலேயே மிக உயரமான இயேசுநாதர் சிலை பிரேஸில் நாட்டில்தான் உள்ளது. ரியோடி ஜெனிரோவில் உள்ள யேசுநாதர் சிலையின் உயரம் 100 அடி. மலைப் பாங்கான உயரிய இடமொன்றில் கண்ணைப் பறிக்கும் இயற்கை அழகுக்கு மத்தியில் இந்த சிலை நிறுவப்பட்டுள்ளது.





# ஆமை அதிசயம்

மிக மெதுவான செயற்பாட்டை ஆமையுடன் ஒப்பிடுவதுண்டு. ஆமைகளில் நடக்கும் வேகம்தான் இதற்குக் காரணம். கருங்கற்கள் சூழவுள்ள மறைவுகளிலும் செழிப்பான புதர் ஓரங்களிலும் மறைந்து வாழும் ஆமைகள் நீர் வழிந்தோடக்கூடிய மழையின் பின்னர் பார்வைக்கு தென்படும் இடங்களில் உணவுக்காக நடமாடத் தொடங்கும். ஆமைகள் தமது முட்டைகளை நிலத்துக்குக் கீழேயே இடுகின்றன. பாரிய வனாந்திரப் பரப்புகளில் ஏற்படும் காட்டுத்தீ, கடுமையான வெப்பம் போன்ற இயற்கை அநர்த்தங்களில் இருந்து பாதுகாக்கவே நிலத்தை சில அங்குலம் தோண்டி முட்டையிடுகின்றன. படத்தில் இருப்பது லியோபாட் என்ற வர்க்கத்தைச் சேர்ந்த ஆமை. ஆபிரிக்காவில் உள்ள குருஜர் தேசிய வனவிலங்கு பூங்காவில் மாத்திரமே இவ்வித ஆமைகள் காணப்படுகின்றன. உலகில் மிக அரிதாக காணக்கிடைக்கும் மூன்றுவகை ஆமை இனங்களில் இந்த லியோபாட்டும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.

## ராஜமாளிகை

பிரிட்டன் அரச பரம்பரையினரின் வின்ட்சர் மாளிகை தான் இது. தேம்ஸ் நதிக்கரையை அண்மித்ததாக அமையப்பெற்றிருக்கும் இந்த இராஜமாளிகை கடந்த 9 நூற்றாண்டு காலமாக பிரிட்டனின் ரோயல் குடும்பத்தினரின் வாசஸ்தலமாக இருந்து வந்துள்ளது. அரச வம்சத்தின் பல மன்னர்கள் இந்த மாளிகையில் வாழ்ந்து மரித்திருக்கிறார்கள். இங்கிலாந்து குடியாட்சியின் சின்னமாக விளங்கும் இதனை 1828ம் ஆண்டு ஜெவ்ரி யாட்டிங் என்ற கட்டடக்கலைஞர் ஊடாக நான்காவது ஜார்ஜ் மன்னர் நவீன மயப்படுத்தினார். காதல் உணர்வுகளை ததும்பச் செய்யக்கூடிய உலகிலே உள்ள மிகச்சிறந்த மாளிகை இதுதான் என்று வர்ணிக்கிறார் சாமுவேல் பெபிஸ் என்ற நிபுணர். அண்மைக் காலமாக பிரிட்டிஷ் அரச பரம்பரையினர் மக்களின் வரிப்பணத்தினால் அனுபவிக்கும் சொகுசு வாழ்க்கை குறித்து பலதரப்பட்ட புகார்கள் தெரிவிக்கப்படுகின்றன. பெருந்தொகைச் செலவில் பரிபாலிக்கப்படும் இந்த மாளிகை மீதும் மக்களின் கோபக்கணைகள் திரும்பியிருக்கின்றன.



## 1[வது] பிறந்தநாள் வாழ்த்து 04.12.2001



### செல்வன் கருணாகரன் ஷங்கீத்

கிளிநொச்சி இராமநாதபுரத்தைச் சேர்ந்த கருணாகரன் தவச்செல்வி தம்பதியினரின் தவப்புதல்வன் செல்வன் ஷங்கீத் தனது முதலாவது பிறந்த தினத்தை 23.12.2001 [illegible]

[illegible]

மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் முருகன் துணை கொண்டு பல்கலைகளும் கற்று பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரம் ஆண்டு நீடூழி வாழ்கவே என்று வாழ்த்துகின்றார்கள்.



இப்பத்திரிகை கொழும்பு-06, வெள்ளவத்தை, நெல்சன் பிளேஸ், 9A ஆம் இலக்கத்தில் டி.டி. என்டர்பிரைசஸ் (பிரைவேட்) லிமிடெட் ஸ்தாபனத்தால் பொரலஸ்கமுவவில் உள்ள சி.பி.டி. அச்சகத்தில் டிச.23 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.